உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு.

குரோதன ஆண்டு.

(1925-1926)

இதழாசிரியர். R. வேங்கடாசலம் பிள்ளை.

பூர்ணானந்த அச்சுக்கூடம், தஞ்சை

இதன் முதல் மலரும், ஐப்பசி, கார்த்திகை மலரின் 'சேர்க்கை' யும், திருச்சிராப்பள்ளி, இராதாகிருட்டினப் பதிப்பகத்தில் அச்சிடப் பெற்றன.

உ

கட்டுரைகள்.

ஆண்டுவிழா நிகழ்ச்சிகள்.	254
ஆளுடைநம்பிகள் திருப்பாட்டு.	353
இந்தியத்தாய் தன்மக்கட்கு உரைப்பது.	380
இளவேனிற்காலத்து இன்பமாலை.	387
ஈறு தழுவல்.	296
ஒரு குறட்பா.	429
ஒரு திருப்பாட்டிற்கு உரை.	4
ஒரு நிருபம்	420
ஒரு பெரியார் நல்லுரை.	148
ஒரு பெரு மகிழ்ச்சி.	299
ஒரு வாழ்த்து.	162
ஒரு விண்ணப்பம்.	434
ஓலோகமாதேவீச்சரக் கல்வெட்டு.	243, 283
ஓரி.	376
கடவுட் காட்சி விரி.	85
கட்டுரை எழுதல்.	306
கட்டுரைக் கோவை.	36, 100
கடிகாரம் வருமுன் காலஅளவு.	462
கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி.	335
கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி மறுப்பு.	271
கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி விளக்கம்.	370
கல்லூரி நிகழ்ச்சிகள்.	451
குடம்பை என்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயம்.	247
சங்ககாலச் சோழ அரசபரம்பரை.	6, 92, 382
சங்க நிகழ்ச்சி.	48
சர். சிவஞானமும், தமிழ்ப் பல்கலைக்கழகமும்.	400
சிலப்பதிகார நாடகத்து ஒருபகுதி.	230
சிலாசாசனம்.	89
சிறுமறை (குட்டிக்குறள்.)	418
சீத்தலைச் சாத்தனார்.	170, 278
சோமேசர் வெண்பா உரைக்குறிப்பு.	136
தமிழக வரலாறு	319, 407
தமிழர் வரன்முறை.	64
தமிழர் வீரம்.	401
தமிழ் எழுத்துக்கள்.	131, 211
தமிழ்த்தாய் வாழ்த்து.	369
தமிழ்நாட்டுக் கல்வி.	302

கட்டுரைகள்.

தமிழ்நூலாராய்ச்சிக்குக் கல்வெட்டு ஆராய்ச்சி இன்றியமையாதது 68
தமிழ்ப் பல்கலைக் கழகம் 180, 34[illegible]
தமிழ்ப்புலவருக்கு மாநிலவளாக அறிவு. 347
தமிழ்ப்பொழில் வாழ்த்து. 196
தமிழ்விடுதூதும் மொழிவரலாறும். 71
தமிழ்மொழியும் தமிழ்மக்கள் உயர்வும். 16, 49, 105
தனிச் செய்யுட்கள். 30
தனிச் செய்யுள். 87
திருக்குறள் உரையாராய்ச்சி. 179
திருத்தக்கதேவர் கவித்திறம். 215
திருப்புறம்பியத்துக் கல்வெட்டுக்கள். 155, 191
திருவள்ளுவர் நூல்நய ஆராய்ச்சி. 57
திருவாசகச் சிற்றாராய்ச்சி. 157, 225, 328
திருவாளர். 145
தெய்வப்புலமை. 75
தொல்காப்பியம். 12
நக்கீரர். 149, 199, 311, 362, 421
நமது மகிழ்ச்சி. 195
நமது பொழில். 1, 385
நற்றாயும் செவிலித்தாயும். 179
நாட்டுப்புறங்களின் கல்வியும், நாட்டாண்மைக் கழகங்களின் கடமையும். 41, 8
நிலாப்பாடம். 452
நூலாராய்ச்சி. 187
பாரத மகிமை. 35, 159
புகழுடம்பு பெற்றவர். 372
பேராசிரியர் உரைக்குறிப்பு. 123, 163
மகிழ்ச்சி. 295
மத்தியகாலச் சோழர் வரலாறு. 438
மழவர் வரலாறு. 32
மாணவர் விடைகள். 186
முன்னுரை.
முன்னுரைக் குறிப்பு. 287
மெய்ப்பொருள் நாயனர். 139
மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை. 194
வள்ளுவர் கலித்துறை. 431
வாய்மை. 78, 79

கட்டுரை எழுதிய திருவாளர்கள்

L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ் விரிவுரையாளர், வடமொழிக் கல்லூரி, திருவையாறு.

ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், தமிழ் விரிவுரையாளர், ஈபர்கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

சோமசுந்தர தேசிகரவர்கள் (இலக்கண விளக்கப் பரம்பரை.) தலைமைத் தமிழாசிரியர், உயர்தரப் பள்ளிக்கூடம், நன்னிலம்.

T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள், வாணாதுறை உயர்தரப் பள்ளிக்கூடம், கும்பகோணம்.

ஊ. சா. வேங்கடராமையரவர்கள், தமிழாசிரியர், நகர உயர்தரப் பள்ளிக்கூடம், கும்பகோணம்.

சாமி. சிதம்பர உடையார் அவர்கள், தமிழாசிரியர், அரசர்மடம்.

அ. சிவப்பிரகாசம் பிள்ளையவர்கள், தமிழ் விரிவுரையாளர், சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

அ. பூவராகம் பிள்ளையவர்கள், தலைமைத் தமிழாசிரியர், மேலைச்சிவபுரி.

வீ. உலகவூழியர் அவர்கள், தமிழாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சாவூர்.

M. முருகைய வாத்தியாரவர்கள், தலைமையாசிரியர், இளங்காடு.

அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள், தமிழ் விரிவுரையாளர், அரசினர் கல்லூரி, கோயமுத்தூர்.

கந்தசாமியாரவர்கள், தலைமைத் தமிழாசிரியர், உயர்தரப் பள்ளிக்கூடம், சோழவந்தான்.

மணி. திருநாவுக்கரசுமுதலியார் அவர்கள், தமிழ் விரிவுரையாளர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

அ. கோபாலையர் அவர்கள், தமிழ் விரிவுரையாளர், நே. கி. கல்லூரி, அடையாறு.

...ம்பர முத்தரையர் அவர்கள், தமிழாசிரியர், உயர்தரப் ...ள்ளிக்கூடம், அரியலூர்.

...கவனம் வெப்பிரகாசர் அவர்கள், தமிழாசிரியர், காவேரிப்பட்டினம்.

...பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியாரவர்கள், மகிபாலன்பட்டி.

அ. வரதநஞ்சையபிள்ளையவர்கள், தமிழ்ப்புலவர், தோரமங்கலம், சலகண்டபுரம்.

தி. க. உலகநாதபிள்ளையவர்கள், தமிழறிஞர், திருவனந்தபுரம்.

த. வே. இரத்தினசாமிப் பிள்ளையவர்கள், நாட்டாண்மைக் கழகப்பள்ளி மேற்பார்வையாளர், தஞ்சாவூர்.

மு. கோவிந்தராசநாட்டாரவர்கள், B. A. L. T. தலைமையாசிரியர், அரசர்மடம்.

E. S. வரதராசஐயரவர்கள், B. A. தமிழறிஞர், திருச்சிராப்பள்ளி,

S. நடேசபிள்ளையவர்கள், B. A. B. L. தலைவர், பரமேசுவரி கல்லூரி, யாழ்ப்பாணம்.

கண்ணபுரத்துக்கவுணியன் வெண்ணெய்க்கண்ணனூர், தமிழ்ப் பண்டிதர், யாழ்ப்பாணம்.

திருநீலகண்டசுவாமிகள், கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சாவூர்.

இராவ்சாகிப், சு. வி. கனகசபைப்பிள்ளையவர்கள், B. A. இதழாசிரியர், புதுயுகம்.

வ. பழ. சா. சாமிநாதன் செட்டியாரவர்கள், தலைவர், சன்மார்க்கசபை; மேலைச்சிவபுரி,

சி. வேதாசலம்பிள்ளையவர்கள், B. A. B. L. மாநேசர், மாநாட்டாண்மைக்கழகம், தஞ்சாவூர்.

மு. இராகவையங்காரவர்கள், தமிழ் வித்துவான், தமிழ்- 'லெக்சிகன் ஆபிசு' சென்னை.

உமா. பஞ்சாபிகேசன் அவர்கள், மாணவர், கருந்திட்டைக்குடி.

மறைமலையடிகள், பொதுநிலைக்கழகத்தலைவர், பல்லாவரம்.

இதழாசிரியர் (R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள்) தலைமைத் தமிழாசிரியர், பேதுரு உயர்தரக் கல்லூரி, தஞ்சாவூர்.

ஆகவே, அச்செய்யுளின் உரையை எழுதவே இப்பாட்டிற்கு உரை இனிது விளங்குமாகலின் அதனை இங்கு எழுதுவேன்.

காரண மென்னேன் றறிகின்றி லேங்கட லும்மலையு
மாரண மும்மகி லாண்டமு மண்டரண் டம்போதிந்த
பூரண மும்மக முஞ்சக மும்புற மும்புறத்து
வாரண மும்பேண் பிணிவிணை யாடு மணற்சிற்றிலே.

(சித்தராந்தாதி—மூன்றாம் செய்யுள்.)

என்றது—எல்லையற்ற அகிலாண்டங்களில் அங்கங்கே தோற்றப்பட்ட இலவணாதி சத்த சமுத்திரங்களும், மேருவாதி அட்டகுல பர்வதங்களும், வேதாகம புராண சாத்திரங்களும், அகிலாண்டமான பூமி அந்தரிட்சை சொர்க்கங்களும், இருபத்தெட்டுக் கோடி நரகங்களும், அண்டாண்ட பகிரண்டங்களைப் பொதிந்து சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவிற் பெரும்பாழ் முதலான எழுவகையான பரிபூரணங்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளும், பதினெண் கணங்களும், நர மிருக பட்சி தாவரங்களும், பிரமபேதம், விஷ்ணுபேதம், உருத்திரபேதம், மகேசபேதம், சதாசிவபேதம், விந்துபேதம், நாதபேதம், எல்லையற்ற சத்திபேதம், அறிவின் பேதம், அறியாமையின் பேதம், மாயை மகாமாயையின் பேதம், பசுகாண பேதம், சிவகாணபேதம் என.....வகையாக எண்ணப்பட்ட சேதனசேதனங்கள் பொருந்தின பேத ரூபாங்கமும், எழுவகை யுயிர்த்தோற்றத்துக்குக் கருவான குடல் முட்டை விதை வேர்வு இவைகளிற் றோற்றப்பட்ட நால்வகைச் சகமும், ஆகவநீயம், காருகபத்தியம், தக்கணாக்கினி, காலாக்கினி, மூலாக்கினி, கோபாக்கினி, உதராக்கினி, வடவாமுகாக்கினி என்னும் புகை யெட்டும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் போக்கு எட்டும், சத்தாதி பஞ்சவிடயம் மனம் புத்தி அகங்காரம் என்னும் புலன் எட்டும், அதல விதல சுதல நிராதல தராதல மகாதல பாதல அகிலதல மென்னும் பூதலங்கள் எட்டும், கற்பக தரு வைந்தும் சுரபி சங்கநிதி பதுமநிதி என்னும் பொழிகள் எட்டும், இறையன்றிப், பூலோக புவலோக முதலான எழுலகங்களும் சிவ லோகமென்று மேலே தோற்றப்பட்ட உலகமுமாம். இயம நியம அதன பிராணயாம பிரத்தியாகார தாரணதியான சமாதியென்னும் தகையான யோகங்கள் எட்டும் அட்டமாநாகம் என்னும் காப்பு எட்

டும், இந்திரன் முதலான காட்சி யெட்டும், காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மார்ச்சரியம் சூனியம் இடும்பை என்னும் சேவடியணைந்தார் களை எட்டும், வீரம் அச்சம் இழிவு வியப்பு காமம் அவலம் ரவுத்திரம் நகை என்னும் நகை எட்டும், வாரம் நாள் பக்கம் ராசி யோகம் கரணம் காலஓரை பஞ்சபட்சி என்னும் நாள் எட்டும், சமயம் விசேடம் நிருவாணம் சாம்பவம் அபிடேகம் ஆதாரம் நிராதாரம் மீதானம் என்னும் நன்மை எட்டும், ஆன்மஞானம் பரமஞானம் சிவஞானம் உண்மைஞானம் மெஞ்ஞானம் திருஞானம் சத்தியஞானம் ஆனந்தஞானம் என்னும் மலர்கள் எட்டும், கிழக்கு முதலான திகை எட்டும் என்று எண்ணப்பட்ட இதற்கு உதாரணம் திருப்பாட்டு:

புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழிக ளெட்டும்
கலையெட்டும் காப்பெட்டும் காட்சி யெட்டுங்
கழற்சே வடியணைந்தார் களைக ளெட்டும்
நகையெட்டு நாளெட்டு நன்மை யெட்டு
நலஞ்சிறந்தார் மனத்தகத்துண் மலர்க ளெட்டுந்
திகையெட்டுந் திரிப்பதற்கு முன்னே பின்னே
திருவாரூர்க் கோயிலாக் கொண்ட வாறே.

இந்தத் திருப்பாட்டின்படியுள்ள புறப்பொருளும், புறமாய அண்ட கோடிகளை இடைவிடாமற் றாங்கிநிற்கும் வேழக்குழாங்களும் இவையெல்லா மொரு பெண்பிள்ளையாகிய தேவி சிற்றிலிழைத்து விளையாடுந் திற மேது காரண மென்னென்றறிகின்றிலே மென்று தம்மிலே அதிசயித்து ஆறி யெழுந்தருளி இருந்தார். எ-று.

பண்டிதர். L. உலகநாத பிள்ளை.

உ

சிவமயம்.

சங்ககாலச் சோழ அரச பரம்பரை.

ஆதிச் சோழர்கள் பரம்பரையைத் திரட்டித் தொகுத்து விரித்தெழுதுவதற்குப் போதிய சாதனங்கள் இக்காலத்து இலவாயின. சோழபரம்பரையை ஒருவாறு அறியச் சாதனமாயிருப்பன

அகநானூறு, புறநானூறு, நற்றிணை முதலிய தொகை நூல்களே. அவைகளும் முழுநூலும் பயன்படாமல், அந்நூல்களுட் சில பல பகுதியினவே சோழவரசர்களைக் குறிப்பனவாய்ப் பயன்படுவன வாகின்றன. அவையுந் தொடர்பைக் காட்டக் கூடியன வல்ல.

புராணங்களிலே பல சோழர் பெயர் காணப்படினும், அவைகளும் ஒன்றற்கொன்று தொடர்பும் இயைபும் உடையனவாகக் காணப்படவில்லை. செவ்வந்திப் புராணமான திரிசிராப்பள்ளிப் புராணத்திலே சோழர்களது ஐம்பதாவது தலைமுறையிலே தோன்றிய கரிகாலன் வரலாறு கூறப்படுகிறது. ஐயாறு, இடைமருது, புறம்பயம், நாகைக்காரோணம் முதலான திருப்பதிகளின் புராணங்களிலும் பல சோழ மன்னர் பெயர் கேட்கப்படுகின்றன. பாகவதத்தில் சூரிய குலத்தரசர் பெயர்வரிசை காணப்படுகிறது. நாமறிந்தவர்களில் முசுகுந்தன், சிபி, கரந்தமன் (காந்தமன் அன்று) முதலாயினார் பேர்களைப் பார்க்கிறோம். ஆயினும் இவை இயைபுடையனவாகக் காணப்படுதலில்லை. இக்காலத்தில் அதாவது இரண்டாயிரம் வருடங்கட்குப் பிற்பட்டு ஏறக்குறைய ஆயிரவருடங்கட்கு முற்பட்ட காலங்களிற் றோன்றிய செப்புப் பட்டையங்களிற் சில தலைமுறை கூறப்படுகின்றன. அவை கீர்த்தி வாய்ந்த அரும்பெருஞ் செயல் செய்த பெரியார் பெயரைக் குறிப்பனவேயன்றித் தொடர்புடையனவாகக் காணப்படவில்லை. ஆகவே இவைகளை முறைப்படுத்தி எழுத முயலுவது முடவன் கொம்புத்தேனுக் கண்ணுற்ற கதையாகும். ஆயினும் ஆசை வெட்க மறியாதென்னும் பழமொழி கொண்டு ஒருவாறு பிணைக்க முயலுவேன்.

தமிழர் என்று ஒரு சாதியினர் வாழ்ந்தனரென்றும், தமிழ் என்று மொழி யொன்றுண்டென்றும் ஒப்புக்கொள்ள மனமிரங்காத நம நாட்டிலே சிறு ஆண்டுகட்கு முன்னர்தான் அவ்வாறு ஒரு மொழியுமுண்டு; கல்வி வல்லாளரு மிருந்தனர்; பல அரசர்களும் செங்கோல் கோடாது, நெறிபிறழாது, மிக்க வலியோடு ஆண்டனர் என்று உலகுக்கு எடுத்துக்காட்டி யொப்புக்கொள்ளுமாறு செய்தவரும், இப்பொழுது கிடைக்கும் அச்சேறிய நூல்கள் இல்லாத காலத்தில் அரும் பெரும் பாடுபட்டவருமாவார் ஓலைநாயகம் (தபால் சூப்ரின்டெண்டெண்டு) வகித்த-காலஞ்சென்ற-வே. கனகசபைப் பிள்ளை யவர்கள். அவர்கள் ஆங்கில பாஷையில் இற்றைக்கு

ஆயிரத் தெண்ணூறு வருடங்கட்கு முந்திய தமிழர் (The Tamils 1800 years ago) என்று முதலில் அக்காலத்தில் சங்கரன் நாயர் (இப்பொழுது சர்) பத்திராதிபத்தியத்தில் நடந்த சென்னையின் உற்று நோக்கு என்று பொருள்படும் மட்ராஸ் ரிவியூ என்ற முத் திங்கள் வெளியீட்டில் எழுதினார்கள். பின்னர் அவற்றைத் திரட்டிப் புத்தகமாக வெளியிட்டனர். அதுவே தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சிக்கு அடிப்படையாயிற்று.

கனகசபைப் பிள்ளையவர்கள் சோழர்களது தலைமுறையைப் பின் வருமாறு குறிப்பார்கள் :—

உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி.
|
கரிகாற் பெருவளத்தானான
பெருந்திருமா வளவன்
|
நலங்கிள்ளி சேட்சென்னி
|
குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

இளஞ்சேட் சென்னியினது புதல்வனே கரிகாலனென்பது அவனைப் பாடிய பாடல்களினின்று அறியலாகும். இவன் ஒரு பேரரச னென்பதும், பட்டினப் பாலை முதலிய பாடல்களைக் கொண் டவ னென்பதும் யாவரும் அறிந்தவே. இவனுக்குப்பின் நலங் கிள்ளி சேட்சென்னி பட்டத்துக்கு வந்தானென்று கூறுவதற்குற்ற ஆதாரமொன்றும் கண்டும் கேட்டுமிலோம். கரிகாலனது சரிதத்தை விரித்தெழுதிய பண்டிதர் திரு. உலகநாதபிள்ளையவர்கள் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என மூன்று பிள்ளைகளும், ஆதிமந்தி யாிர் என ஒரு நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியலாரும் உண்டு என்பர். அவர்கள் கூற்றுக்கு ஆதாரம் செந்தமிழ் இரண்டாந் தொகு தியில் அப்பொழுது பத்திராசிரியரா யிருந்த சேதுநாட்டு வித்வான் திருமிகு ரா. ராகவையங்கார் எழுதியதே போலும். இப்படிக்கின்றி யூரென்பது உறையூரென்று சொல்லப்பட்ட நகரியின் கண்ணே ஒரு சோழ பரம்பரை யுண்டென்றும், காவிரி கடலொடு கலக்கும் துறைமுகமான புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு சோழ பரம்பரை யுண்டென்றும், கூறிப் பின்வரும் தலைமுறையும் காட்டுவர் சேரன் செங்குட்டுவன் ஆசிரியர்.

உறந்தைச் சோழர்	புகார்ச் சோழர்
மணக்கிள்ளி	கரிகாலன்
|	|
நெடுங்கிள்ளி	கிள்ளிவளவன்
|	|
இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி	சேட்சென்னி நலங்கிள்ளி

இவர்கள் கொண்டபடி உறையூர்ச் சோழர், புகார்ச் சோழர் என இரு கிளையினர் இல்லையென்றும், சோழன் மணக்கிள்ளி என்பது சோணை மணக்கிள்ளி என்று இருக்கவேண்டும் என்றும் இக்கொள்கைகள் எலாவென்றும் காட்டி வீழ்த்தப்பட்டன (செந்தமிழ்). சென்னைப் பல்கலைக் கழகச் சரித்திரப் பேராசிரியர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் தமது 'புராதன இந்தியா'வில் கரிகாலன் சரித்திரசம்பந்த முடையவனென்றும், அவனது பாட்டன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி என்றும், அவனூ மகன் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி என்றுங் கூறுவர். வேற் பஃறடக்கைப் பெருநற்கிள்ளி என்று கொண்டதன் காரணம் அவன் குடக்கோ நெடுஞ்சேரல் ஆதனோடு பொருது ஆங்கழுத்தன்ன உயிர் விட்டமையேயாம். (Ancient India—p. 92),

இவர்கள் கரிகாலனுக்குப் பின்னுண்டவர்களைக் குறித்ததாகத் தெரியவில்லை. கனகசபைப் பிள்ளை கூறியபடி கரிகாலனுக்குப் பின் ஆண்டவன் நலங்கிள்ளி சேட்சென்னிதானு வென்று ஆராயப்புகுவோமாயின், புறநானூறு ஒருவாறு நமக்கு உதவிசெய்கிறது. புறநானூற்றுச் செய்யுள் தொகுப்புமுறை ஒரு வரிசையைக் காட்டுவதாகத் தெரிகிறது. அதன் தொகுப்புமுறை ஒவ்வாதனவென்று தள்ளுமுன் அதனை அற ஆராய்ச்சிசெய்வது ஒருவாறு நன்மையைத் தரக்கூடும். எக்காரியத்தையும் முற்ற ஆராய்ந்து தெளிதலே முறையாகும். இவ்வாறு காண்போமாயின் சோழர்களில் முதலில் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியும், இரண்டாவது சோழன் கரிகாற் பெருவளத்தானும், சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியும், பின்னர் சோழன் முடித்தலைக்கோ பெருநற்கிள்ளியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் காணப்பட, அதன் பின்னரே நலங்கிள்ளி காணப்படுகிறான். இவர்களுள்ளே சோழன் நெய்

தலங் கானல் இளஞ்சேட்சென்னியும், பின்னர்ச் சோழன் முடித் தலைக்கோ பெருநற்கிள்ளியும், சோழன் இராசசூயம் வேட்ட பெரு நற்கிள்ளியும் காணப்பட்ட பின்னரே சோழன் நலங்கிள்ளி காணப் படுகிறான். சோழன் செய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்பான் பெயரைக்கொண்டே அரசு கட்டிலேறியவன்றென்று புலனாகின் றது. இளமை என்பது அரசரின் இளவல் என்று பொருள் படும்; இளங்கோ, இளவரசன் என்பன போன்றே கொள்ளற்பாற்று. கரி காலனது தந்தையான உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியே இதற்கொரு இலக்காய் நிற்கின்றான்.

இவனுக்கு அடுத்துக்காணப்படுபவன் முடித்தலைக்கோ பெரு நற்கிள்ளி. இவன் முடித்தலை என்ற அடைமொழியினாலே அரசு கட்டிலேறினவனென்று பொருள்படும். முடித்த தலையை யுடையவ னென்றபொருள் பயவாதோவெனின், அது அசம்பாவிதமான வினா வென மறுக்க. இவ்வேறு கரிகாலனுக்குப் பின்னர்க் காணப்படு கிறான். இவன் கரிகாலனை யடுத்தவன் என்று கொள்வதற்குப் புறச் சான்றுகள் வேறுண்டாவென ஆராய்வது கடனாம்.

புறநானூறு எழு (75)வது செய்யுளில் சோழன் நலங்கிள்ளி தான்பெற்ற அரசுரிமை "மூத்தோர் மூத்தோரைக் கூற்றம் உய்த்து எனத் [தம்] பால் தாவந்த தாயம்" என்கின்றான். இதனை விவரித்துச் சொல்வோமானால் இவ்வரசாட்சி தங்குடியின் முதியோரை முதி யோரை எமன் கொள்ள விதியினாலே எனக்குக் கிடைக்கவேண்டிய தாயிற்று என்பதாம். இதனாலே இவனுக்குமுன்னர் ஆண்டவர் பலர் இல்லாவிட்டாலும் ஒருவர் உண்டென ஒருவாறு ஊகிக்கலாம். முதி யோரை என ஒரு சொல் உண்டானால் முன்னோர் என்பதைக் குறிக் கும். அப்படியின்றி, தனக்குக் கிடைக்கவேண்டிய வழியில் முன் னோர் ஒருவர் நடுவிலுள்ளாரைக் குறிப்பிடவே இது மறுபடி உரைக் கப்பட்டதென்று கொள்ளவேண்டியிருக்கிறது. இதற்குச் சான்றாக 'மான்மகன் மகன் மகன்' என்ற கந்தபுராணச்சுருக்க அடிகளைக்காட் டலாம்.

இஃதன்றிச் சோழன் கரிகாற்பெருவளத்தானோடு பெருஞ்சே ரல் ஆதன், வெண்ணி என்னும் ஊர்ப்புறத்தே பொருது புண்பட்டு வடக்கிருந்தான் என்று கூறும் புறநானூறு.[1] இச்செய்தியைப்

1. புறம் 65.

பொருநாற்றுப்படை என்னுநூல் சேர பாண்டியர்கள் இருவரும் பொருது களத்தவிந்தனர் என்று கூறும்.[2] அகநானூற்றிலோ சேர னும் பாண்டியனும் பதினொருவேளிரும் இவனொடு பொருது தோற் றனர் என்று காணப்படும்.[3] இவைகள் மாறுபாடுடையனவாகக் காணப்படினும் கரிகாற் பெருவளத்தானொடு பொருதவன் ஒரு சேரன். அவன் பெருஞ்சேரல் ஆதன் என்பது உறுதியாகிறது. இவ னது மகனுவான் நெடுங்சேரல் ஆதன். இவன் பெருந்திரு மாவளவ னது சமகாலத்தவனும் உறவினனுமாவான். இவன் கரிகாலனது மகளும் இமயம் வரைத் தன்னுணை செலுத்திக் கனகவிசயர் தலையில் பத்தினிக்கடவுள் படிமம் செய்பக் கற்கொண்டு வந்தவனை சேரன் செங்குட்டுவனது தாயுமான நற்சோணையை மணந்தவனுவான். இக்குடக்கோ நெடுஞ்சேரலாதனே பெருவிறற்கிள்ளி என்பானொடு பொருது ஆரங்கழுத்தென்ன உயிர் போகாது கிடந்தானென்று கூறும்[4] அக்களத்திற்பொருத சோழனும் சேரனும் இறந்தனரென் பது புறநானூற்று மற்றிரு செய்யுள்களால்[5] அறியப்படுஞ்செய்தி.

368-வது புறப்பாட்டில் கழாஅத்தலையார் என்னும் புலவர் நெடுஞ்சேரல் ஆதனைப்பார்த்து "நின்னைக் களிற்றின்மே லெடுத்துச் செல்வோ மென்றாலும் ஒளிறு மழைதவிர்க்கும் குன்றம் போலக் கணைபட்டுத் தொலைந்த. கொடுஞ்சியையுடைய நெடுந்தேரிலேற்றிச் செல்வோமென்றாலோ அவைகளெல்லாம் பீடழிந்து நிலஞ்சேர்ந் தன ; குதிரைகளெல்லாம் இறந்தொழிந்தன. யாதொரு முகவையு மில்லாமையான் நீ இங்கே இவ்வாறு கிடக்கவேண்டியிருக்கிற தென்று கூறுகிறார். இவரே பின்னரும் இரண்டுபேரும் பட்டனர் பதினெண்பாடை மாக்களாலாகிய படையும் ஆள்வாற்று வீழ்ந் தது என்கிறார். இதனையே பரணரும் கூறுகின்றார். இவர்கள் இறந்துபடவே சேர அரசாட்சிக்குச் செங்குட்டுவனும் சோழவர சாட்சிக்கு நலங்கிள்ளியும் வந்திருக்கவேண்டும். இவ்வாறு கொள் வதே புறநானூறு வைப்பு முறைக்கும் நலங்கிள்ளி பாட்டிற்கும் ஒற்றுமை யுடையதாகக் காணப்படுகிறது.

(தொடரும்)

இலக்கணவிளக்க பரம்பரை

திரு. சோமசுந்திரதேசிகன்.

---

2 அடி 143-148. 3 அகம் 246. 4 புறம் 368. 5 புறம் 62, 63.

உ

தொல்காப்பியம்.

'மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.'

உலகத்திலுள்ள மொழிகள் எல்லாவற்றையும் வென்று ஆரிய மொழியுடன் உறழ்வது தமிழ் என்று சிலநூற்றாண்டுகளின் முன் விளங்கிய ஒரு பேரறிஞர் இப்பாட்டிலே கூறிவைத்தனர். இப்பொழுது 'தமிழ்மொழியுடன் வேறு மொழிகளையும் ஒருங்கு நன்காராய்ந்த ஆராய்ச்சிவல்ல புலமையாளர்கள் இம்முடிபுக்கே வருகின்றனர். தமிழ் மொழி எவ்வளவு பழமையுடையது என்பதனையும், பண்டை நாளில் எவ்வளவு பரவியிருந்தது என்பதனையும் ஆராய்ந்தறிந்த மதிவல்லாராகிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்கள், அதனை,

'சதுமறையா ரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ யனாதியென மொழிகுவதும் வியப்பாமே.'

என்று மொழிந்தருளினர். இங்ஙனம் பழமையால் மாத்திரமன்றி, இயல்வளம்பாகிய திருந்திய நிலையாலும், இனிமை முதலியவற்றாலும் தமிழ்மொழி தலைசிறந்து விளங்குதலின், புலமையும் தெய்வத்தன்மையும் வாய்ந்துளோர் என நம்மாற் போற்றப்பெறும் நம் பெருமக்கள் புலரும் தமிழைக் குறிக்குமிடத்தெல்லாம் செந்தமிழ், பைந்தமிழ், இன்றமிழ், மென்றமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், நற்றமிழ், சொற்றமிழ் என்றிங்ஙனம் அடையடுத்து வழங்குவாராயினர். இந்நாட்டிற்குரிய தொன்முது மக்களாகிய தமிழருடன் ஆரியர் விரவி ஒரு நாட்டினராக வாழலுற்ற காலத்தில் தமிழருடைய தத்துவ ஞானங்கள் வடமொழி நூல்களாகப் பரிணமித்தன. ஆரியருடைய கலை ஞானங்களும், கோட்பாடுகளும் தமிழிலும் ஏறின. இருமொழியும் நம்முடைய பெருமொழிகளென இந்நாட்டு முன்னையோர் போற்றி வந்தனர். எனினும் சிற்சில துறைகளில் ஒரு மொழி மற்றொரு மொழியினும் ஒவ்வொருகாலத்திற் சிறந்துவிளங்குதல் இயற்

கையே. தமிழ் மொழியானது ஆரியத்தை வெல்லுதற்கு மாறு கொண்டு நிற்கின்றது என்பது தலைப்பிற்காட்டிய பாட்டிலே குறிக்கப்பெற்றுளது. உறழ்தல் என்பதற்கு ஒத்தல் என்னும் பொருள் கூறப்படினும், வெல்லுதற்கு மாறுகொள்ளல் என்பதே சிறந்த பொருளாகும். நம் இருமொழிகளில் வடமொழி வழக்கற்று வீழ்ந்ததனையும் தமிழ்மொழி இளமைச்செவ்வியுடன் என்றும் வழங்குதற்குரியதாய் மிளிர்வதனையும் நோக்குழி தமிழ் ஆரியத்தை ஒருவாற்றால் வென்று விட்டதென்றே இப்பொழுது கூறுதலும் ஏற்புடைத்தாகும்.

தமிழ் தன் மொழியமைதியாற் பிறமொழிகளை வென்று விளங்குதலேயன்றி, தனனிடத்துள்ள சில நூல்களானும் வாகை சூடித்திகழ்தல் கண்கூடாம். திருக்குறள், திருவாசகம், திருவாய்மொழி என்னும் நூல்களுக்கு இணையான நூல்களை வேறெம்மொழியிற் காணக்கூடும்? தொல்காப்பியம் என்னும் இயல் நூலும் அத்தன்மையதே. இயல், இசை, நாடகம் என்னும் முத்துறையிலும் முச்சங்க நாளிலே இயற்றப்பெற்றுப் பரந்துகிடந்த இலக்கண நூல்களெல்லாம் கரந்துபடவும், தொல்காப்பிய மென்னும் இவ்வியற்றமிழிலக்கணம் இன்று காறும் நின்று நிலவுவது, பல்லாயிரம் ஆண்டுகளாக நம் முன்னையோர் இதனை எங்ஙனம் மதித்துப் போற்றிவந்தன ரென்பதற்கு உறு சான்றாகும்.

'கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ.'

என்றிவ்வாறாக, இலக்கண வரம்புடைமையால் நம் தமிழ்மொழி நிகரற்றதென வைத்துப் போற்றப்பெறுவது புனைந்துரையாமென எதிலார் புறங்கூறுதற் கிடனின்றி, எய்ப்பினில் வைப்பாக இந்நூல் கிடைத்திருப்பது நாம் புரிந்த தவத்தின் பயனேயாம். தமிழின் வரலாறனைத்தும் ஒருங்குணர்ந்து கோடற்குச் சிறந்த கருவியாக வுள்ள இந்நூல் இனி எக்காலத்தும் நிலவுதலுறும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இந்நூலானது தமிழ்கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆராய்ந்து முந்துநூல்கண்டு முறைப்படத் தொகுத்தியற்றப்பட்டதென்பது வடவேங்கடம் என்னும் இதன் சிறப்புப்

பாயிரத்தால் அறியலாவது. இந்நூலை ஆராய்ச்சிசெய்யுமிடத்து இது நன்குதெளிவாம். இந்நூலின் எழுத்ததிகாரத்து மொழிமரபின் கண்ணே மொழிக்கிறுதி எழுத்துக்கள் கூறிவருமிடத்தே, சகரமெய் யூர்ந்த முற்றுகரமும், நகரவொற்றும் இவ்விரண்டு மொழிகட்கே ஈறுகு மென்றும், பகரமெய்யூர்ந்த முற்றுகரமும் ஞகர வொற்றும் ஒவ்வொருமொழிக்கே ஈறுகு மென்றும், பகர மெய்யூர்ந்த வுகர வீற்றுச்சொல் ஒன்றே தன்வினைப் பொருளும் பிறவினைப் பொருளும் பயப்பதாமென்றும் உணர்த்துவார்,

'உச்ச காரம் இருமொழிக் குரித்தே.'
'உப்ப காரம் ஒன்றேன மொழிப.'
'இருவயி னிலையும் பொருட்டா கும்மே.'
'உச்ச காரமொடு நகாரம் சிவணும்.'
'உப்பு காரமொடு ஞகாரையும் அற்றே
அப்பொரு ளிரட்டா திவணையான.'

என ஆசிரியர் கூறி வைத்திருப்பன சிலவற்றிலிருந்தே, தமிழின் இருவகை வழக்கினு முள்ள சொற்பரப் பெல்லாம் ஒருங்குதொகுத்து வைத்துக்கொண்டு இந்நூல் இயற்றப்பட்டதென உணரலாகும். மேலும், தொகைமரபின் கண்ணே,

'அளவிற்கும் நிறையிற்கும் மொழி முதலாகி
உளவேனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே
அவைதாம்,
கசதப என்று நமவ என்று
அகர உகரமோ டவையென மொழிப.'

என்னுஞ் சூத்திரத்தால், தமிழகமுழுதும் வழங்கிய அளவுப்பெயர், நிறைப்பெயர்களை அவற்றின் முதலெழுத் தெடுத்தோதிக்குறித்து வைத்ததும், பொருளதிகாரத்து மரபியலில், இளமைப்பெயர், ஆண்மைப் பெயர், பெண்மைப் பெயர் எல்லாம் எடுத்தோதி, இன்னின் னவற்றிற்கு இன்னின்ன பெயர்கள் உரியவெனக் கூறிவைத்திருப்பதும் போல்வன இவ்வுண்மையை நன்கு விளக்குவனவாகும். தமிழுக்கே உரிய சிறப்புவாய்ந்த பொருளதிகாரத்தில் மக்களுடைய ஒழுகலாறெல்லாம் தொகுத்துணர்த்தி யிருக்கும் மாட்சி அளவிடற் பாலதன்று. இவ்வாறுக இந்நூலின் கண் அமைந்து கிடக்கும் எழுத்துச் சொற்பொருட்டிறங்களையும், அவற்றை ஆசிரியர்கூறிச் செல்

லும் நெறிமுறைகளையும் நூற்பாக்களின் திட்ப நுட்ப அழகுகளையும், இன்னோரன்ன பிற சிறப்புக்களையும் ஒரு கட்டுரையில் எழுதிக் காட்டுவதென்பது இயலாத தொன்றாம்.

இனி, இத்தகைய சீருஞ்சிறப்பும் வாய்ந்த இவ் வியல்நூலை யருளிய ஆசிரியராகும் ஒல்காப்பெருமைத் தொல்காப்பியனாரது வரலாறு ஏனைப்பல ஆசிரியர்களின் வரலாறு போன்றே நாம் செவ்விதின் அறிய வொண்ணாததாயிற்று. இவ்வாசிரியரின் வரலாற்றுக் குறிப்புக்களாக நமக்குக்கிடைத்திருப்பன மிகச்சிலவே. இவை கொண்டு சிற்சிலர் தாம் தாம் கருதியவாறு இவ்வாசிரியரைப் பற்றி எழுதியிருக்கின்றனர். யாமும் தொல்காப்பியர் வரலாறாக அறிவனவற்றைத் தொல்காப்பிய ஆராய்ச்சி முடிவிற் கூறுவேம். இனித் தொல்காப்பிய ஆராச்சியைப் பல பகுதிகளாகப் பகுத்துக் கொண்டு, அவற்றை; முறையே ஒரோ வொன்றாக எழுதிவரக்கருதியுள்ளேம். இயல்பிலே சுருங்கிய அறிவினேமாகிய யாம் பலவினைநலிவுகட்கு இடையே இப்பேராராச்சியை எடுத்துக்கொண்டது தமிழன்னையின் சிறுமகார் ஆற்றும் இச்சிறு திருத்தொண்டுக்கு அன்பர்களின் அன்பு முன்னின்று ஊக்கமளிப்பது போன்று இறைவன்றிருவருள் உண்ணின்று ஊக்கமளிக்கும் என்னும் துணிபு கொண்டேயாம்.

வாழி கரந்தை வளருந் தமிழ்ச்சங்கம்
வாழி தமிழ்ப்பொழில் மாண்புடனே—வாழியரோ
மன்னுமதன் காவலராய் வண்மைபுரி வோரேவரும்
உன்னுபுக ழின்பநலம் உற்று.

பண்டிதர், மு. வேங்கடசாமி நாட்டார்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

தமிழ் மொழியும் தமிழ் மக்களுயர்வும்.

"நின் பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலு
மென்னையுங் கண்டேன்" —பட்டினத்தடிகள்.

முன்னுரை.

மக்களுள் ஒரு பகுதியாருடைய உயர்வை அளந்தறிவதற்குள்ள வழிகள் பலவற்றுள்ளும் சிறந்தது அப்பகுதியார் பேசும் மொழி யாராய்ச்சியே யாமென்பது அறிஞரனைவரும் கண்டறிந்த தோருண்மை. ஒரு பகுதியாரது மொழி இலக்கணச் செம்மையும் இலக்கியப் பெருமையு முடையதாகக் காணப்படின், அம் மொழியாளரும் செம்மையும் பெருமையு முடையவராகக் கருதப்படுவர்: அவர் மொழி அங்ஙனக் காணப்படாதொழியின், அவர் நொய்மையும் சிறுமையு முடைய்வராகக் கருதப்படுவர். ஆகவே தமிழ் மக்களுயர்வு தெரிய வேண்டுவார்க்குத் தமிழ் மொழியின் இலக்கணச் செம்மையும் இலக்கியப் பெருமையுந் துணியப்படல் இன்றியமையாதது. அவ்வாறு துணியப்பட்ட மொழி தமிழே யாயின், தமிழ் மக்கள் உயர்வுடையாரென்பது தானே பெறப்படும். இவ்வாறிருத்தலின் ஒன்றனுராச்சி மற்றொன்றற் கின்றியமையாததாய் ஒன்றினொன்று பிரியாது இணைக்கப்பட்டதாகின்றது. ஆதலின் தமிழ் மொழியின் உயர்வெல்லாம் தமிழ் மக்கள் உயர்வே: தமிழ் மக்களுயர்வெலாம் தமிழின் உயர்வே. இதுபற்றியே யன்றோ எமது நாட்டுப்•புலவரொருவர்

* "பாடையின் சிறப்பெலாம் பயில்வோர் சிறப்பே
ஆடையின் சிறப்பெலாம் அணிவோர் சிறப்பே

என்று கூறினர். ஆயினும் மொழியும் மொழியாளரும் வேறுதலின் முதற்கண் மொழியைச் சிறிது ஆராய்ந்து, பின்னர் மொழியாளரது உயர்வு ஆராய்தல் சால்புடையதாகின்றது.

---

* இவ்வடிகள் "வாளைமீனுள்ள றலைப்படல்" (திரிகடுகம்) என்பது போலவும் "சீதமின்மை பனியின்மை காட்டல்" (சிவஞான சித்தியார்) என்பது போலவும் வைத்துப் பொருள் கொள்ளப்பட்டன.

தமிழ்மொழி.

தமிழின் பழைமை.

உலகத் தோற்ற முறையில் வெயின் மண்டலப் பகுதியே முதன் முதல் தோன்றி யிருத்தல் வேண்டுமென்பதும், அதன் பின்னரே இடைப்பட்ட மண்டலமாகிய குளிர் வெயின் மண்டலப் பகுதியும், அப்பால் குளிர் மண்டலப் பகுதியும் தோன்றி யிருத்தல் தகுதி யென்பதும் இக்காலத் தறிஞர் கொண்ட முடிபு. இம் முடிபை வலியுறுத்த அவர் நிலத்தின் வன்மையும், நிலத்திற் றோன்றிய சிலையியற் பொருள், இயங்கியற் பொருள்களின் பன்மையும், பருமையும், அழகும், அறிவும் முதலியனவாகப் பல கூறுகின்றனர். அவை யனைத்தும் உண்மையே. அதனால் வெயின் மண்டலப் பகுதியுளமைந்து கிடக்கும் தமிழ் நாடு உலகத் தோற்ற முறையில் முதன் முதல் தோன்றிய நாடென்பது புலனும்.

புலனாகவே, அந்நாட்டுமொழி எம்மொழிக்கும் முதலிற் றோன்றிய மொழியே யாமென்பது பெறப்படும். இதனால் தமிழ் மொழி கால வரையறையில் அடங்காத பழைய மொழி யென்பது உறுதிப்படும். தெய்வ வுண்மை கடைப்பிடித்த நமது பெரியோர்கள் தமிழ் மொழிக்கு முதலாசிரியர் சிவபிரானே எனக் கூறுவதும் இவ்வுண்மை கருதியே போலும்.

மொழியினத்தில் தமிழ் மொழியின் இடம்.

உலகத்து வழங்கி வரும் பல வேறு வகைப்பட்ட மொழிகளையெல்லாம் மொழியியலறிந்தோர் ஆரியம், ஸெமிடிக், துரானியமென்னும் மூன்றினங்களுள் அடக்குகின்றனர். வடமொழி, லத்தீன், கிரீக் முதலியன முதலினத்திலும், ஆரமெயிக், ஹீப்ரு, அரபி முதலியன இரண்டாமினத்திலும், மங்கோலியம், துருக்கி, பின்னியம், தமிழ், போதியம், மலேயம் முதலியன மூன்றாமினத்திலும் அடங்குமென்ப. இன்னும் அவர் தமிழ்மொழி துரானிய வினத்ததென்பதற்குச் சின மொழியில் தமிழ் ஒப்பக் காணப்படும் 'ழகர' வெழுத்தையும், நீ, நான், யாம், பெண் முதலிய சொற்களையும் காட்டுவர். அன்றியும், கார்காத்த வேளாளரின் பிரிவினர் தொண்ணூற்றறுவரில் எண்பத்து நான்காவது எண்ணுப் பிரிவினர் 'சினத்திரை

யர்' எனப்படுதலும் தமது கொள்கையை வலியுறுத்து மென்பர். இவ்வாராய்ச்சி முடிபு தமிழ்மொழி வடமொழியின் கிளை மொழியேயன்றித் தனி மொழியன்றென மொழி யியல்பறியாதார் கூறும் கூற்றுப் பொருத்தாதெனக் காட்டுதற்கும் போதிய சான்றாகும். தமிழ்மொழி தனி மொழியே.

தமிழ்மொழி தனி மொழி.

மொழியாவது ஒருவர் தமது கருத்துக்களைப் பிறர்க்குப் புலனுமாறு கூறுதற்குக் கருவியா யிருப்பது. ஒரு சில மொழிகள் சில கருத்துக்களை வெளியிடுதற்குரிய சொற்களின்றிக் காணப்படும். தமிழ்மொழி அத்தகைய குறையின்றிக் கண் முதலிய பொறிகளாற் காணப்படும் பரிய பொருண் முதலாக நமது உள்ளத்துத் தோன்றும் உணர்ச்சி யிறுவாயாகிய அனைத்தையும் 'கண்முதற் புலனாற் காட்சியுமில்லோ' னாகிய இறைவனை யுள்ளிட்ட பொருள்களையுங் குறிக்கும் சொற்களுடைய தாயிருக்கின்றது. இஃதொன்றே தமிழ் மொழி தனி மொழி யென்பதை நிலை நிறுத்தும்.

தமிழில் வடசொற்களின் வழக்கு இக்காலத்து மிகுந்து காணப்படுதலின், தமிழ்மொழி வடமொழியின் கிளைமொழி யென்றல் சாலாது. மலையாள மொழியில் வட சொற்களும் சொற்றொடர்களும் வடமொழி யிலக்கண வமைதியும் மிகுந்து காணப்படுவனவாயினும், அதனை வடமொழியின் கிளைமொழி யென்பார் யாருமில்லை. அவ்வாறே தெலுங்கு, துளு, கன்னட முதலியனவுமாம். ஆதலின் வட சொற்கள் தமிழில் மிக்குக் காணப்படுதலின் அது வட மொழியின் கிளைமொழி யாதலில்லை. இன்னும் இதன் உண்மை அறிய விரும்புவோர் காலஞ்சென்ற திருவர், திருமணம் செல்வக்கேசவராய முதலியாரவர்கள் எழுதிய 'தமிழ்' என்னும் நூலில் 'நூல் வழக்கத்தில் வட மொழிப் பிரயோகத்தின் அளவு' என்னும் பகுதியைப் படித்தறிவாராக.

தமிழும் திராவிடமும்.

தமிழ் நாடே உலகத்தோற்ற முறையில் முதன் முதற் றோன்றிய நாடென்பது மேலே கூறப்பட்டதாகலின், அந் நாட்டுமொழி பிற்றோன்றிய வேற்றுமொழிப் பெயர் பெறாது. ஆகவே திராவிட மென்னும் வட சொல் தமிழென மருவிற் றென்பது நிலையுத

வில்லை. மேலும் திராவிட மென்னுஞ் சொல் ஓடி வளைந்ததெனப் பொருள்பட்டு, ஆரியர் படையெடுப்பால் வட நாட்டினின்றும் தெற்கில் ஓட்டப்பட்ட தமிழ்மக்கள் புகுந்த இடத்தை முதற் குறித்துப் பின் அவர் பேசும் மொழியைக் குறித்ததென்பதும் பொருந்தாது: உலகத் தோற்றத்தில் முற்பட்ட நாட்டினின்றே மக்கள் பிற் றோன்றிய வேற்று நாடுகளுக்குச் செல்ல வேண்டுதலின். இங்ஙனமாகலான் தமிழர் யாண்டு நின்றேனும் இங்குப் புகுந்தாரல்ல ரென்பதும், அவர் தமது பண்டை நாட்டிலேதான் உறைபவரென் பதும் பெறப்படும். சிலப்பதிகாரத்திற் "பதியெழு வறியாப் பழங் குடி" யென வருவதும் அறியத்தக்கது.

இன்னும் இந்திய நாட்டின் நிலப்பரப் பியல்பு அறிந்தார் காவிரிப் புகாரின் உயரமும், கோதாவரி கங்கை முதலிய யாறுகளின் புகாருயரமும் ஒப்பிட்டு நோக்கியவழிக் காவிரியின் புகார் மிக வுயர்ந்து காணுதலின், நிலப் பரப்பில் முற்றோன்றியது தென்னாடே யென்றும், வட பகுதி பிற்றோன்றியதே என்றுங் கூறுகின்றனர். இக்காரணத்தாலும் தமிழர் ஆரியர் படையெழுச்சிக்கு அஞ்சி ஓடித் தென்னாட்டை வளைந்தாரென்பது பொருந்தாமை அறியலாகும்.

இனித் தமிழ் செய்த தவப்பயனைத் தோன்றியருளிய சிவஞான முனிவர் தமிழ்மொழி 'திராவிட'ப் பெயர் பெற்றது அம் மொழி எல்லா வினைகளையும் ஓட்டுதலின் என்றருளிச்செய்கின்றனர். "எவ்வினையு மோட்டுதலிற் றிராவிடமென் றியல்பாடை" என் பது காஞ்சிப் புராணம். இதனையுந் தமிழறிஞர் ஆராய்வாராக.

தமிழென்னுஞ் சொல் பொறிகளால் நுகரப்படும் இனிமைப் பொருளை யுணர்த்தும். சிந்தாமணியில் 'தமிழ் தழீஇய சாயலவர்' என்வும், கம்பராமாயணத்தில் 'தமிழ்ப் பாட்டிசைக்குந் தாமரையே' எனவும் தமிழ்ச் சொல் இனிமைப் பொருளில் வழங்கப்பட்டிருத்தல் யாவரும் அறிந்ததே. இதனால் செவிக்கினிமை பயப்பதாய் இயற்கை முயற்சி யோசை கொண்ட தமது மொழியைத் தமிழ் மக்கள் "தமிழ்" என்னுந் தம் சொல்லான் வழங்கின ரென்பதே பொருத்த முடையது.

இலக்கண வமைதி.

தமிழ் மொழியின் இலக்கணவமைதி, எழுத்தமைதி, சொல்லமைதி, பொருளமைதி, யாப்பமைதி, அணியமைதி என ஐவகைப்படும்

இவற்றுள் எழுத்தமைதியை முதலில் ஆராய்வோம். எம்மொழி குறைந்த எழுத்துக்களால் அமைந்திருப்பதோ அம்மொழியே சிறந்த மொழி யென்பர் இக்காலத் தாராய்ச்சியாளர். இம்முறை பற்றி யாராய்ந்து சீனமொழி மிக்க எழுத்துப்பெருக்கினையுடைய தென்ப. மிகச்சுருங்கிய நெடுங்கணக்கினையுடைய தெனக் கொள்ளப்பட்டு உலகமுழுவதும் இக்காலம் பரவியிருக்கும் ஆங்கிலமொழியும் தமிழ் மொழியினை நோக்க ஒருவாற்றான் மிகுந்த எழுத்துக்களுடையதே. தமிழெழுத்துக்களிலுள்ள உயிர் பன்னிரண்டனுள் அ, இ, உ என்னும் மூன்றுமே தனியெழுத்துக்கள்: ஆ, ஈ, ஊ என்பன அவற்றினெடிலன்றி வேறல்ல: எ, ஏ, ஐ மூன்றும் அ, ய, இ என்பன தம்முள் ஒத்திசைத்தும், ஒ, ஓ, ஔ மூன்றும் அ, வ, உ என்பன தம்முள் ஒத்திசைத்தும் நிற்பன. வல்லினமும், மெல்லினமும் புற முயற்சிப்பிறப்பான் வேறுபினும் அகமுயற்சிப் பிறப்பான் ஒத்தன. இடை யெழுத்தாறும் ஓரினம். ஆகவே, தமிழ் நெடுங்கணக்கு மிகச்சுருங்கிய எண்கொண்ட எழுத்துக்களுடைய தென்பது தேற்றமாம்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய முப்பதும் மூன்றுமே எழுத்துக்கள். இவ்வெழுத்துக்கள் தமிழ் மொழியிலுள்ள ஓசைகள் அனைத்தையும் தனித்தும், இடஞ்சார்ந்து நின்றும் புலப்படுப்பன. அங்கில மொழி யெழுத்துக்களுள் ஓரோசைக்கே பல எழுத்துக்கள் வருதலும், பல ஓசைகளுக்கே ஓரெழுத்து வருதலுமாகிய குறைபாடுகள் காணப்படும். வடமொழி முதலிய சிலமொழிகளில் இயற்கை யோசையே யுன்றிச் செயற்கை யோசைகள் மிகப்பல்வாம். தமிழ் மொழி அவ்வாறு குறைபாடு யாதுமின்மையின், சிறந்த எழுத்தியலமைதி யுடையதென்பது அறியப்படும்.

இனித் தமிழ் மொழியின் சொல்லமைதிக்குப் பல மேற்கோள்கள் காட்டுதல் கூடுமாயினும் சுருங்கிய கட்டுரை. இடந்தந்திலது. ஆதலின் ஒன்றிரண்டே கூறுவோம். வடமொழியிற் சொற்களுக்குப் பாலும் எண்ணும் வேறே: பொருள்களுக்குப் பாலும் எண்ணும் வேறே. கல்லென்னும் பொருள் தமிழிலே அஃறிணை யொன்றன் பாற் பொருள்: அச்சொல்லும் அஃறிணை யொன்றன் பாற் சொல்: அதன் வேறு பெயர்களும் அப்பாற் சொற்களே. வடமொழி

யிலோ கல்லென்னும் பொருளைக் குறிக்கும் பாஷாணமென்பது ஆண்பாற் சொல்: அதன் பரியாயப் பெயராகிய சிலை யென்பது பெண்பாற் சொல். தமிழிலே மனைவி உயர்திணைப் பெண்பாற் பொருள்: அச்சொல்லும் அப்பாற் சொல்லே. வடமொழியிலோ மனைவியைக் குறிக்கும் தாரம் என்னும் சொல் ஆண்பாற் பெயர்: அதுவேயுமன்றி அச்சொல் கருத்தால் ஒருமையே யாயினும் சொல்லாற் பன்மையேயாம். ஹிந்தியில் இவ்வாறுள்ள மாறுபாடு வடமொழியை நோக்கக் குறைவென்பதேயன்றித் தமிழை நோக்க மிகுதியேயாம்.

பழைய அங்கில மொழியிலே மேற்கூறிய குறையிருந்தது. டம் (dom) ஈற்றான் முடிவனவாகிய Freedom முதலியன ஆண்பாற் பெயர்கள்: நெஸ் (ness) ஈற்றான் முடிவனவாகிய Goodness முதலியன பெண்பாற் பெயர்கள்: யென் (en) ஈற்றான் முடிவனவாகிய Maiden, Chicken முதலியன அஃறிணைப் பெயர்கள். பண்டிருந்த இம்மாறுபாடு இக்காலத் தறிஞர்களால் ஒழிக்கப்பட்டன. தமிழ் மொழியோ இத்தகைய குறைபாடு பண்டேயில்லாதது. இது தமிழின் சொல்லியலமைதிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இனி மக்களால் இன்றியமையாது தேடற்பாலன என ஆன்றோரால் எடுத்தோதப்படுவனவாகிய உறுதிப்பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்குமாம். நாம் உணர்வனவும் பிறர்க்கு உணர்த்துவனவுமாகக் கிடப்பன இவைகளே. இவற்றுள் இன்பப்பொருள் நாம் உள்ளத்துணர்ந்து இன்புறுதற்கு உரியதே யன்றிப் பிறர்க்குக் கூறலாகாதது: ஏனைய மூன்றும் நாம் உணர்வ தொடு பிறர்க்கும் புலனுமாறு கூறலாவன. ஆகவே பொருள்கள் யாதுவகையான் நான்கெனப்படினும், கூறலாகாததும், கூறலா னவும் என்னும் வேற்றுமையான் இரண்டேயாம். இவைகளே றையே அகப்பொருள் புறப்பொருளெனக் கூறப்படும். வீடு மனமு மொழியுஞ் செல்லா நிலைமைத் தெனினும், அதற்கு வாயில் கூறுமுகத்தான் அது காஞ்சித் திணையில் அடக்கப்பட்டது. இவற் றின் விரிவு தொல்காப்பியத்துக் கூறப்படுவது கொண்டு தெரிய லாகும். இங்ஙனம் மக்கட் கருத்துப் பொருள்களை யெல்லாம் காகைவகைப் படுத்து இலக்கண வரம்பின் அடக்கிச் செல்லும்

பெருமை நமது தமிழ்மொழிக்கே யன்றி வேறெம்மொழிக்கு மில்லை. இது தமிழ்மொழியின் பொருளியல் ஏற்றம்.

வடமொழி முதலிய சில மொழிகளில் எழுத்துக்களை யெண்ணிக் கணக்கிட்டும், அசைகளை அலகிட்டும் இஃதிப்பா வெனக் கூறுதல் வழக்கம். தமிழ்மொழியில் செய்யுட் பாகுபாட்டிற்குச் செய்யுளோசையே முதலாகும். செப்பல், அகவல், தூங்கல், துள்ளல் என்னும் ஓசை வேறுபாடு பற்றியே வெண்பா முதலிய பாக்கள் நான்கும் கொள்ளப்பட்டன. அறமுதலிய நாற்பாற் பொருள்களும் அகப்பொருள் புறப்பொருளென இரண்டாக அடங்கினமை போல வெண்பா முதலிய பாக்கள் நான்கும் வெண்பா ஆசிரியமென இரண்டாக அடங்கும். பண் வகுத்துப் பாடப்படும் பரிபாடல் இயல் இசை யென்னும் இரண்டன் ஒற்றுமையை நன்கு விளக்கும். எஃகு செவியும், கூரிய உணர்வு முடையோரே இப்பாவிகற்பங்களை நன்கு உணர்வர். இதனானே தமிழ்மக்கள் தம் கருத்துக்களைக் கருத்துக்கேற்ற ஓசை புலப்படக் கூறுவது செய்யுளெனக் கொண்டாரன்றி வேற்றழகுபற்றிக் கொண்டாரல்ல ரென்பது புலனாம். இது தமிழ்மொழியின் செய்யுளிய லமைதி.

இனி ஓர் நங்கைக்குப் பலவேறு வகைப்பட்ட அணிகள் அணியப்படினும், அவையனைத்தும் பொன்னின் விகற்பமேயாகும். பொன்னை ஓர் குறிப்பிட்ட முறையிற் சில வளைவுகளுடன் குயிற்றினால் ஓரணியாம்: அதனையே வேறுமுறையில் வேறு வளைவுகளுடன் குயிற்றினால் வேறணியாம். அதுபோல அணியெனப்பட்ட உவமை யொன்றனையே பல மாறுபாடுபட வழங்கின் வெவ்வேறணியாம். வடநூலில் ஆசிரியர்கள் அணிகளைப் பலவாகப் பெருக்கிக் கூறினாராயினும் வடநூல் வல்லாராகிய அப்பதீக்ஷிதர்க்குத் தொல்காப்பியர் கருத்தே கருத்தாகும். இங்ஙனம் அணிகளின் உண்மை யறிந்து அவ்வியலுக்கு உவம வியலெனப் பெயரிடப்பட்ட தொன்றே தமிழணியிய லமைதியாம்.

சங்கமும் இலக்கியமும்.

மேனாட்டுப் பிரான்ஸிலே பதினான்காவது லூயி அரசன் காலத்துக் கற்றோர் குழீஇய கழகம் நடைபெற்றது. தமிழ் நாட்டிலே பாண்டிய அரசர்கள் வழிவழியாகத் தமிழ்க் கழகங்கள் மூன்

நிலையிட்டனர். 'வல்லவர், செதுமொழி சீத்த செவி செறுவாக,
முதுமொழி நீராப் புலனா வுழவர், புதுமொழி கூட்டுண்ணும் புரிசை
சூழ் புனலூர' எனப் பாண்டியன் விளிக்கப்படுதலினாலும், 'ஓங்கிய
சிறப்பி னுயர்ந்தகொள்கை, மாங்குடி மருதன் றலைவ னாக,வுலகமொடு
நிலைஇய பலர்புகழ் சிறப்பிற், புலவர்' எனப் பாண்டியன் றலையாலங்
கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் வஞ்சினங் கோடலா
னும், 'நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி நற்கனகக் கிழிதருமிக்
கருளி னோன்காண்' என இறைவன பரவப்படுதலினாலும், 'சால்பாய
மும்மைத் தமிழ்தங்கிய வங்கண் மூதூர், நூல்பா யிடத்தும் முள
ரோன்றலை மேதி பாயவ், பால்பாய் முலைதோய் மதுப்பங்கயம் பாய
வங்குஞ், சேல்பாய் தடத்தும் முளசெய்புண்மிக் கேறு சங்கம்.'
என மதுரை புனைந்துரைக்கப் படுதலானும், இறையனாரகப் பொரு
ளுரையில் முச்சங்க வரலாறு கூறப்படுதலானும் இவ்வுண்மை யறி
யப்படும். சான்றோர் ஓரவைக்களத்திற் கூடித் தமிழ் நூற்றிறம்
தூக்கி யறிந்தன ரென்பது தமிழ் நங்கை தனது நலமுற்றிருந்தமை
குறிப்ப தொன்றன்றோ. அச் சான்றோ ரியற்றிய செய்யுட்களின்
தொகுதியாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பன தமிழணங்
கினுக்கு நந்தா விளக்கங்களாய்த் திகழ்கின்றன. பிற்காலத்தனவா
கிய சிந்தாமணி, சூளாமணி, சிலம்பு, மேகலை யென்பனவும் சிறப்புடை
அணிகளேயாம். உலகத்து மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்
கப்பட்டு விளங்கும் திருக்குறள் நமக்குக் கிடைத்தற்கரிய பொற்
குவையே யன்றோ: அதனை நமக்கு உதவியருளிய திருவள்ளுவ
நாயனாரினுஞ் சிறந்த வள்ளல் எவரிருக்கின்றனர்? தமிழிலக்கியங்
களிற் புராண இதிகாச விலக்கியங்கள் மொழி பெயர்ப்பு நூல்களே
யாயினும் அவற்றின் இனிமையும் பெருமையும் நம்மனத்தைக்
கொள்ளை கொள்கின்றனவே. பலபடப் பாரித்து உரைத்தென்?
ன்று கூறுதும். நம் இந்திய நாட்டிற் பேசும் மொழிகள் பல
வழங்கினும், அம் மொழி பயில்வோர்க்கெல்லாம் வேதமென்பது
வடமொழி வேதமேயன்றோ. தமிழ் மொழியோ, தேவாரமென்
னும் சைவ வேதமும், திருவாய்மொழி யென்னும் வைணவ வேதமு
முடைமை ஏனைய மொழிகளுக் கில்லாததோர் பெருமையே யாகும்.
இவ்வளவில் மொழியாராய்ச்சியை ஒருவாறு முடித்துத் தமிழ் மக்க
ளுயர்வு ஆராய்வாம்.

தமிழ் மக்கள் உயர்வு.

சான்றுகள்.

தமிழ் மக்களுயர்வை அறிதற்கண் நமக்குத் துணையாயிருப்பன நூல்களும் கல்வெட்டுக்களுமே. கல்வெட்டுக்களெல்லாம் ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகட்குச் சிறிது முன்னாகப் பின்னாக அமைந்து நிற்குமல்லது அக்கால வெல்லைக்கும் முற்போதவில்லை. அந்நிலையில் நமது ஆராய்ச்சிக்குத் துணையாயிருப்பன நூல்களே யன்றி வேறில்லை. இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்குந் தமிழ் நூல்கள் பலவற்றுள்ளும் மிகப் பழைமையானது தொல்காப்பியமொன்றே. இத் தொல்காப்பியம் நமது ஆராய்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றதென்பது தெரிவாம்.

உழவு

மக்கள் உயிர் வாழ்வதற்கின்றியமையாதது உணவேயாகும். 'உண்டி முதற்றே யுணவின் பிண்டம்' என்பது புறம். முற்றத் துறந்த முனிவரே யாயினும் அவரது நிலைக்கும் உணவு வேண்டப்படும். 'உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்-விட்டேமென்பார்க்கு நிலை' என்பது அறம். ஆகவே வளம்பொருந்திய சிறந்த நாடென்று ஒரு நாட்டினை நாம் கூறவேண்டுமாயின், அங்கு உழவுதொழில் நன்கு நடைபெறுதல் வேண்டும். நமது தமிழ் நாடு கண்ணக னிலப்பரப்பும், பொதிய முதலிய மழைதவழ் குடுமிப்பொருப்பும், கடல் கிளர்ந்தன்ன காவிரி பொருநை முதலிய நீரறா யாறுகளுமாகிய இயற்கை வளங்கொடு நிகழ்தலின் உழவு தொழிற் கேற்புடையதோர் நாடாகின்றது. தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும் நமது தமிழ் நாட்டினியற்கைச் செவ்வி நோக்கியே யன்றோ "நாடென்ப நாடாவளத்தன நாடல்ல, நாட வளந்தரு நாடு" என்றருளிச் செய்தனர். சிந்தாமணியார் "மற்றை நாடு வட்டமாக வைகும்" என்றார். இவ்வாறு உழவு தொழிலால் நாட்டை வளப்படுத்துவோரே வேளாளரெனப்படுவோர். ஏனைய ஓதுதல் முதலிய தொழில்களும் இவர்க்குரியவேனும் சிறந்தது இத்தொழிலே. இதனையே தொல்காப்பியனார் "வேளாண்மாந்தர்க் குழுதூணல்ல, தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" என்றார். ஆகவே இக்காலத்தறிஞர் சிலர் கொள்ளுங் கருத்தாகிய

உழுதுண்டு வாழ்வாரே நாட்டிற்கு ஊற்றங்கோ லாவரென்பது தமிழ் மக்கட்குப் புதிதன்று: அடிப்பட்ட வழக்கமேயாம். அரசரும் இவரது சிறப்பு நோக்கியே இவர் குலத்து உழுவித்துண் போர் மரபின் மகட் கொள்ளுவாருமாயினர். அன்றி அம்மரபி னரை அமைச்சரும், தண்டத் தலைவருமாகக் கொண்டு பேணினர்.

இவ்வுழவுதொழிற் கின்றியமையாதன ஆனிரைகளே யாதலின், தமிழ் மக்கள் ஆனிரைகளை மிகப் போற்றிவந்தனர். ஆனினங்களைத் தெய்வப் பிறப்பென்றலும் சால்புடையதே. தமிழ் நாட்டுப் பெண்டிர் மாலைக்காலத்து ஆன்கன்றுகள் தாயர் வருகைக்கு எதிர்நோக்கி வருந்தும்போது 'இன்னே வருகுவர் தாயர்' எனக் கூறித்தேற்றுவர். தமிழவரசர்களும் போர்தொடங்குமுன்னர்ப் பகையரச ருட்டினின்று ஆனிரைகளைக் கவர்ந்துசெல்வர். இது தமிழ் மக்களது நாகரிக முதிர்ச்சிக்கு முதற்காரணமாகும்.

வாணிகம்.

உழவுதொழிலால் விளைபொருள்கள் பெருகியவழி வாணிக மின்றியமையாதது. தமிழ் நாட்டார்க்கு வாணிகமும் நன்கு தெரிந்ததொன்றே. இத்தொழிலாளர் வணிகரெனவும் வைசியரெனவும் படுவர். 'வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை' என்பது தொல்காப்பியம். இவர் பொருள்களைக் கொள்ளுவதிலும், கொடுப்பதிலும் கள்ளம் சிறிதுமிலர்: பிறர் பொருள்களையுந் தம்பொருள் போற் பேணுவர்: காலினுங், கலத்தினுஞ் சென்று பொருளீட்டுவர்: வாய்மையின் வழுவார். இவ்வணிகர் இப்பர், கவிப்பர், பெருங்குடி வணிகரென மூன்று பிரிவினராயிருந்தனர். இவர்கள் முறையே காலானடந்தும், எற்றுமிசைப் பொருள் கொண்டுசென்றும், யானைமீதேறிச்சென்றும் வாணிகஞ்செய்து பெரும் பொருளீட்டினர். 'மேவினர்கள் காணு, நிதியுடைய ராவார் நிலத்து.' என்பது நோக்கத்தக்கது. இவர்கள் கூட்டங் கூட்டமாகச்செல்வதுமுண்டு. அக்கூட்டம் வாணிகச் சாத்து எனப்படும். இவர்க்கு முத்தும், மணியும், பொன்னும் முறை தெரிந்தனவே. இவரது தொழிற்றிறமும், வாணிகத் திறமும் தெரிதற்கண் சிலப்பதிகாரமொன்றே சாலும்.

அரசு.

இனி, நாடு பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளனுஞ் சுரந்து, உழவும் வாணிகமும் பொலிவதற்கு அரசு வேண்டப்படுமு. அவ்வ

ரசனுக்கு ஏனைய பல சிறப்புக்களிருப்பினும், படைச்சிறப்பே சிறப் பாகும். தெய்வப் புலவரும்-அரசனுக்கு அங்கங்கூறுகின்றவர்-படை யினையே முதலிற் கூறினர். தொல்காப்பியனாரும் அவ்வாறே "படையுங் கொடியுங் குடையு முரசும்,.............தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய" என்றார். இக்காலத்துச் சரித வாசிரியர் கள் பண்டைத் தமிழரசர் எஞ்ஞான்றும் ஒருவரோடொருவர் இக லிப் போர் புரிதலிலே காலம் போக்கினரென்பர். தமிழரசர் போர் புரிவதெல்லாம் கொடுங்கோ லரசரோடன்றிப் பிறரோடன்று: அது வும் நாடு வாழவேண்டுமென்னுங் கருத்தானன்றி, நாட்டை அழிக் குங் கருத்தாலன்று. "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்........ நும்மரண் சேர்மின் எமம்பு கடி துவிடுதும்" எனக்கூறி அறமுறை யிற் போர்புரிவோரும் தமிழ வரசரே. பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தனது வஞ்சினத்துள் "பொருந்திய, எனனிழல் வாழ்நர் சென்னிழல் காணாது, கொடிய னெம் மிறையெனக் கண்ணீர் பாப்பிக், குடிபழி தூற்றுங் கோலே னுருக" என்று கூறுவதொன்றே பண்டைத் தமிழரசர் செங்கோன் மைக்கு அறிகுறியாகும். பிற்காலத்து நறுந்தொகை யருளிய கொற்கைக் குலசேகரபாண்டியனும அரசர் நெறிதிறம்பாமை பற் றிக் கூறுவன கன்னெஞ்சையும் உருக்கும். பலபல கூறியென்! மனைவியை யிழந்த ஓர் ஏழையந்தணன் வில்லுமம்புங் கைக்கொண்டு நின்ற கொலையஞ்சா வேடனை 'அரசன்மீதாணை, நீயே என் மனைவி யைக் கொன்றாய். அரண்மனைக்கு என்னுடன் வருக' என்று கூறி யதும், அவ்வேடன் மறுமொழி சிறிதேனும் புகலாது உடன் சென் றமையும், வழக்கு முடிந்தவிடத்து அரசன் தான் அறியாமையால் அவனுக்குச்செய்த தீத்தண்டத்தைப் பொறுக்குமாறு அவ்வேட னைக் குறையிரத்தலும் அறியாதார் யாவர்? இவற்றினும் பழவரசர் நீதிக்கு யாது சான்றுவேண்டும்!

பழைய அரசர்கள் கற்றாரைக் கண்போற்பேணினர். புலவர்க்கு அவர் வேண்டுவன வெல்லாங் கொடுத்தனர். பதிற்றுப்பத்தென்னும் நூல் அரசர் கொடைத்திறனை நன்கு விளக்கும். பாடினிக்கு இழை கொடுத்தலும், பாணனுக்குப் பொற்பூக் கொடுத்தலும் வழக்கம்: அதுவேயுமன்றி எட்டி, காவிதி, ஏனாதி முதலிய சிறப்புக்களும் தக் கோர்க்கு உதவிக் குடிகளை யூக்கினார்கள் பண்டையரசர்கள். இன் னும், அவர் புலவர் வாய்மொழியைப் பொன்போற் போற்றி

வந்தனர். ஒரு குடிப்பிறந்த இரண்டு சோழவேந்தர் பொருத காலத்து, அச்செயல் தகாதென்று கோவூர்கிழார் கூறியதும் போர் நிறுத்தப்பட்டது. புலவர்பிரான் கபிலரை உயிர்த்துணையாகக் கொண்டு வண்மையிற் சிறந்து விளங்கினான் பாரியே. ஔவைப் பிராட்டியார் "நெல்லு முயிரன்றே நீருமுயிரன்றே, மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம், யானுயி ரென்ப தறிகை, வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே." எனக் கூறுவாராயின், தமிழரசாட்சி எத்துணைச் செம்மை வாய்ந்ததென்பது சொல்லாமலே பெறப்படும்.

அந்தண்மை.

மேற்கூறியவாறு விளங்கிய செங்கோலாட்சியில் அந்தணராகிய அறவோர் திகழ்தல் புதுமையன்றே. தெய்வப்புலவர் "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய், நின்றது மன்னவன் கோல்" என்றனர். பிசிராந்தையார் தம்மை, யாண்டு பலவாக நரையில வாகுதல், யாங்கா கியரென வினவுவழி "வேந்தனும், அல்லவை செய்யான் காக்கு மதன்றலை, ஆன்றவிந் தடங்கிய கொள்கைச், சான்றோர் பலர்யான் வாழுமூரே." என்றாரெனின் வேறுவேறு கூறல் எற்றுக்கு? இவ ருள் எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழற் செல்லுமுக்கோற் பகவருமுளர். தொல்காப்பியனார் "நூலே கரக முக்கோன் மணையே, யாயுங் காலை யந்தணர்க் குரிய" என்றார்.

இனிக்குறிஞ்சி முதலியனவாகப் பகுக்கப்பட்ட நானிலங்களி லும், நடுவுநிலைத்திணையாகிய பாலையிலும் உயர்ந்தோர் பொருப்பன் சிலம்பன் முதலியோராகவும், தாழ்ந்தோர் எயினர் மறவர் முதலி யோராகவும் கூறப்பட்டனர். விரிப்பிற் பெருகும்.

மணத்திறம்.

களவு கற்பென்னும் இருவகைக் கைகோளுமே அவர் கொண் டமுறை. குடி, குலன், அறிவு, அன்பு முதலியவற்றான் ஒத்த தலை வனும் தலைவியும் தம்முண் மனவொற்றுமை கொண்டு காதலிப்பதே மணத்தொடக்கம். பின்னர் அவர் காரணமொடு புணர்ந்து, காகத் திருகண்ணிற் கொன்றே மணிபோல ஒத்து வாழ்வதே கற்பு முறையாம். 'இக்கற்பு முற்காலத்துக் கரணமின்றி நடந்தது: பொய்யும் வழுவுந் தோன்றிய பிற்காலத்துக் காரணமொடு நிகழ் வதாயிற்று' என ஒரு சாரார் கூறுவர். ஆசிரியர் தொல்காப்பியனார்

முதற்கட் கற்பிலக்கணங் கூறுகின்றவர் 'கற்பெனப்படுவது காரண மொடு புணர' எனத் தொடங்கினாரதலானும், 'பொய்யும் வழுவும்' என்னுஞ் சூத்திரத்தால் மேலோர் மூவர்க்குங் கீழோர்க்கும் கரண வேறுபாடு நிகழக்காரணங் கூறினாரல்லது அனைவருக்குங் கரண முறை புதிதாய் வகுத்தமை கூறினாரல்லராகலானும் அக்கொள்கை பொருந்தாது. தமிழ்மக்கள் அகப்பொருளாகிய காதலை மிக்க மேம்பாடுடையதாகக் கருதினர். சங்க நூல்களிற் பெரும்பாலன அத்துறைப் படுதலின் இவ்வுண்மை அறியப்படும். ஆண்மக்கட்கு நிறை முதலியனவும், பெண்மக்கட்கு நாண் முதலியனவும் சிறந்தன. பெண்டிர்க்குக் கற்பே கலன். "பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப், புத்தேளிர் வாழு முலகு" என்றனர் தெய்வப் புலவர். "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" என்றனர் தொல்காப்பியனார், இக்கற்பானே தமிழ்ப் பெண்டிர் மழைவளந் தருவாராயினர்: நாய னாரும் "பெய்யெனப் பெய்யுமழை" என்றார். கணவனிறப்பப் பொய்கைபுக்க அன்னம் போன்று நளிதீப் புகுந்தோரும் இப் பெண்டிரே.

வீரம்.

இவ்வாறு தமிழ் மக்களுள் இருபாலார்க்குங் காதல் சிறந்தமை போல வீரமுஞ் சிறந்தது. தன் மகன் போரிற் புறங்கொடுத் தோடினனெனச் சிலர் கூறுவது கேட்டுச் சினந்திருகி, என் மகன் அவ்வாறு செய்தானாயின் அவன் பாலுண்ட என் முலை யறுத்திடுவ னெனச் சொல்லிப், போர்க்களத்தி லஞ்சாது புகுந்து, போர்வீரரிற் றன்மகன் காணப்படாமையின், வீழ்ந்து கிடக்கும் பிணங்களைத் துழாவியவழித் தன்மகன் இறந்து கிடப்பது கண்டு, ஈன்ற ஞான்றி னும் பெரிதுவந்தாள் தமிழ்த்தாய் எனின், தமிழர் வீரத்தை என் னென்பேம். போரிற்பட்ட வீரர் பெயரும், திறனும் எழுதி நடுகல் வைப்பதும், பரவுவதும் தமிழ்நாட்டு வழக்கங்களே. விரிக்கிற் பெருகும். "ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே, சான்றோ னாக் குத றந்தைக்குக் கடனே, வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே, நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே, ஒளிறுவா ளருஞ் சமமுருக்கிக், களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என்று கூறினாளும் தமிழ்த்தாயே.

தெய்வவுணர்ச்சி.

கந்தழி யென்பது முதற்கடவுளைக் குறிக்கும் பெயராகத் தொல்காப்பியத்துக் கூறப்பட்டது. நச்சினார்க்கினியர் கந்தழியாவது 'ஒருபற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்' என்றும், 'சார்பினுற் றோன்றாது தானருவா பெய[illegible]துஞ், சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத் தரோ, வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த, தூய்மை யதா மைகிர் சுடர்' என்பது கந்தழி வாழ்த் தென்றுங் கூறி, இதனை "உற்ற வாக்கையி னுறு பொருள் .... பரம்பொருள்" என அதனை யுணர்ந்தோர் கூறியவாற்றான் உணர்கவென்று திருவாசகச் செய்யுளொன்று எடுத்துக்காட்டினர். இதனால் தமிழ் மக்களது தெய்வவுணர்ச்சி மேம்பாடறியப்படும். மந்திரமும் அவர்களறிந்தனவே. 'மந்திரப் பொருள்வயி னுஅ குநவும்', 'மறைமொழிதானே மந்திர மென்ப' என்பன தொல்காப்பியம்.

கல்வெட்டும் சிற்பமும்.

இனிக் கல்வெட்டுக்களால் தமிழ்அரசர் காலத்து நிலப்பரப்பு இம்மியும் தவறாது அளந்து கணக்கிடப்பட்டமை புலனாம். அன்றியும், ஊராளுந் திறம் குடிகட்குப் பயிற்றப்பட்டமையும் சான்றோர் வழக்குத்தீர்த்தமையும், அரசர்பிரான் சமய நொதுமலுடன் பலவேறு அறங்கள் நிலையிடலும் முதலிய பல செய்திகள் அறியக்கிடக்கின்றன. பல்லவச் சிற்பிகள் செய்துள்ள அரிய நுண்கலைத்திறம் இன்றும் என்றும் அழியா நிலைமையில் ஆலயங்களனைத்தும் விளங்குகின்றதை யார்தாம் அறியார்.

முடிவுரை.

இங்ஙனம் உழவு, வாணிகம், அரசு, அந்தண்மை, காதல், வீரம், தெய்வவுணர்ச்சி, மந்திரம், சிற்பம் முதலியவற்றிற் சிறந்துவிளங்கிய தமிழ்மக்கள் உயர்வுடையா ரென்பது யாம் எடுத்துக் கூற வேண்டா: அவரது பொன்றாப் புகழுடம்புகளாகிய நூல்களும் கோவில்களுமே கூறும்.

பின்னுரை.

முற்காலத்து நூல்களாயுள்ளன போகப் பின்னூல்களிலே யாம் கண்டு களிக்குமாறு நிற்கும் ஓர் சிறந்த நீதிநூலும், வேதமும்,

உண்மையாராய்ச்சி நூலும், பாஷ்யமெனப்படும் பேருரையும் தமிழ் மொழியில் உளவாயிருத்தலே தமிழ் மக்களுயர்வை நன்குநிலை நிறுத்துவதாகும். யாவரையும் ஒப்பநாடி, எவரும் தத்தம் நூலெனத் தன்னைக் கொள்ளுமாறு நிற்கும் திருக்குறளையும்; தமிழ்ச்சுவை சொற்றொறுங் கனிந்து இறையருட்கு அன்பு விளைக்கும் தேவார முதலிய தெய்வப்பாடல்களையும்; தத்துவ ஆராய்ச்சியாளர்க்கு வற்றா அமுத ஊற்றாயிருக்கும் சிவஞானபோத முதலிய உண்மையாராய்ச்சி நூல்களையும்; வேதாகமங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், திருக்குறள், தொல்காப்பியம் முதலிய அனைத்து நூல்களின் முட்டறுக்குஞ் சிவஞான பாடிய மெனப்படும் பேருரையையும் தந்து உலகைவாழ்வித்த பெருந்தகையாளர் தமிழ்மக்களே யெனின் அவர் உயர்வு நீடூழி காலம் குன்றிலிட்ட குன்றாவிளக்கெனப் பொலியும்.

ஸ்ரீ சிவஞான சுவாமிகள் திருவடிவாழ்க.

தி. க. உலகநாதபிள்ளை,
பெஸ்டு அன் கோ., சாலை பஜார், திருவனந்தபுரம்.

குறிப்பு:—இக்கட்டுரை, சங்கம் செய்திருந்ததோர் விளம்பரப்படி எழுதப் பெற்றுள்ள கட்டுரைகளுள் முதன்மையவாகிப், பதினொன்றாம் ஆண்டு விழாவிற் பரிசில் பெற்ற இருகட்டுரைகளுள் ஒன்று. (இ—ர்.)

உ

தனிச் செய்யுட்கள்.

நமது தாய்மொழியாகிய தமிழ்மொழியிலே அவ்வக்காலத்துள்ள தமிழறிஞர்களால் இயற்றப்பெற்ற அருமைச் செய்யுட்களிற் பல நன்கு காக்கப் பெறாமையின், மாய்ந்து ஒழிந்தனவாதலை யாவரும் அறிவர். இக்காலத்துள்ள தமிழறிஞர்கள் இயற்றிய செய்யுட்களுள்ளும் பல மறைந்தொழிந்தன, ஒழிகின்றன எனின், பழைய காலத்துச் செய்யுட்களைப் பற்றிக் கூறுவானேன். இக்காலத்துச் செய்யுட்களேனும், அரிய செய்யுட்களாயின், அவற்றையும் அச்சேற்றிப் பேணுதல் இன்றியமையாதென்பது மிகையாகாது.

திருவாளர் R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் அவ்வப்போது இயற்றிய செய்யுட்கள் பல தக்காங்குப் பேணுதலின்றிக்

குறைந்தும்,மறைந்தும் வருதலை நேரில் உணர்வேன் ஆதலின்,எஞ்சிய வற்றையாவது இவ்விதழ் வாயிலாக வெளியிட்டுவர எண்ணியுளேன். அவர்கள் எழுதியன-தனிச்செய்யுட்களாகவும், இன்பப்பத்து, துன் பப்பத்து, பிணிப்பத்து, இலம்பாட்டுப்பத்து, ஏழைமைப்பத்து (நெஞ்சறிவுறூஉக்கள்) என்றாற்போலப் பத்துப் பத்து என்னும் பெயருடையனவாகவும் பலவகைப்படுவனவாம். அவற்றுள், ஏழை மைப்பத்து அல்லது நெஞ்சறிவுறூஉக்கள் என்னும் பகுதியை முதற்கண் வெளியிடுகின்றேன். ஏனைத் தமிழறிஞர்கள் இயற்றிய செய்யுட்களும் எனக்குக் கிடைக்குமேல், அவைகளையும் மிக்க ஆவ லுடன் இவ்விதழில் வெளியிட்டு வருவேன்.

ஏழைமைப் பத்து என்னும் நெஞ்சறிவுறூஉக்கள்.

க

ஏழையென் நெஞ்சே! ஏழையென் நெஞ்சே!!
கற்றன மென்றும், கணித்திடுஞ் சின்னிலை
உற்றன மென்றும் உன்னினை மயங்கும்
ஏழையென் நெஞ்சே! இயம்புவ சிலகேள்!
கற்றனை யாயிற் கவின்றனை யாயின்
அதற்குறு காட்டாம் அமைதியாங் குளதே?
அகலாக் கவலை ஆங்கடைந் திடுதலென்?
நம்மையும் நம்முறு சிலரொடு தம்மையும்
பேணப் பொருணிலை மாணக் கவல்வையேல்
நின்னின் ஏழையர் நீணிலத் திலரே!
செல்வத் தெல்லை சிந்தையின் நிறையலாற்
பத்தா? நூறா? பன்னுமா யிரமா?
இலக்கமா? கோடியா? ஏனையெண் ணினமா?
காலுங் கையுங் கண்ணுங் கருத்துமே
மூலப் பொருளெனும் முனைவுனக் கிலதே!
நாழியும் ஆம்முழம் நான்கிரண் டன்றோ
வேண்டுவ வெல்லாம்; வேண்டுமிவ் விவற்றை
ஈட்டு நன்னெறிகள் எத்துணை யோவுள!
வருந்தினை யுழைத்திடின் வாய்ந்திடா தனவென்?
வாழ்வது பெரிதெனை மகிழ்ந்தமை யாததென்?

* மன்னர்தம் ஊழியா, ‡ மக்கடம் ஊழியர்,
திருவினர், உருவினர், திறம்படும் ஆடையர்
இன்னரைக் காணுதோ றிழிந்தனை யவரவர்
சிந்தையி னிசைந்தன செப்பியுஞ் செய்தும்
புகழ்ந்தனை திரியும் புன்மைதா னென்னே? அப்
புகன்றவர் புறத்தினிற் போய்க்காத் திடலென்?
இறைவனை யன்றி எந்நலத் தொருவரும்
எமைப் புரந்திடுகென இரந்திடற் குரிய
ஒருபொரு ளல்லெனும் தெருளினைக் கொளாததென்?
தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
எனும்பெரி யாரருள் என்றும் மறவா
துழைத் துண் டமைந்தே ஒருவன
கழற்கன்பு கொண்டு கவினுதி மனனே.

T. V. இரத்தினசாமி.

மழவர் வரலாறு.

பண்டைக்காலத்தில் நம் தமிழகத்தின் ஒரு பகுதியை மழவர் என்ற ஒரு குலத்தினர் ஆட்சி புரிந்துள்ளனரென்பதும், இன்னோர் பெருவீரர்களாயிருந்தமையின் அந்நாளில் தமிழகத்தில் ஆட்சிபுரிந்து வந்த முடியுடை வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்கட்கு உற்றுழியுதவி வந்துள்ளனரென்பதும் அகநானூறு[1] புறநானூறு[2] பதிற்றுப்பத்து[3] முதலான சங்க நூற்களை ஆராய்வார்க்கு இனிது புலப்படும். கடையெழுவள்ளல்களிற் சிலர் இக்குலத்தைச் சேர்ந்தவராவர். வரையாமலீயும் வள்ளல்களாய் முற்காலத்தே பெரும்புகழ் படைத்து நிலவிய அதியமான், நெடுமான், அஞ்சி, ஓரி முதலானோர் தோன்றியது இம்மழவர் குலமெனின் இதற்கு வேறு சிறப்பும் வேண்டுமோ? இத்தகைய பெருமை வாய்ந்த மழவர்

---

* Government servants. ‡ Presidents, Local Boards.

1. அகநானூறு 1, 35, 91, 101, 119, 121, 127, 129, 131, 187, 251, 269, 309, 337. 2. புறநானூறு 90. 3. பதிற்றுப்பத்து 21, 55, 60-பதிகம்.

குலத்தின் வரலாறு நாம் அறிந்து கொள்ளுதற் குரியதொன்றாகலின் அதனைப் பண்டைத் தமிழ் நூற்களின் துணைகொண்டு ஆராய்ந்து அறிய முயல்வோம்.

இனி, இம்மழவர் என்பார் யாவர்? இவர்கள் எவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள்? இவர்களது பழைய நாடு யாது? இன்னோர் தமிழகத்தின் பழைய மக்களா? அன்றி அங்கு இடையிற் குடியேறியவர்களா? மற்றும் இவர்களைப் பற்றிச் சிறப்பாக அறிந்துகொள்ளக் கூடியன யாவை? இவர்களது வழியினராக இப்போது நம் தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றவர் யாவர்? என்பவற்றை ஆராய்வாம்.

மிகப்பழைய காலத்தில் நம் தமிழகத்தின் தென்பகுதியைக் கடல்கொண்டபோது அழிந்தொழிந்த தமிழ் நூற்கள் எத்துணையோ பலவாம்.* அவையொழிய எஞ்சியுள்ள தமிழ் நூற்களில் மிகப் பழைமையானது தொல்காப்பியம் என்ற இலக்கண நூலேயாகும். இந்நூல் அகத்திய முனிவரது மாணாக்கரும், இடைச்சங்கப்புலவருள் ஒருவருமாகிய ஆசிரியர் தொல்காப்பியனாரால் இயற்றப்பெற்றது; நிலந்தருதிருவிற் பாண்டியன் அவைக்களத்தில் அரங்கேற்றப்பெற்றது; இடைச்சங்கத்தார்க்கும், கடைச்சங்கத்தார்க்கும் இலக்கண நூலாக அமையப் பெற்றது. இத்தகைய அருமை வாய்ந்த பழைய நூலில் முற்காலத்தில் தமிழ் மக்களுட் காணப்பட்ட குல வேறுபாடுகள் இனிது கூறப்பட்டுள்ளன. அதனை யாராயுங்கால், பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு வகுப்பினரும் பழைய நாளில் நம் தமிழகத்தில் வாழ்ந்து வந்தனரென்பது மாபியலாற் பெறப்படுகின்றது. அன்றியும், ஆசிரியர் தொல்காப்பியனார் அகத்திணையியலில் கருப்பொருளின் பாகுபாடாகிய மக்கள்திறம் உணர்த்துமிடத்து நிலம்பற்றி வாழும் ஐந்திணைமாக்கள் இருந்தமை கூறுகின்றார். அன்னோர் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்ற ஐந்து வகை நிலங்களிலும் முறையே வாழ்ந்த

---

* ஏரணம் உருவம் யோகம் இசைகணக் கிரதஞ் சாலம்
தாரணம் மறமே சந்தந் தம்பநீர் நிலம் உலோகம்
ஆரணம் பொருளென் றின்ன மானநூல் பலவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மாள.

குறவர், ஆயர், உழவர், வேட்டுவர், பரதவர் என்போர். அவர்களே யன்றிக் குற்றேவன்மாக்களும் தொழிலாளரும் இருந்தனரென்பது அகத்திணையியலிலுள்ள 'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்'‡ என்ற சூத்திரத்தால் அறியக்கிடக்கின்றது. இதுகாறுங் கூறிய பல்வகைப் பிரிவினருள் பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நான்கு வகுப்பினரும் எல்லா நிலங்கட்கும் உரியவராய் அக்காலத்தில் விளங்கிய மக்கள் ஆவர். குறவர், ஆயர், உழவர், வேட்டுவர், பரதவர் ஆகிய ஐந்திணை மக்கள் அவ்வந்நிலத்திற்கே உரியவராய் நிலம்பற்றி வாழ்ந்த மக்கள் ஆவர். குற்றேவன் மாக்களும் தொழிலாளரும் ஐந்திணைமக்களை அடுத்தவராக அக்காலத்தே கருதப்பட்டுள்ளனரென்பது மேற்கூறிய 'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்' என்ற அகத்திணையியற் சூத்திரத்தால் அறியப்படுகின்றது. ஈண்டுத் தொழிலாளர் எனப்பட்டோர் மேற்கூறப்பெற்றவர் தம் வாழ்க்கையை நடாத்துதற்கு இன்றியமையாதவர்களாயுள்ளவர்கள். மேற்கூறிய எல்லோருக்கும் தலைவராய் எல்லா நிலங்களையும் ஆட்சி புரிந்தோர் அவர்களுள் ஒரு வகுப்பினராகிய அரசர் ஆவர். குறிஞ்சி, முல்லை முதலான ஐவகை நிலங்கட்கும் குறவர், ஆயர் முதலான அவ்வந்நிலமக்களுள்ளும் தலைவராயினர் உளர்; அன்னோர் குறும்பொறை நாடன், அண்ணல், ஊரன், மீளி, சேர்ப்பன் என்று அழைக்கப் பெற்றுள்ளனர். அவர்கள் அவ்வந்நிலங்கட்குத் தலைவராயினும் எல்லா நிலங்கட்கும் மக்கட்கும் தலைமை பூண்டு விளங்கிய நெடுமுடி வேந்தர்க்குக்கீழ் வாழ்ந்து வந்தனர்.

(தொடரும்)

T. V. சதாசிவப் பண்டாரத்தார்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
வாணாதுறை ஐஸ்கூல், கும்பகோணம்.

---

‡ தொல்-பொருளதிகாரம்—அகத்திணையியல், சூ. 25.

பாரதமகிமை.*

(தண்டமிழ்த்தொண்டன்.)

பாரதத்தாய்.

தாயே! பாரதத் தாயே! பண்டு நீ
நன்னல மிகுத்த நின்னரும் புதல்வர்
எம்முனோ ராகுஞ் செம்மனச் சீரியர்
தம்மகத் தெளிவா மம்மாற் றொளிரும்
மெய்யறி வதனாற் றுய்யபே ரொளியே
பாத்திப் பாருட் சிறந்தனை யுயர்ந்தே
அறிந்தனெ நூலா லறிஞர்த முரையால்
அவ்வுய ரறிவைச் செவ்விய நினவாம்
இயற்கையின் வளனே செயற்கையின் விளைவே
எனவிவை தம்மாற் றினமுமா றுதொளிர்
நின்புற வழகே யன்பினி லறியச்
செய்தருள் கின்றதா லுய்தியாங் கொள்கெனக்
கொட்புறு நிலையொரீஇத் திட்பமாய்க் காலம்
தன்னை நாளு நன்னர்க் கழிப்பான்
வாழ்க்கையி னிலையாக் கீழ்த்தர நிலையாய்ந்
தோர்ந்துய ருண்மை நெறியினைக் கூர்ந்து
கடைப்பிடித் தொழுகத் திடத்தொடு முயலுறு
நன்மனத் தவருக் கெம்முறு புன்மதி
தனக்குப் போதா தெனக்குறை வாகத்
தோன்றுபே ரிடமே பொருளே யேவலே
என்பவை சிறிதள வென்னினு மின்பமே
தருதலிற் குடிசை வாழ்க்கையே மறுவிலாக்
கோயில்வாழ்க் கையினுக் கேயவின் றீவதாம்
அடியரே மியாமு மவர்மர பினரே

*இத்தலைப்பின் கீழ் வரும் பாக்கள் நாகபட்டினம் சப் ஜட்ஜு ப்ருமஸ்ரீ கு. சுந்தரராம இராமஸ்வாமி சாஸ்திரியார், பி. எ., பி. எல். அவர்கள் அங்கிலத்தில் எழுதிய Vision of India என்ற தலைப்பில் வரும் பதினென்கடிப்பாக்களின் கருத்தைத் தழுவியன.

என்னினு மவ்வுய ரறிவொளி தன்னையாய்ந்
தறியவொட் டாமற் சிறைசெயு மாய
வல்லிரு ளகற்றுந கல்வியே குணமே
செபமே யின்னவெங் கைவரப் பெற்றிலேழ்
உலகினர்க் களிப்பா னலகிலா நின்சீர்க்
கருணையா லெங்கட் கருள்செயப் பெற்ற
ஞான நல்லொளி யானபே ரணியை
மாசுள தாக்கன் மாபோ வன்றால்
நின்னறி வொளியே வன்மையே புகழே
என்பன முன்புள தன்மையி னுயரிய
நிலைமையைப் பெறுவா னுலைவிலா துழைப்பேம்
அடைகுவெ மருளான் மடைதிறந் தோடும்
நினதுநல் லாசிப் பயனொருங் கினியே
செயிரிலா வாழ்வே யன்பே மயலிலா
அறிவே யொளியே யருள்வாய்
பெறுவதுன் புகழே தருவதெந் தவமே.

ஆக்கியோர்:—திருவாளர் வா. ரா. வேங்கடராம ஐயர், அவர்கள்,
தமிழ்ப் பண்டிதர், கும்பகோணம்.

கட்டுரைக் கோவை.

மலர் க.

கடவுள் வணக்கம்.

உலகத்திற் பலதிறப்பட்ட கொள்கையினர் இருக்கின்றனர். அவர்களிற் பெரும்பாலோர் இவ்வுலகம் ஒரு தலைவனால் உண்டாக்கப்பெற்று அவன் ஆணையாலேயே நடைபெற்று வருகிறதென்றும், அவன்தான் அரும் பெரும் கடவுள் என்றும் அறைகின்றனர். ஒருசிலரோ உலகம் இயற்கையாகவே தோன்றி நிலையுறுகின்றதென நிகழ்த்துகின்றனர். இவர்தாம் கடவுள் இல்லை யென்று இயம்பும் கொள்கையினராவர். இவர்களைப்பற்றி ஈண்டுக் கூறவேண்டிய இன்றியமையாமை ஏதும் இல்லை. இக்கட்டுரையும் அத்தகை

யோர்க்கு எட்டுணையும் இன்பம் பயப்பதன்று: முன்னவர்க்கே பயன் தருவதாகும். இனி இக்கட்டுரையைக் கடவுள் யார்? வணங்க வேண்டுவது ஏன்? வணங்குவது எவ்வாறு? என்ற மூன்று பிரிவுகளின்கீழ் ஒவ்வொன்றையும் சுருங்கக் கூறி முடிப்பாம்.

கடவுள் யார்?

இக்கேள்விக்கு ஒவ்வொரு கொள்கையினரும் ஒவ்வொரு விதமான விடையையே தருவர். அவை ஒன்றற்கொன்று மாறுபடுவதும் இயல்பே. அம்மாறுபாடுகளை நவிலத் தொடங்கின் நாவும் போதாது. எழுதத்தொடங்கின் ஏடும் போதா. இம்மாறுபாடுகளே உலகிற்குத் தீங்குபல விளைத்திருக்கின்றவென்பதை உண்மையறிவினர் ஒப்பாதிரார். நமது நாட்டில் சைவர் சிலரும் வைணவர் சிலரும் சமண புத்த மதக் கொள்கையினரைப் படுத்தியபாடும், சமணர் சிலரும் புத்தர் சிலரும் சைவ வைணவர்களைத் துன்புறுத்திய துன்புறுத்தலும், முகம்மதியர்கள் நம் நாட்டினருக்குச் செய்து போந்த இடையூறுகளும், மத வேறுபாட்டால் நிகழ்ந்தனவன்றோ? இந்நாளிலும் இம்மத வேறுபாடுகள் பெரும் இன்னலைத் தருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம் அல்லேமோ? நம் செந்தமிழ் மொழியின் சீர் குன்றுதற்கு ஒருவகையிற் காரணமாயதும் இம்மத வேறுபாடன்றோ? ஆதலால் மாறுபாட்டைத் தரத்தக்க கொள்கைகளை ஈண்டுக் கூற நாம் விரும்பவில்லை. எல்லோரும், எமது கொள்கை! எமது கொள்கை!! என்று இயம்பத் தகுவனவற்றையே எழுதுகின்றோம்.

கடவுள் எத்தகையார்? யார்? என்பனவற்றைக் கூறவந்த அறிஞர் அனைவரும் தாம் தாம் கண்டனவே உண்மையென ஓர்ந்து அவையிற்றை உலகினர்க்கு உணர்த்தி ஒழிந்தனர். அவர்களில் ஒருசாரார் சிவபெருமானே முழுமுதற் கடவுள்: அன்னவரைப் பின்பற்றுவோரே அழிவிலின்பம் அடைவரெனக் கூறுவர். ஒரு சாரார், முகுந்தனே முழுமுதற் கடவுள்: அவர்பால் அன்புடையவரே பரமபதத்தைச் சார்வரெனப் பகர்வர். ஒரு சாரார் அருகரை வணங்குவீர் என அறைவர். ஒரு சாரார் புத்தர் கொள்கையைப் பின்பற்றுமாறு புகலுவர். எல்லா மதத்தினரும், எல்லா நாட்டினரும், எல்லா மொழியினரும் ஒப்புமாறு உண்மை யுரைத்த பெரியார் யாரென்று

ஆராயத் தொடங்கின் திருவள்ளுவரே யன்றிப் பிறிதொருவர் உளரெனக் கூற எவர்தாம் துணிவர்? ஆதலால் அப்பெருமான் உரைத்த உண்மைகளையே உரைக்கின்றாம்.

> அகர முதல எழுத்தெல்லாம், ஆதி
> பகவன் முதற்றே உலகு.

எங்ஙனம் எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாகக் கொண்டிருக்கின்றனவோ அங்ஙனமே உலகம் கடவுளை முதலாக வுடைத்து என்று கூறி, இதனால் கடவுள் ஒருவர் உள்ளார் என்பதை உணர்த்தினார். இனி, அக்கடவுளின் இயலை எங்ஙனம் கூறிச் செல்கின்றார் என்பதைக் கூர்ந்து நோக்குவோம். அக்கடவுள், மெய்யுணர்வினையுடையான் என்னும் கருத்தடங்க வால் அறிவன் என்றும், அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைத்த வடிவோடு விரைந்து சென்று அருள் தருவான் என்னும் கருத்தடங்க மலர்மிசை ஏகினான் என்றும், ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன் என்னும் கருத்தமைய வேண்டுதல்வேண்டாமை இலான் என்றும், மெய்ம்மை சேர்ந்த புகழையுடையவன் என்னும் கருத்தடங்க இறைவன், பொருள்சேர் புகழ் என்றும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளை வழியாகவுடைய ஐந்து அவாவினையும் அறுத்தான் என்னும் கருத்தடங்கப் பொறிவாயில் ஐந்தவித்தான் என்றும், ஒருவாற்றானுந் தனக்கு நிகரில்லாதவன் என்னும் கருத்தடங்கத் தனக்குவமை இல்லாதான் என்றும், அறக்கடலாகிய செந்தண்மையை யுடையோன் என்னும் கருத்தடங்க அறவாழி அந்தணன் என்றும், தன் வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பமுடைமை என்ற எட்டுக் குணங்களையும் உடையவன் என்னும் கருத்தடங்க எண்குணத்தான் என்றும், மேற்கூறிய இயல்களையுடையவனே உலகத்தலைவனாகிய முழுமுதற் கடவுள் என்பது தோன்ற இறுதியில் இறைவன் என்றும் கூறினார். இங்ஙனம் திருவள்ளுவனாராற் கூறப்பெற்ற இவ்விறைவனை ஒப்பாதார் ஒருவரும இலர். கடவுள் உண்டு என்று உரைப்போர் எவரும் உண்மை! உண்மை!! எனப் புகழ்ந்து உவகையங் கடலுள் ஆழ்வரன்றோ? மேற்கூறப்பட்ட குணங்களை யுடையவர் எவரோ அவர்தான் உலகத் தலைவராகிய கடவுள் ஆவர்.

வணங்க வேண்டுவது ஏன்?

எல்லா நூல்களையும் கற்றவர் அக்கல்வி யறிவினால் ஆய பயனைப் பெற விரும்புவராயின் கடவுள் திருவடிகளை வணங்க வேண்டும். இடும்பையின்றி இனிது வாழ எண்ணுகின்றவர்களும், பொருளாலும் இன்பத்தாலும் வரும் காதற் கடலைக் கடக்கக் கருதுவோரும், பிறவிப் பெருங்கடலை நீந்த நினைக்கின்றவரும், எவ்வுலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் நீடுவாழ நினைக்கின்றவரும், கடவுளின் திருவருட்பேறன்றி வேறு எவ்வாற்றால் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும்? அன்றியும் தன்னைப் படைத்துக் காக்கும் அக்கடவுளை வணங்காதிருந்தால் நாம் செய்ந்நன்றி கொன்றவ ராவோம். அவர் எப்பொழுதும் நம்மிடம் இருந்து கொண்டு நாம் செய்யும் நன்மைகளையும், தீமைகளையும் உற்றுநோக்கிக் கொண்டே யுள்ளார். நாம் நன்மை செய்தால் அதற்குத்தக நமக்கு மறுவுலகில் நன்மையைத் தருகின்றார். தீமை செய்தால் அதற்குத்தக மறுவுலகில் தீமையை யடைகின்றோம். ஆதலால் நாம் நம்மைப் படைத்த கடவுளை இடைவிடாது நினைத்து வணங்கும் கடப்பாடு உடையோம். இதை விடுத்துச் சிலர் பெண்டிரும் உண்டியும் இன்றெனின் மக்கட்கு உண்டோ ஞாலத்து உறுபயன்? என்னும் கொள்கையினை யுடையவராய்த் திரிகின்றனர். அந்தோ! இவர் மீளா நரகுக்கன்றோ ஆளாவர்? இவ்வுலக வாழ்வைப் பெரிதெனவெண்ணிக் கடவுளை மறக்கின்றனர். அன்னவர் 'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்' என்ற திருமொழியையும் மறந்தனரே? இத்தகைய தன்மைகள் நம்மிடை அணுகாதிருக்கக் கடவதாக. நாம் என்றும் கடவுளை வணங்குவோமாக.

வணங்குவது எவ்வாறு?

நமக்கு உடன்பாடுள்ள கடவுளின்பால் இடைவிடாத அன்பு செலுத்தி அருட் பாடல்களைப் பாடி மனங் கசிந்து வணங்குதல் வேண்டும். அக்கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்து விளங்குகின்றார் ஆகலின், அவர் படைப்பிற்குட்பட்ட ஒவ்வொரு உயிர்ப் பொருள்களிடத்தும் இரக்கங்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். தன்னுயிர் போல மன்னுயிர்களையும் நினைத்துப் போற்றுதல் வேண்டும். தன்னையொத்த மக்கள்பலர் துன்புறும் காலத்தில் அவர்க்கு

ஆவன புரிந்து அவர் துயரைப் போக்காமல் தான் கடவுளைப் பணி கின்றதாகக் கூறி ஒதுங்கி யிருக்கின்றவன் கடவுளுக்கு வணக்கம் செய்தவனாகமாட்டான். பிறவுயிர்களைக் கொன்று தின்றுகொண்டு தான் கடவுள்மீது மிக்க அன்புடையவனாய் இருப்பதுபோல் நடிப்பவனும் கடவுள் வணக்கம் செய்தவனாகமாட்டான். ஒருவன் கடவுளை நினைக்காதவனா யிருந்தாலும், அவன்

இவ்வுல குறையும் எவ்வுயிர் தமக்கும்
இன்னல் புரியா இயற்கை யாளனாய்
இயலும நன்மையை எஞ்சா நியற்றும்
கருத்துடை யவனே கடவுள் தம்மை
மகிழ்வுறச் செய்யும் மகனா வானே.

என்று அறிதல் வேண்டும். ஆகவே கடவுள் வணக்கத்திற்கு இன்றியமையாக் கருவி பிறவுயிர்கள்பால் இரக்கமுறுதலே.

சிலர் பிறர் கொண்ட கடவுளை இகழ்ந்துரைத்தலை மேற்கொள்ளுகின்றனர். இச்செயல் அறிவாளிகள் அனைவராலும் வெறுக்கத் தக்க தொன்றாம். இத்தகைய செயலுடையோர் தாம் கொண்ட கடவுளை எவ்வளவு உள்ளன்புடன் போற்றினாராயினும் அவர் உண்மையான கடவுள் வணக்கம் உடையரல்லர். இவர் அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் கடவுளாய் நின்றவர் ஒருவரே யென்பதை உணராதவரன்றோ? பிறர் கடவுளை இகழ்கின்றவர் தம கடவுளையே இகழ்கின்றவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆகையால் ஒவ்வொருவரும் தாம் தாம் கொண்ட கடவுளையே பெரிதாக எண்ணிப் போற்றுதல் வேண்டும். பிறர் கொள்கையின்பால் வெறுப்படைதல் கூடாது. அப்பொழுதுதான் உலகத்தில் ஒற்றுமை நின்று நிலவும். மக்கள் அனைவரும் நன்மை யடைவர். எல்லாம் ஒன்று என்று நினைப்பதே உயர்ந்த தென்பதை அறிஞர்கள் உணர்வார்களாக.

சா. சிதம்பரன்,
கரந்தை.

உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: க. குரோதன-வைகாசி. மலர்: உ.

உ

நாட்டுப் புறங்களின் கல்வியும், நாட்டாண்மைக் கழகங்களின் கடமையும்.

ஒரு நாட்டின் தாய்மொழி வளர்ச்சியோ, தளர்ச்சியோ அந்நாட்டின் கல்விமுறையைப்பற்றி நிற்கின்றது. நமது தாய்மொழியாகிய தமிழ்மொழியின் பண்டை வளர்ச்சிக்கும், இதுபோதுள்ள தளர்ச்சிக்கும் ஏதுவாயின நமது நாட்டில் பண்டும் இன்றும் உள்ள கல்விமுறைகளாகும். ஆகவே, நமது நாட்டின் கல்விமுறையை ஆராய்வான் புக்கேம், அதனை நாட்டுப்புறங்களின் கல்வி, நகரங்களின் தொடக்கக் கல்வி, நகரங்களின் மேற்கல்வி எனும் முப்பிரிவினதாக வகுத்து, முதற்கண் நிற்கும் நாட்டுப்புறங்களின் கல்வியை, அதனோடு முற்றும் இணைந்துநிற்கும் நாட்டாண்மைக் கழகங்களின் கடமையுடன் எடுத்துரைக்கின்றாம்.

கல்விப் பயிற்சி முறையானது சிலகாலமாக நாளுக்குநாள் மாறுபட்டு வருகின்றது. இதுகாறும் ‘இதுவே சிறந்தது, இதுவே முடிவானது’ என எதுவும் துணியப்பட்டிலது. இவ்வுண்மைக்குக் கல்விப்பயிற்சிமுறையில் அவ்வப்போது காணும் மாறுதல்களே ஏற்ற சான்றுகள். ஒரு நாட்டின் கல்விமுறை

எத்தகைய சிறப்புக்களைக் கொண்டுள்ளதாயினும் ஆக: அது அந்நாட்டினர் 'நித்தல் நிகழ்ச்சி' யாகிய குடிவாழ்க்கைக்கு முற்றும் பொருந்திய தொன்றாக விருத்தல் இன்றியமையாததன்றே? மக்கள் வாழ்க்கையிலேயாகிய 'உடம்பிற்குக் கண் போன்று இன்றியமையாத உறுப்பாகி உதவவேண்டுவது கலைத்துறையே யாகும். இவ்வுண்மையினை 'எண்ணும் எழுத்தும் (= கல்விநெறி) கண்ணெனத் தகும்', 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ் விரண்டும்—கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்ற தமிழ்ப் பெரியார்கள் வாய்மொழிகளால் உணரலாம். 'பொருந்து கல்வி' என்பர் கம்பர். ஆகவே, நமது நாட்டுப்புறங்களில் இதுகாலை நிகழும் கல்விமுறை அவர்தம் குடிவாழ்க்கைக்கு எத்துணைத் தூரம் பொருந்தியுளது எனச் சிறிது ஆராய்வாம்.

நாட்டுப் புறங்களிற் பயிலத்தகும் கல்வி, முற்றும் தொடக்கக் கல்வியேயாம். தொடக்கக் கல்வி, இதுகாலை, படித்தல் எழுதல், கணக்குப் பார்த்தல் எனும் 'முக்கலை'யாக முடியும். நமது முன்னோர் தொடக்கக்கல்வியின் பிரிவினவாகக் கொண்டவையும் இவையே. அவர்கள் கணக்கினை 'எண்' என்பர். படித்தல், எழுதல் இரண்டினையும் 'எழுத்து' என்பர். 'எண்ணும் எழுத்தும்', 'எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்' என்பன காண்க. இங்ஙனம் எழுதவும், படிக்கவும், கணக்குப்பார்க்கவும் கற்றுக்கோடலாகிய தொடக்கக் கல்வியானே, அவர்கள், தங்கள் வாழ்க்கையிலேக் குரிய பல்வகை யறிவுகளையும் பெற வேண்டியோர் ஆவர். மேலும், நாட்டுப்புறச் சிறுவர்கள், 'என்னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு' என்னுங் குறட்கு இலக்காகி, மனைவி மக்களைப் பெற்றும் கலாசாலைகளிற் கல்வி பயிலும் பெரும்பேறு வாய்ந்த நகர மக்களைப் போல்வா ரல்லர். இவர்தம் பிழைப்புநெறி பற்றிய வேளாண்மைத் தொழில் ஐந்தாண்டு புகுவதற்கு முன்னும் தொடரும். அல்லும் பகலும் அகலாது மேவும். வாணாள் முற்றும் நிலையும். தங்கள் ஊர்க்கு ஓர் பள்ளிக்கூடம் அமைதலாம் நல்லூழும், தங்கட்குச் சிறிது

படித்தற்குரிய நல்லூழும் ஒருங்கு உளவாயவழி, மிகின், இரண்டு மூன்றாண்டுகள் பள்ளிக்கூடம் சென்று படித்தற்கு உரியார் இவர்கள். எனவே, நாட்டுப்புற மாணவர்கள், மேற்கூறிய தொடக்கக் கல்வியானே, மேற்கூறிய சிற்றெல்லையினுள்ளே, தம் குடிவாழ்க்கைக்கு இன்றியமையாது தாம் அறிதற்குரியன பலவற்றையும் அறிய வேண்டுவார் ஆகின்றனர்.

இனி, நாட்டுப்புற மாணவர்க்கு வேண்டும் முக்கலையினுள், படித்தல், எழுதல் என்னும் இரண்டினையும் முன்னர் எடுத்துக் கொள்வாம். பண்டைப் படிப்புமுறையில், தமிழ் எழுத்துக்கள், பேரறிஞர்களாய முனிவரர்கள் பற்பல சிறந்த ஏதுக்களைப் பற்றி அகரம் முதலாக அமைத்துள்ள முறைகொண்டு, பயிற்றப் பட்டன; ஆனால், இக்காலத்தோ, ஆங்கில அறிஞர்கள் அம்முறை வைப்பின் கருத்தும், நயமும் சிறிதும் ஓர்ந்திலராய், தத்தம் மனம் போன போக்கில், டகரம், மகரம் முதலாய எழுத்துக்களை முன்னர் அமைத்து எழுதிய பாடங்களைக்கொண்டு பயிற்றப்பட்டு வருகின்றன. இங்ஙனம் பழைய முறையை மாற்றியதற்குக் கூறப்படும் காரணங்களுட் 'காலச்சுருக்கமுடைய முறை' யென்பதும் ஒன்றாகும். அஃது உண்மையாயின், மிகச் சுருங்கிய காலத்திற் கல்விபெறவேண்டும் நாட்டுப் புறத்தினர்க்கே ஒரு நல்விருந்தாகும். அந்தோ ! அங்ஙனம் இன்றே ! புதுமுறைப் பாடங்களில் உள்ள எழுத்துக்களை மட்டில் உணர்ந்துகொள்ளும் மாணவர்கள், பல வகுப்புக்கள் கடந்தும், சில எழுத்துக்களையே உணர்கின்றிலரே. தமிழிலுள்ள எழுத்துக்களை யெல்லாம் ஒருங்கே நிரல்பட அறியா இவர்கட்குப் பிற்காலத்தே அகராதி பார்க்கும் வழிதானும் தெரிந்திலதே. மற்றும், 'எளிதில் எழுதி அறியும் எழுத்துக்களாதலின் டகரம்முதலிய நேர் கோட்டெழுத்துக்கள் முன் வைக்கப்பெற்றுள' என்பதொரு காரணமாம். என்னே இக்கூற்று! சிறுவர்கள் கையில் எழுதுகருவி யளித்து, அவர்கள் தாமாக விரும்பியதை வரையச்செய்து பார்க்கின், அவர்கள் மனது எளிதிற் சுழி சுழியாக வரைவதிற் செல்வதும், நேர்க் கோடுகளாக வரைவதிற்

செல்லாமையும் கண்கூடாகக் கண்டறியலாம். ஆ! இப் புதுமுறையாளர் கற்றுணர்ந்த ஆங்கில மொழி முதலிய எம்மொழியிலும் கையெழுத்துக்கள் நேர்க் கோட்டிற் றொடங்குவது அறிந்திலமே! மேல் வாசகங்களிலோ, நாட்டுப்புறத்தார்க்கு இன்றியமையாது வேண்டுவன சிறிதுங் காணப்படாமல், ஐரோப்பாக்கண்டத்துள்ள 'இலண்டன்' முதலிய நகரங்களின் சிறப்பும், ஆங்குள்ள பலர் வரலாறுகளும், பிறவும் பாடமாக அமைந்துள்ளன. இங்ஙனமாய புதுமுறை வாசகங்கள் பலவற்றில் அமைந்துள பல்வகைப் பிழைபாடுகளையெல்லாம் எடுத்துரைப்பது எமது நோக்கம் அன்றாயினும், அவை நமது நாட்டுப்புறத்துச் சிறுவர் கல்விக்குப் பெரும்பயன் படுவனவல்ல என்பதை எடுத்துரைக்க வேண்டியேம் ஆகின்றேம். முற்காலத்திருந்த ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நீதிநூற் செய்யுள் மிக இன்றியமையாதனவாகவும், அவற்றை முழுவதும் ஒழித்தோ, சிலவற்றைப் பொறுக்கி முறைபிறழ அமைத்தோ இவ்வாசகங்கள் தோன்றுகின்றன. அந்நாட்டுப் புறத்தினர்க்கு அண்மையில் உளவாய், அவர்களால் நாடோறும் உணரப்படும் பொருள்களைக்கொண்டு, பொருட்பாடமாக விளங்கும் வாக்குண்டாம் முதலாய நீதி நூல்களின் பாட்டுக்கட்கும், இக்காலத்தே புதிது தோன்றும் பலவகை அபிநயப் பாட்டுக்கள், கதைப்பாட்டுக்கள் முதலியவற்றிற்கும் உள்ள உயர்வு தாழ்வுகள் அறிஞர்களால் உணரப்படுவன. எது எங்ஙனமாயினும், நமது நாட்டுப்புறச் சிறுவர்கட்கு எத்தகைப் புது நூல்கள் பயிற்றப்படினும், பண்டைப் பயிற்சியில் அமைந்து கிடந்த நீதிநூல்கள் இன்றியமையாத முறையாகப் பயிற்றப்படல் வேண்டும். இனி, தொடக்கக் கல்விபோய் நின்றுவிடும் இம் மாணவர்கட்குப் பிற்காலத்தே பல்வகைக் கையெழுத்துக்களையும் படித்துணரும் இன்றியமையாமையே மிகுதலின், அச்சு நூல்களினும் பன்மடங்கு கையெழுத்துவகைகளின் பயிற்சியிருத்தல் வேண்டும். பனையேட்டில் எழுதவேண்டும் இன்றியமையாமை நாட்டுப் புறங்களில் இன்னும் நின்று நிலவலின், கையெழுத்துப் பயிற்சி, ஏட்டிலும், தாளிலும் ஒருங்கே நிகழ்தல் வேண்டும்.

இனி, நாட்டுப்புறமாணவர்கட்கு வேண்டும் கணக்கு, பின்னமன்று; உத்தமப் பொது மடங்கு அன்று; அதமப் பொது அளவு அன்று; தசாம்சம் அன்று; இன்னோரன்ன எதுவும் அன்று. அவர்கட்கு வேண்டும் கணக்கெல்லாம் இலக்கம்; நெல் இலக்கம்; கீழ்வாயிலக்கம், குழிமாற்று, சதுர முதலிய எண்சுவடி இவற்றுள் அடங்கிவிடும். 'கலம் மூன்றரையே அரைக்காலும் பைசா ஆறும் ஆயின், ஒரு படி நெல் எவ்வளவெனக் கணக்கிடப் பெரிய தாளும், பல நாழிகை நேரமும் அவர்கட்குக் கிட்டுதல் இல்லை. அவற்றை உடனே பார்த்துச் சொல்லவேண்டும் மனம் ஒன்றே உடைய எளிய நிலையினராதலின், அவர்கட்கு ஆங்கிலக் கணக்கு முறையின் பெருமை ஒவ்வாததாகும். மேற்கூறிய எளிய கணக்கு முறைகளே போதியனவாகும்.

இனி, இவ்வாறுய படித்தல், எழுதல், கணக்குக்களைக் கொண்டு நமது நாட்டுப் புறமாணவர்கள் பள்ளியில் உணர்ந்து கோடற்குரிய பொது அறிவுகள் பல. அவற்றுட் சிற்சிலவற்றை ஈங்குக் கூறுவாம். பொதுவாகவே, கல்வி பயிலும் மாணவர்கள் ஆசியாக்கண்டத்தின் எல்லை, ஐரோப்பாக் கண்டத்தின் உட்பிரிவாய தேயங்கள், அமெரிக்காக் கண்டத்தின் ஆறு, மலை, மேடு, பள்ளங்கள், ஆப்பிரிக்காவின் அரசியல் நிலைகள் முதலியனவற்றையெல்லாம் உணர்வதன் முன்னர் உணரற்பாலன: தங்கள் ஊர், நாடு, நகரம், தேயம் முதலியனவற்றின் எல்லை, பிரிவு, நிலை முதலியனவா மன்றே. ஆகவே, ஒரு நாட்டுப்புற மாணவன் முதலாவதாகத் தன் ஊரின் பெயர்க் காரணம் யாது? தன் ஊரைச் சுற்றிய ஊர்கள் (எல்லை) யாவை? தன் ஊரின் முற்றளவு (விஸ்தீரணம்) யாது? அதன்கண் உள்ள நன்செய், புன்செய், தோட்டம், குடியிருப்பு, புறம்போக்கு முதலாய பொதுநிலைகள் முதலியவற்றின் தனித்தனி அளவு யாவை? என்றின்னோரன்னவற்றை நன்கு உணர்தலோடு தன் ஊரைப்பற்றிய படத்தில் மேற்கூறிய பல்வகை யமைப்புக்களையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இதன் சார்பாக அம்மாணவன் நிலம் அளப்பதற்கு ஆங்காங்கு

வழங்கும் சில்வகை அளவு கருவிகளின் வகைகளையும், (கோல், சங்கிலி முதலியன) ஒரு நிலத்தைத் தானே அளந்து பெருக்கி முற்றளவு காணும் வகையும், ஒரு நிலத்தை வேண்டியாங்கு பிரித்துப் பங்கிடும் ஆற்றலும் பழக்க வகையான் உணர்தல் வேண்டும். இரண்டாவதாக, நிலங்களில், பயிரிடுங்குடிகள், நிலக்கிழவர், மேலுரிமையாளராகிய அரசியலார் முதலியோர் எனும் இவர்கட்கு உரிய உரிமைகள் யாவை? விளைவுப் பொருள் (தானியம்) பற்றியாதல், தொகைபற்றியாதல் அவரவர் பெறலாகும் பகுதிகள் எத்தகையன? எவ்வளவின? எனும் இவற்றை நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவற்றொடு அந்நிலங்களைப் பற்றியனவும், காரணக் கருதியோ, காரணமேயின்மையின் இடு குறியாகவோ அமைந்துள்ளவுமான சாலைவரி, தண்ணீர்வரி, ஊர் ஊழியர்வரி, காவல்வரி, கல்விவரி முதலிய பல வரிகளின் போக்கையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். மூன்றாவதாக, பயிரிடப்படும் ஒவ்வொரு கூல (தானிய)த்தின் விதைப்பு, நடவு காலங்கள், அறுப்புக்காலங்கள் முதலிய காலவகைகளையும், விளைந்த நிலையில் அவ்வந்நிலத்தேயுள்ள விளைபொருளின் மதிப்பும் (காணும் புள்ளி) பழக்கத்தான் உணர்தல் வேண்டும். தானியங்களைப் பங்கிடு செய்யவோ, தொகைகாணவோ அளந்து பழகுதல் வேண்டும். நான்காவதாக, வெளியிடங்களிலிருந்து வரும் அஞ்சல் (தபால்) களைப் படித்தறியவும், தாங்களாகவே அஞ்சல் எழுதியனுப்பவும் பழகியறிதல்வேண்டும். மேலும், தங்கள் தங்கள் ஊர்க்கேற்ற வகையில் பலவகைச் சீட்டுக்கள் (பத்திரங்கள்) முதலிய எழுதும் பழக்கம் பெறுதல்வேண்டும். இன்னும், பஞ்சாங்கம் பார்த்து நாள், யோகம் முதலியன கூறத்தெரிந்துகொள்ளுதல் வேண்டும். ஐந்தாவதாக, அறநெறிமன்றம் (பஞ்சாயத்துச் சபை) ஒற்றுமைச் சங்கம் (ஐக்கிய நாணயச்சங்கம்) முதலியவற்றின் ஒழுங்குமுதலியன தெரிந்துகொள்ளுதல்வேண்டும் ஆறாவதாக, தங்கள் ஓய்வுகாலப் பிற்கால வாழ்க்கையில் உள்ள ஓய்வுகளைப் பயன்படுத்த வல்லனவும், சிறுகைத்தொழில்களுமாகிய பாய்பின்னல், நூல்நூற்றல், நெய்தல் முதலியனவற்றில் இயன்ற பழக்

கங்கள் செய்து கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் இவர்கள் கலை பயிலுங்காலத்து உணரற்குரிய பொது அறிவுகள் பலவாகலின் விரிவஞ்சி விடுத்தேம். ஆயினும், யாவற்றினும் முதன்மையினதாகிய ஒன்றுண்டு. அதுவே, நித்தல் நிகழ்ச்சியாகிய காலைமுதல் மாலை வரையிலுள்ள கடமைகளை ஒழுங்குபெற நடாத்தப் பழகுவதனொடு, நாளும் ஆலயங்கட்குச்சென்று இறைவனை வணங்கி வழிபடும் முறைமையினை உணர்தல். இவ்வொரு பழக்கம் நாட்டுப்புறமாணவர்கள்பாற் பண்டெல்லாம் நன்கு அமைந்துளது. புதுக் கல்வி முறையில் இது இன்றியமையாததொன்றாகக் கருதப்படாமையின் நெகிழவிடப்பட்டது.

இனி, நாட்டுப்புறங்களின் கல்விநிலையில் உளதாய மாறுதல் பாடங்களைப் பற்றிய அளவில் நில்லாது, ஆசிரியர்களைப் பற்றியதும் ஆயிற்று. நாட்டுப் புறங்களிற் பன்னெடுங் காலமாகத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்துவந்தன. அவற்றின் ஆசிரியர்களிற் பலர் நாட்டுப்புற வழக்குக்களையும், நாட்டுப்புறத்தார்க்கு வேண்டுங் கல்வி முறைகளையும் உணர்ந்தாராக விருந்தனர். அவர்கள் சிறந்த பண்டிதர்களாக இலராயினும், தாய்மொழியில் பொது வகையான அறிவும், மிக்க ஆர்வமும் உடையராயினர். ஆசிரிய அமைதியிற் சிறந்ததொன்றாகிய தெய்வங் கொள்கையும், பிற உயர் குணங்களும் உடையராயினர். ஆகவே அவர்கள்பாற் பயின்ற பண்டை மாணவர்கள், தங்கள் நாட்டுப்புறங்கட்கு வேண்டுங் கலையறிவுடையராதலோடு, தெய்வக்கொள்கை, ஆசிரிய அன்பு முதலிய உயர்குணங்களும் உடைய ராயினர். இந்நிலையில், கல்வியிலாக்காதார் தோன்றி; இந்நாட்டுப்புறங்களின் கல்வியினும் தலையிட்டகாலை, ஆங்கில கலாசாலையிற் சிறிதளவு பயின்று அப்பயிற்சிக்கும்---பழக்கக் கல்லூரியில் உளதாம் காலப்போக்கினால்--பெரியதோர் இடைவெளிதந்துவரும் ஆசிரியர்கட்கு (Elementary Trained Teachers) முதன்மை தருவாராயினர். தரவே, இந்நாட்டுப்புறத்துப் பண்டை ஆசிரியர்களுட் பலர் குறைந்தும், சிலர் புது முறைப் பழக்க ஆசிரியர்களாக மாறியும்

போக, இதுபோது எங்கும் பெரிதும் 'தொடக்கக்கல்விப் பழக்க ஆசிரியர்கள்' கூட்டமே நிறைந்தது. இவ்வாசிரியர்கள் நடையுடைகளாற் சிறந்த நமது கண்கவர் வனப்பினராக மேவினும், நாம் மேற்கூறியாங்கு நாட்டுப்புறத்தார்க்கு இன்றியமையாக்கலை யுணர்ச்சியிலராதல் பற்றியே கவல்கின்றேம். இவர்களுட் பலர் நகரத்திலே பிறந்து, நகரத்திலே வளர்ந்து, தாம் எப்போதாவது செல்லும் நாட்டுப்புறங்களையும், தமது நகருக்கு அவ்வப்போது வரும் நாட்டுப்புறத்தார்களையும் ஏளனஞ் செய்துகொண்டிருப்பவர்கள். நகரங்களில் ஆசிரியத்தொழில் கிட்டாததால், கிட்டும் வரை, நாட்டுப்புற ஆசிரிய வேலையைக்—குழந்தைகள் வேப்ப நெய்யைக் கொள்வதெனத்—தலைநடுக்கத்தொடு கொண்டவர்கள். நாட்டுப்புறக் குடியிருப்பும், அவர்களொடு அளவளாவிப் பழகுதலும் மனங்கொள்ளாமல், நகரத்திலிருந்துகொண்டே அன்றன்று போய்வருபவர்கள். ஈங்குக் குறித்த ஆசிரியர்கள் நாட்டுப்புறங்களை இனி எந்நிலைக்குக் கொணர்வரோ அறியேம்.

இனி, மாண்புற்ற ஆங்கில அரசினர் நம் இந்தியக் குடிமக்கட்குத் தந்துள்ள உரிமைகளுள் 'கல்விநிலை' ஒன்று. இவ்வுரிமையின் ஆட்சி எங்கும் பரவி வந்தது, நாட்டுப் புறங்களினும் நுழைந்துளது. நாட்டுப்புறங்களின் சார்பினர் கூட்டமாகிய நாட்டாண்மைக் கழகத்தினர் நாட்டுப் புறங்களின் கல்வியைப்போற்றி வளர்க்கும் முழுஉரிமையும், கடமையும் உடையோராவர். இவர்கள் மேற்கொண்டுள்ளகடமைகள் மிகப்பலவெனல் உண்மையே. நாட்டுப்புறங்களிற் கல்வியை விருத்தி செய்தல், நடைசாலை அமைத்தல், குளம், கிணறு வெட்டல் முதலாக எத்துணையோ அரிய செயல்கள் அவர்கள் ஆட்சியிற் படுவனவாகும். எல்லாவற்றினுஞ் சிறந்ததொன்று அவ்வவ்வூரார்கள் தங்கள் தங்கட்கு வேண்டும் எல்லா நன்மைகளையும், தாங்களே உணர்ந்து, தாங்களே செய்துகோடற்குரிய அறிவை அவர்கட்கு உண்டாக்குவதேயாம். இச்செயல் கல்வியறிவொன்றாலே யாகும். (தொடரும்.)

இதழாசிரியர்.

உ

தமிழ்மொழியும் தமிழ்மக்களுயர்வும்.

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்று—மாங்கவற்றுண்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நா
டொத்தி ருக்குமென் றுலுரை யொக்குமோ
வெத்தி றத்தினு மேழுல கும்புகழ்
முத்து முத்தமி ழுந்தந்து முற்றுமோ ?

ஈண்டுப் போதரும் கட்டுரை தமிழும் தமிழ் மக்கள் உயர்வும் என்னும் பொருளினைக் கொண்டதாம். இது, தமிழும், அதுபற்றிய வினாக்கள், கொள்கைகள் இவற்றின் ஆராய்ச்சியும், தமிழின் சிறப்பும், தமிழ் மக்களது தொன்மையும், வள்ளன்மையும், வீரமும், கற்பும், பெருந்தன்மையும் என வகுக்கப்படலாகும். இனி, இவ்வகையினை அடிப்படையாகக்கொண்டு இவ்வுரையின் விரிவினைக் கட்டிமுடிப்போம்.

தன்னேரிலாத தமிழ்.

மக்கள் வழங்கும் மொழிகள் எண்ணிறந்தன. அவற்றுள் இக்காலத்து மொழிநூல் வல்லுநராற் சிறந்தனவென்று கொள்ளப்படுவன சிலவேயாகும். அவைதாம் தமிழ், சீனம், ஆரியம், கிரீக்கு, இலத்தீன், இத்தாலியன், பிரஞ்சு, இசுபானியம், ஆங்கிலம் என்பன. இவற்றுள் கடையன மூன்றும் மிகப் பிற்காலத்

இது, சங்கத்துப் பதினொன்றாம் ஆண்டு விழாவிற் பரிசுபெற்ற மற்றோர் கட்டுரை.

தத்தோன்றியன. இடையன மூன்றும் வழக்கினின்று வீழ்ந்தன. சினம் இருந்து மிராத மொழியாய் நிற்கின்றது. இவ்வெல்லா மொழிகளுக்கும் முன்னர்த்தோன்றிய அமிழ்தினுமினிய தமிழ்மொழி இன்றும் நாவினும், வழக்கினும் நின்று நிலவுகின்றது. இவ்வாறு நிலவுதற்குரிய பெருமை தமிழுக்கெவ்வாறு போந்தது? தமிழ் ஒலியிலக்கண வல்லுநராய திருவாளர், பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் 'தமிழ் இயற்கை மொழி, அதன் இலக்கணம் இயற்கைக் கட்டுப்பாடுகளுக்கு முரண்படாமல் அமைந்திருக்கின்றது, அதனால் தமிழ் அழிவுறாது' என்பர். தமிழ் அன்னையின் இக்கன்னித் தன்மையை நினைத்தன்றோ காலஞ்சென்ற திருவாளர், பே. சுந்தரம்பிள்ளையவர்கள் 'ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன் — சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே' என்று பாடினர். தமிழுக்கு இவ்வாற்றல் எவ்வாறுண்டாயிருப்பினும், அது இன்னும் நின்று நிலவுகின்றதென்ற வுண்மையினை எவரும் ஒப்புவார்கள்.

அரவம்.

தெக்கணத்து மகமதியரும், தெலுங்கர், கன்னடரும் தமிழ் மொழியை அரவம் என்ற பெயரினலழைக்கின்றனர். இப்பெயர் தோன்றியதன் பொருட்டைப் பலர் பலவாறு கூறுகின்றனர். ஒருசிலர், அறிவு அல்லது அறம் என்னும் பெயர்களினடியாகத் தோன்றியிருத்தல் சாலுமென மொழிவர். மற்றுஞ்சிலர் கொடுந்தமிழ் நாடுகளில் ஒன்றின்பேராகிய அருவா என்னுஞ் சொல்லினின்றும் போந்ததென்பர். தமிழ் மக்கள் தங்களது மொழியை இப்பெயரான் வழங்கின ரென்பதற்கு ஒருவகைப் பொருட்டுமின்றாகலின், இதனை ஆராய்வதிற் பயனின்றாம். எனினும், தமிழைப்பற்றியோ தமிழ் மக்களைப்பற்றியோ பிறர் எவ்வாறெண்ணினர் என்பதையுணர்வது இக்கட்டுரைக்குப் பொருத்தமானதேயாகும். தெலுங்கப்புலவர் சிலர் அருவா என்பது ஓர் வடமொழிச் சொல்லென மொழிவர். அதன் பொருள் ஓசையில்லாததாம். அஃதாவது உயிர்ப்பொலிகள் இல்லாத மொழியாகும்.

தமிழில் உயிர்ப்பொலிகள் மிகுந்தில்லாததனால் தெலுங்கர் அதனை அரவம் என்று எள்ளினர். உயிர்ப்பொலிகளை மிக்கிருந்த வட மொழிக்குண்டாய கதியை அவருணரார். திருவாளர், நாயக் கரவர்கள் உயிர்ப்பொலிகள் அருகியிருப்பதே தமிழின் வலிமைக்குப் பொருட்டெனமொழிவர். தெலுங்கமொழி வட மொழிக் கூட்டுறவைநாடி நின்றமையின் தெலுங்கர் தென்மொழியை இவ்வாறு எள்ளினர்போலும்!

திராவிடம்.

சிறந்த ஆராய்ச்சியாளராய காலடுவேலர் தமிழ் என்னுஞ் சொல் திராவிடம் என்னும் ஆரியச்சொல்லினின்று மருவிவந்த தென்பர். திராவிடம் என்னுஞ்சொல் திரமிட, திரமிள, தமிள எனமாறி முடிவில் தமிழென நின்றதாம். இவர் ஒலியிலக்கணப் படி தமிழ் என்னுஞ் சொல்லே திராவிடமென மாறியதெனக் கொண்டாலும் குற்றமில்லையாகும். இக்கொள்கைக்குக் காலடுவேலர் காட்டு மாதரவு பழைய வடமொழி நூல்களில் திராவிடம் என்னுஞ்சொல் பயின்றிருப்பதேதான். ஆனால் ஒரு மொழியின் பெயரைப் பிறிதொரு மொழியில் வழங்கும் ஒரு சொல்லினின்று மருவிவந்ததென்று சொல்லுதல் ஒலியிலக்கணத்திற்குப் பொருத்தமாகுமோ? ஆங்கிலமக்கள் கட்டுமரம் என்னுந் தமிழ்ப்பெயரைக் கட்டுமரான் என வழங்குவதனால் அவ்வாங்கிலச் சொல்லினின்று கட்டுமரம் என்னும் பெயர் தோன்றியதாகக் கொள்ளவேண்டுமோ? பொருட்டின்றிப் பெயரொன்று தோன்றியிராதேயெனின், உடன்படுவோம். தெலுங்கர் அரவம் எனச் சொல்வதே போன்று வடமொழியாளரும் தமிழை எப்பொருட்டாலோ திராவிடமெனக் கூறினர். அப்பொருட்டை யாம் அறியோம்.

திராவிடி.

திராவிடம் என்னுஞ் சொல்லினின்று தமிழ் என்னுஞ் சொல் தோன்றியதெனச் சொல்லுவதே போன்று, திராவிடி என்னும் ஒரு மொழியிலிருந்தே தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்

னடம் முதலிய மொழிகள் தோன்றியிருத்தல் வேண்டுமென்று
காலடுவேலர் கூறுகின்றனர். இக்கொள்கைக்கு அவர்கொண்ட
ஆதாரவுகள் திராவிட என்னுஞ்சொல் வடமொழி நூல்களில்
வழங்கியிருப்பதும், சில சொற்களின் முதனிலைகள் ஒரே படித்
தாகத் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் இம்மொழி
களிற் காணப்படாம லிருப்பது மாகும். தமிழ் முதனிலைகள்
தெலுங்குபோன்ற மொழிகளிலும், தெலுங்குபோன்ற மொழி
களின் முதனிலைகள் தமிழிலும் மாறி மாறிக் காணப்படுகின்
றனவாம். ஆனால், இக்கொள்கை பிழைபாடுடையதென்பதை
அவரெழுதிய நூலை முற்றுமுணர்ந்தோர் அறிவர். உண்மை
யில், அவர் முதனிலைகளெனக் கொண்ட எல்லாச் சொற்களும்
முதனிலையாகா. அன்றியும், கால்டுவேலர் ஓரிடத்தில் இவ்வாறு
கூறுகிறார் :—'தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய
மொழிகள் வடமொழியின் கூட்டுறவின்றித் தனித்தியங்கா. தமிழ்
வடமொழியுதவி சிறிதுமின்றித் தனித்தியங்கு மாற்றலையுடை
யது.' திராவிட என்னும் மொழியினின்றும் தமிழ் முதலாகிய
மொழிகள் பிறந்தனவென்று கூறும் காலடுவேலர் தெலுங்கு
முதலாய மொழிகளுக்கில்லாத ஓராற்றல் தமிழுக் கெவ்வாறு
வந்ததெனக் கூறுவரோ அறியோம். அவர் கொண்ட திராவிட
என்னுமொழி தமிழேயாம் என்பதுதேற்றம். அன்றியும், அவை
என்னுஞ்சொல் அவ என்னும் மலையாளச் சொல்லினின்று
போந்ததென்பர் அவர். அவ என்பது தெலுங்கில் அவி என்
றும், கன்னடத்தில் அவு என்றும், தமிழில் அவை என்றும்,
மாறிற்றாம். அன்றியும், அவை என்னுஞ்சொல் வழக்கிலேயே
உள்ள ஒரு சொல்லாம். தோல்காப்பியத்திற் பயின்றிருக்கும்
ஒரு சொல்லை நூல் வழக்கிலில்லாததென்று யார்தான் கூறுவர்?
தொல்காப்பியத்திற்கு ஏறக்குறைய இருபது நூற்றாண்டுகளுக்
குப் பின்னர்த் தோன்றிய ஒரு மொழியின் அவ என்னுஞ்சொல்
அவை என்று மாறிற்றெனல் எவ்வாறு பொருந்தும்? இதனால்,
யாம் காலடுவேல்லர் மீது குறைகூறுகின்றோமில்லை. அவரது
ஆராய்ச்சிக்கு எட்டியது அவ்வளவேயாகும்.

தமிழெழுத்து.

அன்றியும், இப்பொழுது வழங்கிவரும் தமிழெழுத்துக்கள் கிரந்த எழுத்துக்களினின்று போந்தவை எனவும், கி. பி. முதலாவது நூற்றாண்டிற்கு முன்னர்த் தமிழில் எழுத்துக்களில்லையெனவுங் காலடுவேலர் கூறுவர். இக்கொள்கை யுண்மையாமாயின், தமிழ் நூற்களெல்லாம் முதலாவது நூற்றாண்டிற்குப் பின்னரே தோன்றியிருத்தல் வேண்டும். ஏனெனில், எழுத்தின்றேல் நூலுமில்லையாகும். ஆனால் தொல்காப்பியம்போன்ற தமிழ் நூற்கள் கிறித்து பிறக்கப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியவென்பது இப்பொழுதுள்ள சிறந்த ஆராய்ச்சியாளர் கருத்தாதலின், தமிழ் எழுத்துக்களும் தொல்காப்பியத்திற்கு முன்னரே தோன்றியிருத்தல் வேண்டும். தொல்காப்பியமே எழுத்து எழுதப்படுவது என்று கூறுமாயின், தமிழில் முற்காலத்து எழுத்தில்லையென்று கூறுவது பிழையாகும். கிரந்த எழுத்துக்கள், வடநாட்டாரியர் தென்னாடுபோந்து வடமொழியை வழங்குவதற்காகத் தமிழைப் பின்பற்றி ஆக்கிக்கொண்டவையாகும்.

தமிழ்.

காலடுவேலர் திராவிடம் என்னுஞ்சொல் தமிழ் என மாறிற்று என்றனர். டாக்டர் போப் அவர்கள் தமிழ் என்னுஞ்சொல் தென்மொழி என்னுந் தொடர்மொழியின் மரூஉ என்பர். காலஞ்சென்ற திருவாளர் தாமோதரம் பிள்ளையவர்கள் தமி என்னு முதனிலையினின்றும் தமிழ் என்னுஞ்சொல் போந்ததென்றும், அதனால் அது ஒப்பில்லாத மொழி என்று பொருள்படுமென்றுங் கூறுவர். தமிழ்ப்புலவர் பலர் அது இனிமையுடையதெனப் பொருள்கூறுவர். திருவாளர் நாயக்கர் அவர்கள் இதனை இன்னும் பல சான்றுகளைக்கொண்டு உறுதிப்படுத்துவார்கள். த, மி, ழ் என்ற மூன்றெழுத்துக்களும் மெய்யெழுத்தின் மூன்றினங்களையும் சேர்ந்திருத்தலால், தமிழ் எழுத்துக்களெல்லாம் ஒருவாறு இம்மூன்றிலும் அடங்கிவிடுகின்றன. தகரம்

வல்லெழுத்துக்களில் மிகவும் மென்மையுடையது. மகரம் மெ லெழுத்துக்களில் மிகவும் மென்மையுடையது. ழ தமிழுக்கே சிறப்பெழுத்தாயிருப்பதுமன்றி, மிருந்த இனிய ஒலியை உடைய தாயுமிருக்கின்றது.' ஆதலின் தமிழ் இனிமையான ஒரு மொழி என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. "இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்", "செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்" என்ற மேற்கோள்களும் இவ்வுண்மை யினையே உறுதிப்படுத்துகின்றன.

ஆனல், இக்கொள்கைகளெல்லாம் தமிழ் என்னுஞ் சொல் லின் பொருளை யுணர்த்துகின்றனவேயன்றி, அது தோன்றிய வாற்றினைக் கூறவில்லை. ஒரு மொழியின் பெயர் எவ்வாறுண் டாயிற்று என்று ஆராய்வது முடியாத தொன்றாகும். மொழி யினல் அம்மொழியினை வழங்கும் மக்களுக்குப் பெயருண்டா யிற்றே? மக்களின் பெயரால் அவர் வழங்கும் மொழிக்குப் பெய ருண்டாயிற்றே ? என்ற ஆராய்ச்சி வித்திலிருந்து மரமுண்டா யிற்றே: மரத்திலிருந்து வித்துண்டாயிற்றே? என்ற வினவையே எழுப்பிவிடும். மக்கள் முதலிற் ருேன்றியே பேச முயற்சி செய்திருக்கவேண்டு மெனின், உடன்படுவோம். ஆனல் மக் களுக்கு முதலிற் பெயருண்டாயிற்றே? அல்லது அவர் வழங்கிய மொழிக்கு முன்னர்ப் பெயருண்டாயிற்றே என்பதே நமது வினவாகும். ஆகையால் மரம், மக்கள், வளி முதலிய பெயர் களைப்போன்ற தமிழ் என்னுஞ் சொல் ஓர் இடுகுறிப்பெயராய், தமிழ் மக்களாலேயே தமது மொழிக்கு இடப்பெற்ற ஒரு பெய ராகும். காரணஇடுகுறிப் பெயராயுமிருக்கலாம்.

முத்தமிழ்.

தமிழ் இயல், இசை, நாடகம் என மூவகைத்து என்பது தமிழ் மக்களுடைய கொள்கையாகும். ஆனல், பிறருக்கு இக் கொள்கை உடன்பாடன்று. இலக்கியங்களை இயல், இசை, நாடகம் எனத் தொகுத்தலினும் சிறந்ததோர் வழியில்லெனத் தற்காலத்து நூலாசிரியர்களும், சிறந்த ஆராய்ச்சியாளரும் கொள்

ருகின்றனர். பண்டு மேனாட்டில் நாகரிக முதிர்ந்து விளங்கிய கிரீக்கர்களும் தமிழ் மக்களைப் பின்பற்றியேதான் தங்கள் இலக்கியங்களை இயல் (Epic), இசை, (Lyric) நாடகம் (Drama) எனத் தொகுத்தனர்போலும். நாடகம் என்ற சொல்லே வடமொழியினதாமாயின், தமிழில் நாடகமென்பதேதுஎன்று சிலர் வினவுகின்றனர். முதலாவதாக ஒரு பெயர் பிறமொழிப் பெயராயிருத்தல்பற்றி அம்மொழியில் அப்பெயர் குறித்த பொருளில்லையென்று துணிதல் பொருந்தாக் கொள்கையாகும். இரண்டாவதாக நாடகம் என்றசொல் வடமொழிச் சொல்லேதானோ? நாடகம் என்பது நடி என்னுந்தமிழ் முதனிலையினடியாகப் பிறந்தது. அது போன்ற முதனிலைகள் தமிழில் எண்ணிறந்தன உண்டு. விடு, படு, எடு, தொடு, கடு முதலிய முதனிலைகள் தமிழாமாயின், நடி யென்பது தமிழ் என்பதில் ஐயமில்லை. அஃதெவ்வாறெனின், மேற்குறித்த முதனிலைகளினின்று வீடகம் முதலிய பெயர்கள் தோன்றுகின்றன. "நாடகத்தானுன்னடியார் போனடித்து வீடகத்தே புகுந்திடுவான்" என்ற அடிகளில் நாடகம் என்ற ஒரு பெயரும், அதன் முதனிலையாகிய நடி என்ற உறுப்பும், அது போன்ற வீடகம் என்ற ஒரு பெயரும் பயின்றிருத்தல் காண்க. அன்றியும், ட ஆரியத்திற்கு இன்றியமையாத ஒரெழுத்தன்று. ட இல்லாமலும் ஆரியம் இயங்க முடியும். ஆனால் ட இல்லையாயின், எண்ணிறந்த தமிழ்ச்சொற்களுக்கு முதனிலை காணுதல் முடியாதாகும், அன்றியும், ஆரியத்தினின்று தோன்றிய மொழிகளில் ட காணப்படவில்லை. தமிழினின்று தோன்றிய மொழிகளில் அது காணப்படுகின்றது. இதனாலேயே அதனை ஆரியம் தமிழிலிருந்து எடுத்துக்கொண்டதென்னுங் கொள்கையுமுண்டு.

இனி, முத்தமிழுண்டென்பது 'முத்தமிழ்த் துறையில் முறைபோகிய', 'முத்தமிழுந்தந்து முற்றுமோ' என்ற மேற்கோள்களினாலும், சங்க காலத்தேயே அவை பயின்ற வென்பது 'சங்கத் தமிழ்மூன்றுந் தா' வென்ற மேற்கோளினாலுங் கொள்ளக்கிடக்கின்றன. அகத்தியனார் முத்தமிழுக்குமிலக்கணம் கூறினு

ரென்பது ஆசிரியர் நச்சினார்க்கினியரது கருத்தாகும். மெய்ப் பாட்டியற்றலைச் சூத்திரத்திற்குப் பொருள் கூறும்போது அவர் "கண்ணிய புறனே நானான் கென்ப" என்ற அடிக்கு, அவை கருதிய பொருட் பகுதி பதினொருகி அடக்கும் நாடக நூலாசிரியர்க்கு, என்று பொருள்கூறி, 'அது முகனாலே நோக்கிக் கூறிய வாறு போலும்' என்ற குறிப்புங் கூறியிருக்கின்றார். அன்றியும் சிலப்பதிகாரம் முத்தமிழும் ஒருங்கே அமைந்த நூலென்பதைப் பலருமறிவர். உரையில் அடியார்க்கு நல்லார் பல இசை நாடக நூல்களினின்று மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். இத்தகைய பல சான்றுகளால் முத்தமிழ் உண்டென்பதும், தமிழ் மொழியின் கண்ணே பல நாடகங்கள் வழங்கின வென்பதும் அறியக்கிடக்கின்றன.

தமிழ் ஆரியத்தினின்று பிறந்ததாமோ ?

நாடகம் என்னுஞ் சொல்லை வடமொழிச் சொல்லென்று கூறுவதே போன்று இன்னும் பல தமிழ்ச் சொற்களையும் வடமொழியினின்று போந்தவெனக் கூறுதற்குப் பலர் துணிகின்றனர். அன்றியும் தமிழ் மொழியே வடமொழியினின்றும் போந்ததெனவும் சிலர் கூறுவர். இவர் கூற்றினை ஒருவாறு ஆராய்வது நமது கடனாகும். வடமொழியிலிருந்து தமிழ் போந்ததெனக் கட்டுரைவரையும் சில ஆராய்ச்சியாளர் தமது கொள்கையை நிலை நாட்ட எடுத்துக்காட்டு மாதரவுகள் தற்போது தமிழிற் பயிலும் சில வடமொழிச் சொற்களேயாம். இவர் தமிழ்ச் சொற்கள் சில ஆரியத்தில் பயிலுவதற் கென்மொழிவரோ அறியோம். ஆணி, அடவி, கடு, கலா, குடி, குண்டம், கூனி, குளம், கோட்டை, சவம், சாயா, பட்டினம், பாகம், மீனம், வளையம், முகம் முதலிய தமிழ்ச் சொற்கள் வடமொழியிற்போய்ப் பயில்கின்றன.

(தொடரும்.)

மு. கோவிந்தராச நாட்டார், B. A.

௳

திருவள்ளுவர் நூல்நய ஆராய்ச்சி.

திருவள்ளுவர் நூனயம் என்னும் நூலின்கண் திருவாளர் R. P. சேதுப்பிள்ளையவர்கள் 'புதல்வரைப் பெறுதல்' என்னும் ஏழாம் அதிகாரத்தின் தலைப்பெயர் 'மக்கட்பேறு' என்றிருக்கவேண்டும் என்று கூறியுள்ளார்கள். அதற்கு அவர்கள் கூறுங் காரணங்களை யாராய்வோம்.

"நாயனார் குறளில் அமைந்துள்ள அதிகாரங்களின் பெயரை ஆராய்ந்தால், அத் தலைப்பெயரில் வழங்குஞ் சொற்கள் அவ்வதி காரத்திற் பல இடங்களில் பயின்றிருக்கக் காணலாம்." (150-பக்கம்) என்றார்கள்.

திருக்குறளின் முதல் அதிகாரம் "கடவுள் வாழ்த்து" என்பது. இத் தலைப்பெயரிலுள்ள சொற்கள் இவ்வதிகாரத் தின் பத்துக் குறள்களில் எக்குறளிலாவது வந்திருக்கின்றனவா? இரு சொற்களும் வந்திலவேனும் ஒரு சொல்லாவது வந்துளதா? பிள்ளையவர்கள் கொள்கை முதலதிகாரத்திலேயே தவறுபட்டு விட்டது. இஃதொன்றன்று. 'படைச்செருக்கு', 'தனிப்படர் மிகுதி', 'படர்மெலிந்திரங்கல்' என்னும் அதிகாரங்களின் பெயர் களிலுள்ள சொற்கள் அவ்வவ்வதிகாரச் செய்யுட்களில் யாண்டு வந்துள்ளன? ஒரு செய்யுளிலேனும் காணப்பட்டில. இதனால் அவ்வதிகாரங்களின் தலைப்பெயர்களெல்லாம் மாறு பட்டிருக்க வேண்டுமென்றன்றோ கூறவேண்டும்? அங்ஙனங் கூறுதல் "பல விடங்களில் பயின்றிருக்கக் காணலாம்" என்ற னர். பொருந்துமா? "ஆள்வினையுடைமை" என்னுந் தலைப் பெயரிலுள்ள "ஆள்வினை" என்னுந்தொடர் ஓர் செய்யுளில் மட்டும் வந்துள்ளது அறிதற்பாலது. ஆதலால், புதல்வரைப்

பெறுதல் என்னுந் தலைப்பெயர்ச் சொற்கள் அவ்வதிகாரக் குறள்களில் வாராமை காரணமாக அத்தலைப்பெயர் மாறுபட்டிருக்க வேண்டுமென்றல் பொருந்தாது.

இனி, "மக்கள்" என்னும் பதம் எட்டுக் குறளிலும், 'மகன்' என்னும் பதம் மற்றைய இரண்டு குறளிலும் வழங்கக் காண்கின்றோம்" (151-ம் பக்கம்) என்றார்கள்.

"தந்தை மகற்காற்று முதவி"
"தன்மகனைச், சான்றோ னெனக்கேட்ட தாய்"
"மகன்றந்தைக் காற்று முதவி" என மூன்று குறள்களில் மகன் என்னுஞ் சொல் வந்துளது. இவற்றுள் எக்குறளிலுள்ள மகன் என்னுஞ் சொல் பிள்ளையவர்கட்கு மக்கள் என்னுஞ் சொல்லாகத் தோற்றிற்றோ அறிகிலேன்.

'வாழ்க்கைத் துணைநல' த்தின் இறுதிச் செய்யுளால் இவ்வதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டமையால், அவ்வதிகாரத்தின் இறுதிச் செய்யுளில் அமைந்த "மக்கட் பேறு" என்னுஞ் சொற்றொடரே இவ்வதிகாரத்திற்குத் தலைப்பெயராக அமைந்திருக்கவேண்டும் என்றெண்ணுகிறார்கள்.

"இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு,"

என்னுங் குறளிற் றோற்றுவாய் செய்தாங்கு அடுத்த அதிகாரங்கள் அமைந்துள்ளன வென்று பிள்ளையவர்களே கூறியுள்ளார்கள். அங்ஙனமாயின், 'கள்ளுண்ணாமை' யின் அடுத்த அதிகாரத்திற்குக் 'கவறு' எனத் தலைப்பெயர் கொடாது 'சூது' எனத் தலைப்பெயர் கொடுத்திருப்பதன் காரணம் யாதோ? அதனால் அத்தலைப்பெயர் மாறுபட்டிருக்க வேண்டுமென்று பிள்ளையவர்கள் ஆராய்ச்சி செய்யாததன் காரணம் யாதோ?

நாயனர் 'பண்புடைமை' என்னு மதிகாரத் திறுதியில், அடுத்த 'நன்றியில்செல்வம்'என்னும் அதிகாரத்திற்குத் தோற்று

வாய் செய்துள்ளார்; உரையாசிரியரும் கூறியுள்ளார். ஆண்டு 'நன்றியில் செல்வம்' என்னும் சொற்றொடராற் றோற்றுவாய் செய்யாது பொருளாற் றோற்றுவாய் செய்துள்ளார். அது போல் இவ்வதிகாரத்திற்கும் பொருளாற் றோற்றுவாய் செய்தாரெனக் கோடல் பொருந்தும். இனி, 'கல்வி' என்னும் அதிகாரத்திற்கு அதன் முன்னதாகிய 'இறைமாட்சி'யுள் "தூங்காமை கல்வி" என்னுங் குறட்பாவிறை் றோற்றுவாய் செய்திருப்பதாக உரையாசிரியர் கூறியுள்ளார். இதனால் ஈற்றுச் செய்யுளினாலேயே தோற்றுவாய் செய்தல் வேண்டுமென்னும் யாப்புறவின்மையுங் காண்க.

"புதல்வரைப் பெறுதல் என்னுந் தலைப்பெயர் எப்பொழுது யாரால் குறளிற் சேர்க்கப்பட்டதோ அறிகிலோம்" (153-ம் பக்கம்) என்றார்கள். உண்மையில் சேர்க்கப்பட்டதாகக் கொள்ளினும், பரிமேலழகர் காலத்திற்கு நெடுங்கால முன்பே சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கோடல் பொருந்தும். அதிகாரப் பெயர்களை யெல்லாம் பரிமேலழகர் கவிகூற்றாகவே கருதுகின்றார். இஃது "அவர்வயின் விதும்பல்" என்னுந் தலைப்பெயரை விளக்கப் புகுங்கால், 'கவிகூற்றாகிய அதிகாரத்தைத் தலைமகள் உயர்த்தற் பன்மையாற் கூறப்படாமையானும்" என உரைத்திருப்பதால் விளங்கும்.

இனி, இத்தலைப்பெயர் 'மக்கட்பேறு' என்றிருத்தலினும் புதல்வரைப் பெறுதல் என்றிருத்தலே பமையும். அஃது ஈண்டு இப்பேறு எக்காரணத்தாற் கூறப்பட்ட தென்பதை யாராயவே விளங்கும். பரிமேலழகர்—இல்வாழ்வான் இயல்பாக இறுக்கவேண்டிய தென்புலத்தார்கடன் இறுத்தற் பொருட்டு இப்பேற்றை யடையவேண்டுமென்று கூறுகின்றார். பிள்ளைய வர்கள் ஆதாரமாகக் கொண்ட மணக்குடவர் உரையின்கண்ணும் (திருவாளர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் பதிப்பு) "இல்வாழ்வான் கடன்களுள் தென்புலத்தார்க்குச் செய்ய வேண்டுவது மக்களாலன்றி இறுக்க முடியாமையின், இஃது ஈண்டுக் கூறப்பட்டது." என்று கூறப்பட்டுள்ளது. இப்பொருள்

பண்டைத் தமிழ் நூலுள்ளும் கூறப்படுகின்றது. பண்டைத் தமிழ் வேந்தர்கள், பகைவரொடு போர் தொடங்குங்கால், கொல்லத் தகாதவர்களை அந்நாட்டினின்றும் விலகி விடுமாறு செய்தல் இயல்பு. அவர்களுள் தென்புலத்தார் கடன் இறுத்தற்குரிய புதல்வர்ப் பெறாதவரும் விலக்கப் படுகின்றார். இதனைப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய 9-வது புறப்பாட்டின்கண்,

'பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறா தீரும்.'

எனக் கூறியிருத்தல் காண்க. இங்ஙனம் பல நூல்களாலும் கூறப்படும் தென்புலத்தார் கடன் ஆண்மக்கட் பேற்றான் இறுத்தல் இயல்வதோ? பெண்மக்கட் பேற்றான் இறுத்தல் இயல்வதோ? ஆண்மக்கட் பேற்றினானே யிறுத்தல் இயல்வதாம். பிற நூல்களினும், ஆண்மக்கட்பேறு விதந்து கூறப்படுவதன்றிப் பெண்மக்கட்பேறு விதந்து கூறப்படாமையுங் காண்க. திருவள்ளுவனாரும் மூன்று குறள்களான் ஆண்மக்கட்பேறே விதந்து கூறினமையு மறியற்பாலது. அன்றியும், தந்தை மகற்காற்று முதவியும், மகன் தந்தைக்காற்று முதவியும் கிளந்து கூறியவர், தந்தை மகட்காற்று முதவியையாதல், மகள் தந்தைக்காற்று முதவியையாதல் கூறவில்லை.

இனி, இப்பேற்றான் உண்டாகும் மகிழ்ச்சியின் மிகுதியை விளக்கும் பாக்களின் பொருள்களைப் பிள்ளையவர்கள் 151-வது பக்கத்தில் தொகுத்துக் கூறி இம்மகிழ்ச்சி ஆண்மக்கட் பேறான் மட்டும் உண்டாகுமெனக் கருதுவதற்குச் சிறிதும் இடமில்லையென்றார்கள். மகிழ்ச்சி இருமக்கட் பேற்றானும் உண்டாகும் என்பது யாவரும் ஒப்புவதோர் உண்மையே. அதனானே அக்குறள்களிலெல்லாம் மக்கள் என்னும் பொதுச்சொல் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், இல்வாழ்வானுற் றன்கடன் றீர்தற் பொருட்டு ஒரு தலையாக வேண்டப்படுவது ஆண்மக்கட் பேறே யாதலின், இவ்வதிகாரத்திற்குப் புதல்வரைப் பெறுதல் என்னும்

பெயர் கொடுக்கப்பட்டது எனக் கோடலால் வரும் இழுக்கு யாது? பிள்ளையவர்கள் மக்கட் பேற்றான் எய்தும் பயன் மகிழ்ச்சி யொன்றே யெனக் கொண்டார்கள் போலும்.

இனிப் "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை" என்னுந் திருக்குறளின்கண் உள்ள "அறிவறிக்த" என்பதற்குப் பரிமேலழகர் கூறும் பொருள் பொருத்த முடைத்தன் றென் றெண்ணுகின்றார்கள். ஆயின், இறந்த காலத்தில் அமைந்த அத்தொடருக்கு இவர்களால் எங்ஙனம் உரை கூறப்பட்டதென ஆராயின், "அறிவறிந்த மக்களைப் பெறுதலைப் பார்க்கினும்" என்றும், அறிவு நலம் வாய்ந்த மக்களைப் பெறுதலே பெறும் பேறென்று வியந்துரைக்குந் தன்மை விளங்கித் தோன்றும்'' (154-ம் பக்கம்) என்றும் அத்தொடர் அப்படியே கூறப்பட்டுள்ளதே யன்றிப் பொருள் ஒன்றுங் கூறப்படவில்லை. இனி அத்தொடருக்கு "அறிய வேண்டியன அறிதற் குரிய" என்ற பரிமேலழகர் உரையை ஆராய்தல் நன்று. ஒவ்வொருவரும் பிறந்த பின்னரே நுண்ணறிவுடையார் இயற்றிய நூல் பல கற்றுங் கேட்டும் உலக வழக்குகளை யாராய்ந்துமே அறியவேண்டுவனவற்றை அறிந்து கோடல் இயலுமன்றிப் பிறக்கும் பொழுதே அறியவேண்டுவனவற்றை அறிந்துகொண்டு பிறத்தல் இயலாதன்றே. அதனாலேயே உரையாசிரியர் இதனைக் காலவழுவமைதி யெனக் கொண்டு அறியவேண்டுவனவற்றை அறிதற்குரிய என்று பொருளுங் கூறினர். ஈண்டுக் கூறிய உரிமையாவது ஆண்மக்களாகப்பிறத்தல் என்பது பிள்ளையவர்கள் கருத்து. அஃது உரையாசிரியர் கருத்தன்றாகும். கல்வியுடைய ராதற் கேதுவாகிய ஊழ்வினையுடைமையே ஈண்டுக் கூறிய உரிமையாகும். இனி, அறியவேண்டுவனவற்றை யறிதலாவது வீடு பேற்றிற் குரிய நூல்களைக் கற்றுங் கேட்டும் உணர்தலாகும். "சத்தமும் சோதிடமும் என்றாங் கிவைபிதற்றும், பித்தரிற் பேதையா ரில்" என்றார் பிறரும். பெண்ணொழித்து நின்றதெனப் பரிமேலழகர் கூறியதும் இதுவே யாகும். "வீடு பேற்றிற்குரிய ஆண்மகனை யுணர்த்துஞ் சிறப்பால் னகரம் பின் வைக்கப்பட்டது" எனத் தோல்காப்பிய முதற் சூத்திர வுரையில், ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுதலுங்

காண்க. வீடுபேறு குறித்த கல்வியன்றி யேனைய கல்வி யிருவர்க்கு முரியவேயாம். என்னை யெனின், ஆசிரியரால் தவறெனத் தள்ளப்படாதனவும், நன்மை பயப்பனவுமாக வுள்ளன கொள்ளப் படுவனவா மாதலின்.

இன்னும் 158, 159-பக்கங்களில் "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்—கண்ணென்ப வாழு முயிர்க்கு," "கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு—புண்ணுடையர் கல்லா தவர்" என்னுங் குறள்களை எடுத்தோதி, இவற்றுள் நாயனார் கல்வியை இருபாலார்க்கும் பொதுவாகவே கூறிப் போந்தார் என்றியம்பினர். "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்—சாந்துணையுங் கல்லாத வாறு" "ஒருமைக்கட் டாங்கற்ற கல்வி ஒருவற்கு—எழுமையும் ஏமாப் புடைத்து" என இரு குறள்களால் ஆண்மகனை விதந்து கூறிய ஆசிரியர் ஒரு குறளிலேனும் பெண்மகளை விதந்தோதாமை எக்காரணத்தாலோ? இஃது பிள்ளையவர்கள் கொள்கையைப் பெரிதும் விலக்கி நிற்றல் காண்க. இதனாலும் கல்வி பொதுவாக இருபாலார்க்கும் உரித்தெனினும் சிறப்பாக ஆண்பாலார்க்கு உரித்ாதல் காண்க.

பரிமேலழகியார் கருத்தைச் சிவப்பிரகாச முனிவர் பெரிய நாயகியம்மையார் துதியில் நயமாகக் கண்டித்தார் என்றும் பிறவாறும் கூறியுள்ளார் (162-ம் பக்கம்). சிவப்பிரகாசர் அங்ஙனமோர் நயம்படக் கூறினரன்றிக் கண்டித்தார் என யாவருங் கொள்ளார். அங்ஙனங் கொள்ளின் அம்முனிவரே நால்வர் நான்மணிமாலையில்

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையை—மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திருவுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து" என்று கூறிய

செய்யுளால் திருவள்ளுவரையே மறுத்தாரெனக் கோடலால் வரும் இழுக்கு யாது? திருவள்ளுவர் கூற்றுத் தவறு பட்டுப் பிறரால் மறுக்கப்படுதலும் உண்டோ?

இனி, மனத்தின்கண் மாசின்மையே அறம் என வள்ளுவனார் கூறியதை மேற்கொண்டு, பரிமேலழகர்—அறமாவது விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும் என்றது பொருந்தாதெனக் கருதுகிறார்கள். இஃது ஒரு நூலின் கண் கூறப்படும் பல்வகைப் பொருள்களுள் தன்மனம் விரும்பிய தொன்றையே மேற்கொண்டு இதுவே உண்மைப் பொருளாகும், ஏனையவற்றை உண்மையென்றல் பொருந்தாது என்று கூறலையே ஒக்கும். "அறவினை யாதெனிற் கொல்லாமை" என்னும் பகுதியை மேற்கொண்டு இதுவே யறவினையாகும், ஏனையவற்றை அறவினை யென்றல் ஒரு சிறிதும் பொருந்தாதென்று ஒருவரும்; இங்ஙனமே "அறமெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்பதை மேற்கொண்டு மற்றொருவருங் கூறின், இவை கொள்ளத்தக்கன வாமோ? எல்லாப் பொருள்களையும் திரட்டிப் பொதுப்படவன்றே கூறல்வேண்டும். மனத்தின்கண் மாசின்மையே அறம் என்றதில் எல்லாம் அடங்கியுள்ளன வெனில் அத்தொடருக்கு மனத்தால் எவ்வித தீங்கும் நினையாமை யென்றே பொருள்படும். அங்ஙனமாயின் ஒருவன் எவ்வுயிர்க்குந் தீங்கு நினையாமலும் எவ்வுயிர்க்கும் உதவி புரியாமலும் இருப்பானேயாயின் அவனை யறமுடையான் என்று கூறத் தடை யாது? அவனை யறமுடையனென்றல் ஆன்றோர் கொள்கையாமோ? ஆதலாலேயே, பரிமேலழகர் விதித்தன செய்தல், விலக்கியன செய்யாமை என்னும் இரண்டையும் சேர்த்து அறமென்றார். இதனால் அவர் கொள்கை பிழைபடாமை (164-ம் பக்கம்) யறிக.

இனி, ஆசிரியர் வள்ளுவனார் தம் நூலின்கண் வழக்குத் தண்ட மென்னு மிவற்றை ஒரு சிறிதும் அமைத்து எழுதவில்லை என்றார்கள். ஆசிரியர் அவற்றைத் தனிப்பால்களாக அமைக்க வில்லையே யொழிய ஒரு சிறிதும் கூறாது போகவில்லை.

"சமன் செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்
கோடாமை சான்றோர்க் கணி" [தொருபாற்
"சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்ட மின்மை பெறின்."

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

"காட்சிக் கெளியன்" இவற்றால் வழக்குணரப்படும்.
"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"
என்னுங் குறளாற் றண்டம் உணரப்படும்; "தக்காங்கு நாடி" என்னுங் குறளால் வழக்குத தண்ட மிரண்டும் உணரப்படும்.

வள்ளுவனார் வடமொழி வழக்குப் பற்றியமைத்தாரோ? தென்மொழி வழக்குப்பற்றி யமைத்தாரோ? எங்ஙனமாயினு மாக. அவர் வழக்குந் தண்டமும் கூறாமற்போகவில்லை. ஆனால் தனிப் பகுதிகளாகக் கூறவில்லை. அவை தேயங்கள் தோறும், காலங்கள் தோறும் பெரும்பாலும் மாறுபடக் கூடியனவே. ஆதலால் அவற்றைத் தனிப்பகுதிகளாக ஆசிரியர் எடுத்தோதாமைக்குப் பரிமேலழகர் கூறுங் காரணங்கள் மிகப் பொருத்த முடையனவே.

ஆ. பூவராகம்பிள்ளை.

தமிழர் வரன்முறை.

முன்னுரை.

தமிழர் தோன்றினநாள்தொட்டு இந்நாளளவும் எய்திய களமும், வளமும், புலமும், நலமும் ஊழிவரை வகுத்துக் கூறி, இனி எய்தவிருக்கும் வலமும் பகுத்துக் காட்டப்புக்கது இவ்வுரை.

சென்றகாலம் பற்றிய செய்திகள் யாவும் அவ்வந்நாட்டார் தந்தமக்குரிய மொழிகளிற் குறிப்போந்த கோள்கொண்டு துணிவதுவே மெய்யுணர்ச்சியாகும். அங்ஙனந் துணியுமிடத்தும், உயர்வு நவிற்சி மிகைக் கூற்றுக்களுக்கு அகன்ற இடம் ஒதுக்கி வைத்தே ஆய்தல் தகும்.

தமிழர் பண்டைக்களமும் வளமும் பற்றிய துணிபுகளைத் தமிழ் நூல்வழக் கொன்றே பற்றி ஆய்ந்துளோம். இத் துணிபு கட்கு மாறான கோள்கள் பல வெளிவந்துள்ளன. அவற்றோடு இவற்றையும் ஒருக்குவைத்து உண்மை யுபர்வு காணுதல் தமிழருள் கண்ணுள்ளார் கடன்.

இவ்வரன்முறை வெளியிடுவதன் நோக்கம் தமிழரைத் தெருட்டுதற்கே என்பதை முன்னே உள்ளிக்கொள்க.

மெய்யறிவுடையார்க் கடியன்,
அ. இறையோளி.

தமிழர் வரன் முறை.

காப்பு.

சிவனைக் காணு முன்னஞ் சிறந்த முருகற் சேர்துமே
அவனை யுள்ளத் தன்பின் வழுத்தி அணைத்து மார்துமே.

வேண்டுகோள்.

பழைய தமிழர் மரபில் வந்த பண்பர் நாளுமே
தழைய விழையும் தவறில் செஞ்சொல் அன்பிற்
[கேளுமே.
முன்னை யுயர்ந்த நிலையு மிடையில் முரிந்த நிலைமையும்
பின்னை யுயர விருந்த நிலையும் பெரிதும் நினைமினே.

நூல்.

முதலூழி.

தென்பா லுவரி தனிலே யுயிர்கள் செறிந்த கண்டமே
முன்பா லரிய மக்க ளுருவம் முறையிற் கண்டதே.
அகன்ற பரப்பினி லாமுரி நாடும் அதனுட் பகுதியே
தகவில் படிறர் வாய்மை புகலத் தரியார் மிகுதியே.

அந்த நிலத்தில் வதிந்த மக்கள் அறிவு கிளர்ந்ததால்
முந்த வியற்கை முறையில் அவர்தம் மொழியும் வளர்ந்ததே.
சொற்கள் வகுத்துப் பொருள்கள் பகுத்துச் சோர்வி
[லறிவினால்
பற்பல கலைகள் அலகில் நிலைகள் செறித்துப் பரவினார்.

அரச முறைகள் பலவும் வகுத்து, அன்பில் நிறுவினார்
பரசு மரிய விதிகள் தொகுத்துப் பண்பில் மருவினார்.
தாயின் வளர்ந்த தங்கள் மொழியைத் தமிழென் றியம்பினார்
சேயி னியைந்த தங்கள் நிலத்தைச் செழிப்பித்
[தோம்பினார்.

புல்லும் வரகும் நெல்லும் தினையும் புலத்து வித்தினார்
நெல்லும் தினையும் நெறியி லட்டித் தேவ ரேத்தினார்.
ஒளியன் வேலன் உருவன் மாயன் உயர்ந்த கடவுளார்
அளிகொள் விழவும் களிகொள் கூத்தும் அவர்க்கு
[நடவுவார்.

கற்பும் உரனும் கலையும் மறமும் கருதிப் பேணினார்
அற்பின் அரிய குணங்க ளனைத்தும் அணங்கென்
[றேத்தினார்.

உரியின் மயிரின் பஞ்சிற் பட்டின் உயர்ந்த உடைகளை
அரிய தொழிலின் அணிந்து புனைந்து ஆண்மை நடையினார்.
செம்பொன் வெண்பொன் அணிகள் பலவும் செயல்கை
[வண்மையால்
அம்பொன் முடியொ டார்த்த கழலும் அணிந்த தொன்
[மையார்

முத்தும் மணியும் குயின்ற கலன்கள் முறைமை யொல்லுமா
ஒத்த வகையி னுரைக்க வல்லா ருலகில் இல்லையே.
தலையிற் சோலும் செவியிற் குழையும் தயங்கு மார்பிலே
ஆலையும் கணியும் தோளிற் றொடியும் அங்கைச் சார்பிலே.
இலகும் வளையும் இடைமே கலையும் இருகாற் சிலம்புமே
நிலவு மெழில்கொள் மகளி ரணிகள் நினையில் பலவுமே.

எஃகி னுனிய ஏவும் வில்லும் இலைய வேலுமே
அஃகி லொளிய வீர ரவர்கைப் படைகள் போலுமே.

யானை வீரர் இவுளி மறவர் அணிதேர்த் தலைவரே
தானை மள்ளர் இனைய நான்கு தறுகண் நிலையரே.

பெண்க ளுரிமை கெடுவ தாயி னுயிரும் பேணிடார்
நண்பு முறவும் பொருள தாக அன்பில் நாணிடார்.

ஆன்ற குடியும் அமைந்த நடையும் அவர்கள் பண்களாம்
என்ற மான மழிவ தாயின் இறக்க நாண்கொளார்.

நாண மழிய இரந்து வாழ்தல் நவையே என்பரால்
கோண லறியா உளத்தோ டுயிரும் கொடுப்ப ரன்பினால்.

வேறு.

வரையும் அரிய சுரமும் புறவும் வள்ஞ்செய் பழனமும்
திரையும் அலைவசா ரிடமும் எனவைந் திணைய நிலமதே.

புணர்தல் பிரிதல் இருத்தல் பிணங்கல் புணைவிட் டிரங்கலே
உணரின் அவரில் லறவாழ் வினில்வந் துறுமைஞ்
[செயல்களே.

வரைவாழ் குறவர் சுரம்வாழ் மறவர் வனம்வா ழிடையரும்
திரைவாழ் வலையர் வயல்வாழ் களமர் திறமார் குடிகளே.

வளவேற் றுமையால் நிலமைம் பிரிவாம் வதிவார்
[தொழில்களில்
உளவேற் றுமையால் உறுவார் பெயர்கள் உளவாம் பலவுமே.

குடிகள் பலவா யினுமக் குயர்வும் இழிவுங் குறித்திலார்
கடியார் மணமும் உறவும் அவருட் கலந்தார் பரிசினால்.

(தொடரும்.)

அ. இறையோ

௨

தமிழ் நூலாராய்ச்சிக்குக் கல்வெட்டாராய்ச்சி இன்றியமையாதது.

தமிழகத்தில் எடுக்கப்பெற்றுள்ள பழ்மைவாய்ந்த கற்கோயில்களிற் சென்று பார்க்கின், முடியுடைவேந்தரும், குறுநில மன்னரும், பிறரும் அமைத்த நிபந்த முள்ளிட்டன கூறும் சாசனங்கள் வெட்டப் பெற்றிருத்தலை இன்றுங் காணலாம். அவை இன்சுவை பயக்கும் மென்றமிழ் நடைதழீஇப், பண்டைய ஒழுக்க வழக்கங்கள், புரவலர் புலவர் வரலாறு, காலவரையுறை என் றின்னவை பலவும் உணர்தற்குக் கருவியாய் நின்று நிலவிடவும், இவ்வுண்மை தேராமையானோ அறிந்திலேன், நம்மவருட் பெரும்பான்மையோர் அவைகளை ஆராய மனங்கொண்டிலர். ஆகவே, அவற்றினை ஆராய்தல் ஏனையோரினும் தமிழாராய்வார்க்கே இன்றியமையாததனை ஒரு எடுத்துக்காட்டால் இனிது விளக்குவேன்.

இனி, செயற்கருஞ் செய்கை செய்த பெரியார் வரலாறுரைக்கும் **பெரிய புராணம்** சாசனங்களிற் காணும் பொருள்கள் குவித்த கருவூலம் எனத்தகும். அதன்கண்,

"அந்நகரத் தினிலிருக்கும் வேளிர்குலத் தரசளித்து
மன்னியபொன் னம்பலத்து மணிமுகட்டிற் பாக்கொக்கிற்
பன்னுதுலைப் பசும்பொன்னாற் பயில்பிழம்பா மிசையணிந்த
பொன்னெடுந்தோ ளாதித்தன் புகழ்மரபிற் குடிமுதலோர்."

(இடங்கழிநாயனார் புராணம், ௧.)

"மாளிகைமுன் னத்தாணி மண்டபத்தின் மணிபுனைபொற்
கோளரியா சனத்திருந்து குடபுலமன் னவர்கொணர்ந்த
வோளிநெடுங் களிற்றினணி யுலப்பில்பரி துலைக்கனக
நீளிடையில் விலகுமணி முதனிறையுந் திறைகண்டார்."

(புகழ்ச்சோழ நாயனார் புராணம். ௧௩.)

என்னும் செய்யுளிரண்டினும் தலைப்பொன் வந்திருத்தல் வெளிப்படை. அது, இற்றைநாளையில் வழக்கு வீழ்ந்தவற்றுளொன்றாதலின், இன்றியமையாத எழுத்தொன்று திரிந்ததாயிற்று.

அதனால், உரையிரிப்பார் யாவரும் சொற்கிடந்த முறையிற் பொருள் கொள்வாராயினர். அவ்வாறு கொள்வது ஆசிரியர் கொள்கைக் கடுத்ததன்று.

ஆசிரியர் சேக்கிழார் நாயனார் தாம் பாட எடுத்துக் கொண்ட நூற்கு அடியாகக் கொண்டவற்றுள், திருத்தொண்டர் திருவந்தாதியும் ஒன்றாகும். அதில், இடங்கழி நாயனார் புராணத்துள், 'சிற்றம்பல முகடு கொங்கிற் கனக மணிந்த வாதித்தன்' என ஆதித்தனது சிறப்புக் கூறப்பெற்றுளது. அவன், தம் அரசமரபின் முன்னிருந்தவனாதலால், அன்னவன் சிறப்பினைத் தாமும் பொன்போற் போற்றுங் கடப்பாட்டினை மனங்கொண்ட நாயனார்; அவனது சிறப்புரைக்கு முகத்தால், அவன் சிற்றம்பல மணிந்த கொங்கிற் பொன்னே போல், அக்காலத்தில் தம் நாட்டு வழங்கிய பொன்னின் மாட்சியையும் உடன் தெரிப்பார், 'கொங்கிற் பன்னுதுலைப் பசும்பொன்' எனக் கூறுவாராயினர். கொங்கிற் பொன்—கொங்குநாட் டகப்படும் மாற்றுயர்ந்த பொன். ஆதித்தன் I, கொங்கு நாட்டினைக் கைக்கொண்டு அங்கு நின்றும் கொடுபோந்த பொன்னால் அம்பல முகட்டினை அணிந்தனன் என்பர் சரித ஆராய்ச்சியாளர். பிற்றை நாளினும், மாற்றுயர்ந்த பொன் 'கொங்குரை' எனப்பட்டது. (மதுரைக் கலம்பகம் 74-ம் செய்யுள்) இஃது இவ்வாறாகவும், 'கொங்கில்—கோங்கமலர் போல' எனவும், 'துலை—துலாநிறை' எனவும், 'ஆதித்தன்—குலோத்துங்கன் பெயர்களிலொன்று' எனவும் எழுதுவார் உரை பொருந்துமாறு எங்ஙன் என்பது ஆராயத்தக்கது.

இனி, இங்குக் கூறிய பொன், பராந்தகன் I முதலியோர் காலந்தொட்டு, அஃதாவது இப்பொழுதைக்கு ஆயிரம் யாண்டுகட்கு முன்னர்த் தொட்டுத் 'துலைப்பொன்' எனவே பயின்று வந்தமையானும், அச்சு நூலிற் காணப்படும் துலைப்பொன் பொருள் சிறவாமையானும், அதனைத் 'துலைப்பொன்' எனக் கோடலே அமைவுடைத்தாகும். இவ்வுண்மையை,

"ஸ்வஸ்திஸ்ரீ|| கோ பரகேசரி பன்மர்க்கு யாண்டு ந ஆவது இவ்வாண்டு சோழபெருமானடிகள் மகனார் அரிகுல கேசரியார் தேவியார் தென்னவன் இளங்கோ வேளார் மகளார் பூதி ஆதிச்ச பிடாரியார் பிரமதேவன் ஈசான மங்கலத்து திருச்செந்துறை தாம் எடுப்பிச்ச கற்றளி பெருமானடிகளுக்கு சென்னடை திருவமுதுக்கு முதலாக குடுத்த விடேல் விடுகு கல்லால் துளைப்பொன் அறுபதின் கழஞ்சரை ||" (Page 228 of S. I. I. vol III. Part III). "ஸ்வஸ்திஸ்ரீ|| மதுரைகொண்ட கோ பரகேஸரி பன்மற்கு யாண்டு ௰௫ ஆவது குன்றியூர் நாட்டுத் திருநலகுன்றத்து திருமூலட்டானத்துப் பெருமானடிகளுக்கு பிள்ளையார் கோதண்டர் முடைப்பள்ளிப் பெண்டிர் பன்றியூர் நாட்டு மங்கல வாசல் குடியன் காடுகாள் நொந்தாவிளக்கொன்றுக்கு வைத்த துளைப்பொன் எழுகழஞ்சரை" (Page 234 of Do, Do) என்னும் இச் சாசனங்களால் நன்குணர்க.

இனி, அப்பொன், புடமிட்டு வெட்டி யுருக்கித் தூய்மை செய்யப்பெற்றுப், பரிசோதகர், நிறையும் உரையும் குன்றாத நீர்மையதென ஆராய்ந்து கண்டமைக் கறிகுறியாக இட்ட இலச்சினையாகிய துளையுடன் வழங்கியது பற்றித் துளைப்பொன் எனக் காரணக்குறி பெறுவதாயிற்று. அவ்வழக்கினை, "ஸ்வஸ்திஸ்ரீ|| சாலைக் கலமறுத்து நொளம்பபாடியும் வெங்கைநாடும் தடிகைபாடியும் கொண்ட கோ விராஜராஜ ராஜகேஸரி வம்மற்கு யாண்டு ௰௪ ஆவது...............இறையிலியாக விற்று விலையாவணம் செய்து குடுத்துக் கொள்வதான விலைப்பொருள் பொன் சுட்டு வேட்டிச் சூட்டுக்கு தந்து காச்சாற்றிக் கைசெய்து கழஞ்சிற் போத்த துளைப்பொன் உரையும் துளையும் வழுவாதது" திருநாகேச்சரத்து நாகநாதச்வாமி ஆலயத்தின் நடுவிமானத்து வடசுவரில் வெட்டப்பெற்றுள்ள இச் சாசனப்பகுதியும்,

"It was evidently a practice to allow the currency of gold in any transaction only after putting it to test by special officers appointed for the purpose. It may therefore be presumed that **tulaip-**

pon represented gold that had passed through this test. It is not unlikely also that an impression was always left on such gold as a hall-mark" என்னும் தென்னிந்திய சாசன் மூன்றாந்தொகுதியின் மூன்றாம் பகுதி 229-ஆம் பக்கத்திலுள்ள 5-ஆம் குறிப்பும் வலியுறுத்து நிற்றல் காண்க.

இனி, இதுகாறும் கூறியவாற்றால், பெரிய புராணத்தில் இடங்கழி நாயனார், புகழ்ச்சோழ நாயனார் புராணங்களிற் கூறப்பட்டுள்ள பொன், துளைப்பொன்னே யல்லாது துலைப்பொன் அன்று எனவும், அது, கொங்கிற் பொன் போல்வதோர் மாற்றுயர்ந்த பொன் எனவும், பொற்காசுகளைச் சோதனை காணுதற் கேற்படுத்தப்பட்டவர்கள், தூய்மையும் உரைகுறைவின்மையும் தேர்ந்ததற் கறிகுறியாக இட்ட இலச்சினையாகிய துளைபெற்றிருந்தமையின், அஃது இப்பெயர் பெறுவதாயிற்று எனவும் நாம் தெளிந்து கோடற்குத் துணைநின்றன கல்வெட்டுக்களேயாதலின், அவற்றின் ஆராய்ச்சி தமிழாராய்ச்சிக்கு எத்துணை இன்றியமையாததென் றுய்த்துணர்ந்து கொள்க.

எல். உலகநாதபிள்ளை.

தமிழ்விடு தூதும் மொழிவரலாறும்.

'தமிழ்விடுதூது' என்னும் செய்யுள் அமிர்தகவி அமிர்தனார் இயற்றியது. இவ்வாசிரியர்,

"சொன்னயம் பொருணயம் தோன்றுபல் செய்யுளுந்
துகளற நொடியிற் சொல்லு நிபுணன்;
இகலில்பல் புலவர்க் கியைந்த நண்பன்;
இலக்கண மிலக்கிய முலப்பறக் கற்றோன்;
நன்மா ணவர்க்கு நல்லறிவு கொளுத்த
வின்மாண் பென்று மியல்படச் செய்யுள்
இலக்கண மெளிய நடையி னியற்றியோன்;
நலக்குறு நற்குண நல்லொழுக் குடையோன்."

எனத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதன் மாணாக்கராகிய க. சுப்பராயச் செட்டியாரவர்களாலும்,

"...............................ஒண்மைசால் கவிஞன்;
உயர்குடிப் பிறப்போ டொத்த நடையினன்;
செந்தமிழ் நூற்றுறை யந்தங் கண்டோன்;
சமய நெறிபல வமைய வாய்ந்தோன்;
சேரலத் தலத்தும் திரிசிர புரத்தும்
ஆங்கி லேய மோங்குகழ கங்களில்
தலைமைப் புலமை நடாத்துஞ் சதுரன்;
நிமிர்கடற் புவிபுகழ் நிலவும்
அமிர்தம் எனும்பெய ரமைகனம யோனே."

என உறையூர் மகாவித்துவான் முத்துவீரமுனிவரவர்களாலும் சிறப்பித்துக் கூறப்பெற்றவர். தமிழ்மொழியே யன்றி, தெலுங்கு, மலையாளம், இந்தி, வடமொழி, ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். அன்றியும், மேனாட்டுப் புலவரை யொப்ப ஆராய்ச்சி முறைகளிலும் தெளிந்தவர். தமது ஓராஞ்செல்லா உள்ளத்தால் ஓர்ந்துணர்ந்த மொழிவரலாற்றுமுறையைத் தனிச் சுவடியாகத் தமிழுலகிற்கு உதவ நெடுநாள் உன்னியிருந்தார். எனினும், அந்நன்னோக்கம் உடற்பாங்கின்மையாலும், கல்லூரித்தொழின் மிகையாலும் முடிவுபெறாதாயிற்று. ஆகவே, தமக் கிறுதிக்காலம் அண்மைத்தாதலை யுணர்ந்து, இளமை தொட்டுத் தம்மோடு இடைவிடாது பயின்று உணர்ச்சியொத்த உயிர்நட்புரிமையாளராகிய தி. கோ. இரத்தினம்பிள்ளையவர்களுக்கும் தமக்கு முண்டாயிருந்த நட்புரிமைத் திறத்தை உலகில் நிலைபெறுத்தற் பொருட்டால், இத் 'தமிழ்விடுதூது' என்னுஞ் செய்யுளைச் செய்து முடித்தார். ஆயினும், அத்தூது அவர்காலத்தே வெளிவரும் ஆகூழைப் பெறாமல், அவர்க்குப்பின் சிலயாண்டு கழிந்து வெளிவந்தது. அதன் முதற்பதிப்புப் பிரதிகளனைத்தும் சில திங்களிலே செலவாகி விட்டமையால், இரண்டாம்முறை பதிக்கும் முயற்சி நடைபெறுகின்றது. அதுவும் விரைவில் வெளிவரும்.

இவ்வாசிரியர் "கல்விக்குக் காரணமாகிய தெய்வத்தை, தமிழ் என உருவகப்படுத்தி, அதனைப் "பாங்கி என்னும் பெரு ருட்கினமாகிய கைத்தா'' யெனக் கொண்டு தூதுப் பொருளாக் கித் தமது நண்பர்பாற் றூதுவிடுகின்றார். விடுகின்றழி, கல் வித்தெய்வத்தின் தன்மைகூறிப் பின், மொழியே அதன் உருவ மாம் என்றார். அவ்வுருவந்தான் இயற்கை, செயற்கை, கற்பனை என மூவகையாம்.

"இயற்கை செயற்கையே
இன்பாருங் கற்பனையே என்னுமூ—வின்பாலாம்
உன்னற் றிருமேனி என்பர்"

எனவே, மொழியும் இயற்கைமொழி, செயற்கை மொழி, கற்பனைமொழி என மூவகையாம். அவற்றுள், இயற்கைமொழி யாவது, ஒருவரால் (அன்றிப் பலரால்) யாதாமொரு காரணம் பற்றிச் செய்யாதது: மக்கள் படைப்புக் காலந்தொட்டு அறிவு வளர்தலினால், தாம் காணும் பொருள்களுக்குக் குறியீடுகள் செய்துகொண்டு, தம்முடைய நாட்டில் தோன்று தொட்டுப் பெருவழக்காக வழங்கிவருவது. பலவ[illegible] நிலவளப்பாட்டும், இசைப்பாட்டும், சந்தப்பாட்டும், அணிச[illegible]சய்யுளும், இலக்கிய இலக்கண நூல்களும் மிகுந்துள்ளது: எ[illegible]விதத்தாலும் குறை வில்லது. இந்த இயல்புகளெல்லாம் ஒருங்[illegible] அமைந்து நிறைந் துள்ளது கன்னித்தமிழ்.

" முன்ன ரியற்கை மொழியென்றல்—[illegible]ன்னை
ஒருவ ரியற்று தயர்படைப்பு நாளால்
வருமக்கள் எப்பொருட்கும் வாய்ப்பா[illegible]ருப்படுத்தத்
தன்னிலத்துத் தோன்றுதொட்டுத் த[illegible]ன பெருவழக்காப்
பன்னிலப்பாட் டும்மியலும் [illegible]ண்சு[illegible]பு—மின்னவெழின்
மன்னியெவ் வாற்றும் வடுவிகந்த தெ[illegible]ரது
கன்னித் தமிழேயோ காரணியே!—

இத்தமிழ்மொழியைக் கல்வித்தெய்வத்தின் முதலுருவாகக் கொண்டமையால் அகனே அறிஞர்கள் "அன்னை தமிழணங்கு" என்றார்கள்.

"உன்னரிய
முன்னை யுருவாகக் கொண்டமையான் முன்னியதை
அன்னை தமிழணங்கென் றூரறிஞர்—"

ஒரு கூட்டமாயிருந்த தமிழரிற் சிலர் பிரிந்துபோய் வேற்று நாடுகளிற் குடியேறியபோது, அவர்களுடைய பேச்சுமொழி சிறிது மாறுபடவே, அவர்கள் முன் சேர்ந்திருந்தபோது பேச்சு வழக்கிலிருந்த சொற்களின் ஈற்றிலும், இடையிலும், முதலிலும் இசைக்கொலிக்கும் இயல்புடைய வேற்றொலி யெழுத்துக்களையும், இடைச்சொல்லுருபுகளையும் சேர்த்து, பயன்படும் வேறு பொருட்பெயர் முதலிய சொற்களையும் உண்டாக்கிக் கொண்டு, தங்களுடைய குழூஉக்குள்ளே வழங்கி, முன் தாம் பேசிய மொழியின் வேறாய் வழங்கிக்கொண்டனர். அத்தகைய மொழி (பாஷை)கள் குடகம், தெலுங்கம், கன்னடம், துளுவம் முதலிய மொழிகளாம். இவைகள் செயற்கைமொழிகளாம்.

"இயற்கைமொழி யிற்று மிடையும் தலையும்
மயக்கவொலித் தும்முறுப்பும் மாட்டிப்—பயப்படவே
வேறுசில சொல்லும் விளைவித்து மல்குவித்துக்
கூறுபடுங் குழூஉவிற் குள்வழங்கி—வீறியொரு
நாட்டில் வழங்கியந்த நாட்டுச்சொல் லாகுமது
காட்டுகு டகந்தெலுங்கங் கன்னடமுன்—னீட்டு
துளுவ முதலியன வென்பரால் றூக்கின்
அளவியு லாபோலியுரு வாமல்—".

(தொடரும்)

அ. சிவப்பிரகாசர்.

௨

தெய்வப் புலமை.

ஆன்றோரால் நம் தமிழ்மொழியில் தெய்வப்புலமை வாய்ந்தவரென்று சிறப்பித்துக் கூறப்படுபவர் பலர். அவர்கள் முற்காலத்து விளங்கிய நற்கீரர், வள்ளுவர் போன்றவரும், தேவார திருவாசகம், திருவாய்மொழி யருளிச்செய்த நாயன்மாரும், ஆழ்வாராதியரும், பிற்காலத்திய கம்பர், அருணகிரி முதலியோரும் இன்னும் பலருமாவர். இத்தகைய சிறப்புற்ற புலவர் வடமொழியினும், பிறமொழியினும் பலர் உளர். எம்மொழியில் இத்தகைய புலவர் மிகுந்து இலங்குகின்றனரோ அம்மொழி தெய்விகத் தன்மையுடையதென்று போற்றப்படுவதற்குரித்தாகும். அம்மொழியே தெய்வமணம் கமழப்பெற்றதாகும்.

புலமை யென்பது ஆறறிவுற்ற மக்களறிவிற் றலையாயதோர் தன்மையை யுணர்த்தும். ஐப்புல வுணர்ச்சியாற் பற்றப்படும் உலகத்தோற்றங்களுக்கு இடமாயும் ஆகரவாயுமுள்ளது ஆறுவது தத்துவமாகிய மனமென்பது. இதுவே உள்ளக்காட்சி நிகழுமிடம். இது தெளிவுற்ற பக்குவமுதிர்ச்சியில் மலர்ச்சியடைந்து, எவ்விதத்தோற்றத்தையும் தன்வயத்தடக்கி அதைச் சித்திரித்து அதனால் தானுமின்புற்றுப் பிறர்க்கும் மொழிவாயிலான் விளக்கி இன்புறுத்துகின்றது. உலகத்து நிகழும் இன்பத்தையோ துன்பத்தையோ பாராட்டும் ஆற்றலின் மிகுதிப்பாடும், அன்புப் பெருக்கமும், ஆசறு காட்சியென்ற மயக்கமில் உணர்ச்சியும், இத்தசைக்கண் பொதுவாய்த் தோன்றுவன. ஆனல் இவை எப்பொழுதும், எல்லாரிடத்தும் ஒரு தன்மை யுடையனவாயின்றித் தாரதம்மியமுற்று நிகழும். இச்சக்தி ஒருவர்க்கு மிகுந்தும் ஒருவர்க்குக் குறைந்தும், ஒருவர்க்கே ஒரு சமயத்தில் மிக்கு விளங்கியும், ஒரு சமயத்தில் சிறிது மழுங்கியுங் காணும். உள்ளக் காட்சிக்குத் தகுந்த ஏற்புடையவாய்ச் சொன்னயம், சந்தம், அலங்காரம் ஆகிய இவை மேம்படுவனவாம். உயிரும் உடம்பும்

போன்ற இயைபுடையன உள்ளத்துணர்ச்சியுஞ் சொற்றிறமும் என்க. உயிரின் தோற்றரவுக்குத் தக்கவாறு உடல் இயையு மாறுபோல, வாக்கு மனத்தின் பக்குவத்திற் கியைந்தவாறு எழுவதாகலின், உள்ளத்துணர்ச்சி சிறக்காவிடத்து வலிந்துசொன்ன யம் பட மொழிய நினைத்தல், மூலையிலாள் பெண்மை நயந்தசெ ன்ற ஆன்றோராற் கூறப்பட்டதொக்கும். இவ்வாற்றாற் கூறப் பட்ட புலமையிலக்கணமுடையோர் படைத்தற்றொழிலையுடைய அயனை ஒப்பரென்ப; அவரும் தம்மனத்தோற்றத்துக்கு உருவளித்து அவற்றை உலகத்தில் நிலைக்கச்செய்தலின். அயனினும் அவர் சிறந்தாரென்பர் ஓர் புலவர்; அயன் படைப்பன போன் றில்லாது புலவர் படைப்பன என்றும் பொன்றாத தன்மையுள்ள வாதலின்.

ஒரு வாற்றான் நினைக்குமிடத்து எத்தகைய புலமையும் தெய் வீக சக்தியின்பாற் பட்டதென்றே சொல்லலாம். மனம் ஒரு வழிப்பட்டுப் பரவச முற்ற காலத்திற்றான் கவித்துவம் முதலியன சிறக்கின்றன. எந்தப் புலவற்கும் கவி செய்யுங் காலத்தில் தன் வசமற்ற உணர்ச்சியே மிகுந்துநிற்பது. முற்றும் தன்வசமழிந்து எல்லையிலின்பமயமாயிருத்தலே தெய்வீக அநுபவமாகும்.

> "வான்கெட்டு மாருதமாய்ந் தழனீர் மண்கெடினும்
> தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
> ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் னுள்ளமும் [போய்
> நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

என்ற ஆன்றோர் வாக்கு உய்த்துணர்க. இந்நிலை யறிந்தோரே முற்றுமறிவர் எனப்படுவர். அவரது புலமையே தெய்வப் புலமை. அவரது மொழியே வேதம். அவ்வேதம் என்று மழியாத் தன்மைத்து. அவர்க்கே சொல்லும் பொருளுமொக்கும். அவர் வாக்கே அருட்பாவாகும். எல்லா வுலகத்தையு மியக்கும் நாத வொலியே அவர்க்குத்தாயகம். இரவும் பகலும், உருவும் அருவும், இருளும் ஒளியுமற்ற வெளியே அவர்க்கிருப்பிடம். சங்க நூலாகிய புறப்பொருள் வெண்பா மாலையில், புலவரேத்தும்

புத்தேணாடு என்று இது குறிப்பிடப் பட்டிருப்பது பின்வருஞ் செய்யுளா னுணரப்படும்.

“பொய்யில் புலவர் புரிந்துறையு மேலுலகம்
ஐயமொன் றின்றி யறிந்துரைப்பின் — வெய்ய
பகலின் றிரவின்று பற்றின்று தற்றின்று
இகலின் றிளிவரவு மின்று ”.

இத்தகைய தெய்வப் புலமை வாய்ந்தோர் மொழியின் மய மாயிருந்து பயிலுவோர்க்கு அப்புலவோர் அடைந்த வீடே பயனும். அவர் அன்பிற் குழைந்து இவரும் ஆநந்தப் பேற்றினைத் துய்ப்ப ரென்க.

அன்புவழிச் சென்று எதோவோர் தெய்வீகவுருவில் ஈடுபட்டு, அதனை யிடையறாது பற்றித்தன்னை முற்றிலும் அதன் மயமாக்கி, உலகமனைத்தையும் அதன்வழிக் கண்டு இன்புற்று, அதுவே தானாய்த் தானே யதுவாய் அதனோடு கூடியும் முயங்கியும் ஊடியும் உணர்ந்தும் இவ்வாறு பாவிக்கும் நிலையினின்று பாடும் பாக்கள் அருட்பா வெனப்படும். அன்பின் குழவி அருள். அதனின்று பிறக்குஞ் சொல் அருட்பா. அருள் என்பது அகத்து நிகழும் அன்புணர்ச்சியைப் புறத்தாக்கியவழி அவ்வன்பிற்கு உருவாய்த் திகழுமொளி. இவ்வருள்நிலை இருவினையொப்பு மலபரிபாக காலத்திற் றோன்றுமென்ப சமய நூலுடையோர். அவ்வருளொளி பற்றிச் சிவன் பதியை யடைய முயல்வது முதற் கொண்டு, அதுவே தானே யாகும் வரையிலுள்ள அநுபவமெல்லாம் கூறுங்கால், அவை அருட்பாவின் திறப்படும். தூய்மையும் பாச நீங்கிய பக்குவமு முடைய உள்ளத்திலிருந்து எழுந்த வாக்கு அனைத்தும் தெய்வமணமுடைய வாகையாலும், அவை பரவச முற்ற பக்தர் வாய்ப்பிறந்தனவாகையாலும் அவற்றை உலகம் மிகவும் போற்றும்; அவ்வருளுற்றோர் தெய்வம் அடியெடுத்தருளப் பாடினர் என்றும் கூறும். அதுவும் மேற்கூறிய வாற்றானமையுமென்பது காண்க.

S. நடேசபிள்ளை, **B. A., B. L.**

உ

உண்மை யுரைத்தல்.

உண்மையுரைத்தல் உள்ளதை உள்ளதாகவும், இல்லதை இல்லதாகவுங்கூறுதலாம். உண்மை, மெய்ம்மை, வாய்மை, சத்தியம், என்பன ஒரு பொருட் கிளவி. அவ்வுண்மை பாரமார்த்திகம், வியாவகாரிகம் என இருதிறப்படும். அவற்றுள், பாரமார்த்திகமாவது பரம்பொருள் ஒருவர், என்றுமுள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாவடிவினர் என்றற் றொடக்கத்தவாம். வியாவ காரிகமாவது யான் செய்தேன், பிறர் செய்தார் என்றற் றொடக்கத்தவாம். உண்மை யுரைத்தல் மக்கட் கின்றியமையாதது. நல்லொழுக்கங்களுட் டலைசிறந்தது. நாம் அவ்வொன்றைக் கைப்பற்றின், நம்முயற்சியின்றி இயல்பாகவே, ஏனை நல்லொழுக்கம் யாவும் நம்பால் நிகழும். அஃதொன் றின்றேல், அவையும் இலவாம். உலகில் எவருந் தமக்குத் தீமை பயக்க விழையார். நன்மையே நல்க விழைவர். எவர்க்கும் உறுதிபயப்பது உண்மையே. ஒவ்வொருவரும் நன்மை யடைதற்குச் சிறந்த எது உண்மை யுரைத்தலாம். உண்மையினால் இவ்வுலக நன்மை மட்டுமன்றி மேலுலக வின்பமுங்கிட்டும். உண்மையின் சிறப்பை என்னென்றுரைப்பது ?

“ மெய்யே சிறந்த பெருநலமாம் மெய்யே யெவையும் நிலைநிறுத்தும்
மெய்யால் அழல்கால் கதிர்பிறவுந் தத்தந் தொழிலின் [விலகாவாம்
மெய்யே யெவைக்கும் இருப்பிடமாம் மெய்யே மெய்யே [சிவமாகும்
மெய்யே பிரம பதமுமெனப் புகன்றான் வினைதீர் காசிபனே”

எனக் காஞ்சிப்புராணங் கூறும்.

இத்தகைச் சிறப்புவாய்ந்த உண்மை இஞ்ஞான்று மிக அருகி வருகின்றது. “ உண்மையே வெற்றிதரும் ” எனும் ஆன்றோர் மொழி பொய்யாமாறும், பொய்யாலன்றி உலகத்து எவ்

விதபயனும் அடைதற் கரிதெனப் பலர்க்குத் தோன்றுமாறும் அத்துணை தூரம் மெய்குன்றப், பொய் தலைதூக்கிநிற்கக் காண்கின்றோம். ஆயினும், உண்மைநிலை என்றும் அழிவுறாது. பல்லாண்டு முதிர்ந்தவோர் பனைமரத்தருகே, மழைக்காலத் தங்குரித்துச் சொற்பதினத்து அம்மரத்துப் படர்ந்து, அதன் றலைமீதேறி யகங்கரித்துநின்று சில திங்களுள் மட்கி மண்ணுப் போமொரு சுரைக்கொடி வாழ்க்கை போன்றதே பொய்ம்மைநிலை. அதைப் பின்பற்றி நடப்பார் வாழ்க்கையும் அத்தகைத்தே. உண்மை ஓரமையம் மறைந்திருக்கலாம். ஆயினும், பின்னொருகால் அது வெளிப்பட்டு ஒளிரக்கூடும். உண்மை கடைப்பிடித்தலே யுயர்பெரும் வாழ்க்கை. அதினின்று நாம் அதிதூரம் விலகிவிட்டபடியாற்றான், அதன்பயனுப் பலதுன்பமடைந்து வருகின்றோம். அது கைக்கோட்டன் முதலில் அரிதாத் தோன்றினும், பாராட்டாது உறுதியாய் நின்று முயலின், அது மிக எளிதிற் கைகூடி இன்பளிக்கும் என்பது ஒருதலை: சிலர் ஒருகால் தவறியொரு பொய் கூறிவிட்டால், எவ்விதமோ பொய் புகன்றுவிட்டோம்; ஒரு பொய் கூறினாலென், ஒன்பது பொய் கூறினாலென், பொய்யர் பொய்யர்தாமே என்றெண்ணி யெடுத்தவற்றிற் கெல்லாம் பொய்புகலத் துணிகின்றனர். அந்தோ! இவர்களறிவு இருந்தவாறென்னை? ஒருபோதுந் தவறாதிருத்தல் கடவுட்டன்மைவாய்ந்த பெரியோர்க் குரித்து. அவ்வாறிருத்தல் கடவுளாற்றலாம் வரம்பிலாற்றற்கு ஓரருஞ் செயலன்று. ஆகலின், அது புகழத்தக்கதன்று. பின்னரோ, மக்கட்டன்மை வாய்ந்தவர் முக்குண வயத்தரானமையின், ஒரு போதுந் தவறாதிருத்தல் சாலாது. ஆனால், தவறிய ஞான்றெல்லாம் அத்தவறுதலை யுணர்ந்து திருத்திக்கொள்வதே அவர் கடனும். அதனாலவர்க்குச் சிறிதும் இழிவின்றிப் புகழேயுண்டாம்.

நாமிதுவரை யுண்மையினின்றும் விலகிவாழ்ந்திருக்கலாம். ஆனால், இனி நல்வழிச் சேறற் கஃதோர் தடையன்று. உண்மையே யுலகில் தேடற்குரிய அருஞ்செல்வம். அஃதின்றிச் செய்யும் எத்தொழிலும் வீணே. ஆனாற், சில வியாபாரிகள் முனைந்து

நின்று 'எத்தொழிலும் வீண்' என்று எவ்வாறு கூறினீர்? பொய்யின்றி வியாபாரம் நடைபெறாதாகலின், எத்தொழிலும் வீணென்பது வீணே யெனக் கூறலாமெனின், அற்றன்று; வியாபாரம் நிலைத்தற் கின்றியமையா ஏது சொல்நாணயமே. அஃதாவதுண்மையே. சொல் நாணயமின்றி வியாபாரம் நடக்காதென்பதை யொருசிறு கதையான் விளக்குவன். முன்னொருகால் ஓரூரிற் கந்தன், நாகனெனு மிருசிறுவர் கல்லூரி யொன்றிற் கல்விபயின்றனர். வறுமை மிகுதியால் அவரதினின்று நீங்கித் தம்மாட்டிருந்த சில அணாக்களைக்கொண்டு மூலாம்பழம் வாங்கி விற்றுவந்தனர். கந்தன் தான்கற்றவாறு நேர்மையா யொழுகவெண்ணித், தன்பால் வாங்குபவர் உள்ளழுகியவற்றை நல்ல பழமாக் கருதி யெடுக்குங்காற் றடுத்து, அவை சிறிது உள்ளழுகியவை, அவற்றிற்கு விலை குறைத்துக் கொடுத்தாற் போதும் என வுண்மை யுரைத்து விற்றான். இதுகண்ட நாகன் கந்தனைவிளித்து, உனைப்போற் பித்தனுலகிலில்லை. வியாபாரத்தில் உண்மையுரைக்கலாமா? உரைப்பின் இருநாட்களுண் முதலிழந்து இரக்கவேண்டி வருமன்றோ? என்றான். அஃதுமன்றி, ஒரு வாரத்திற்குள் தனக்குப் பெருகிய தனத்தைக் காட்டியுங் கந்தனைப் பரிகசித்தான். ஆனால், கந்தன் உண்மைநிலைநின்றுந் தவறானப் பிச்சைபுகினும் பொய்புகலேன் என வுறுதி கொண்டனன். ஒரு வாரத்திற்குள் வாடிக்கைக்காரர்கள் நாகனது வஞ்சத்தையும், கந்தனதுண்மையையுமறிந்து, நாகனிடஞ்செல்லாது கந்தனிடமே சென்று, அவனிடத்தில்லாதவற்றிற்கும் முன்பணங்கொடுத்து வாங்கிவரச் செய்தார்கள். கந்தனோ வாங்கினவிலை இன்னது, கொணர்ந்த செலவு இன்னது என வுண்மைகூறி, மிகச்சிறிய இலாபம் வைத்து விற்றான். இவ்விதம் வாடிக்கைக்காரர்கள் மிக, பெரிய வியாபாரியும் செல்வாக்கு முடையனானான். ஆனால், நாகனோ வாங்குபவரின்மையான் வியாபாரமற்றுப் பிச்சைக்காரனானான். ஆகலின், உண்மை கடைப்பிடித்தல் வியாபார முதலிய எத்தொழிற்கு மின்றியமையாத தென்ப தொருதலை.

(தொடரும்) திருநீலகண்டர்.